
# எனது சிக்ஷா குருவும் பிரிய நண்பரும்

(My Siksha-guru and Priya-bandhu)





## பிரிக்க முடியாத ஆத்ம பந்தம்

யுக ஆச்சார்யர் நித்ய லீல ப்ரவிஷ்ட ஓம் விஷ்ணு பாத அஷ்டோத்தர
ஸ்ரீ ஸ்ரீமத் பக்தி வேதாந்த நாராயண கோஸ்வாமி மஹாராஜா

© Gaudiya Vedanta Publications – Some rights reserved.
Books and Content licensed under CC BY-ND 3.0
Permissions: purebhakti.com/pluslicense | gvp.contactus@gmail.com



“ஸ்ரீராதா தாமோதரர் கோயிலில் அவர் சப்பாத்திகளை உருட்டி தருவார். நான் அவற்றை நெருப்பில் வாட்டி எடுப்பேன். பிறகு நாங்கள் அவற்றை ஸ்ரீராதா கிருஷ்ணருக்கு நெய்வேத்யம் செய்து பிரசாதமாக உண்போம்.”

# எனது சிக்ஷா குருவும் பிரிய நண்பரும்

(My Siksha-guru and Priya-bandhu)

**யுக ஆச்சார்யார் ஸ்ரீல பக்தி வேதாந்த**
**நாராயண கோஸ்வாமி மகராஜா**

ஒன்றாம் பதிப்பு
January 10, 2026, *Version 1.3*

**ஒரே இறைவன்!, ஜாதியில்லை, நிறமில்லை, மதமில்லை.**

ஒரே மந்திரம்
**ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண**
**கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே**
**ஹரே ராம ஹரே ராம**
**ராம ராம ஹரே ஹரே**

© Gaudiya Vedanta Publications – Some rights reserved.
Books and Content licensed under CC BY-ND 3.0
Permissions: purebhakti.com/pluslicense |
gvp.contactus@gmail.com

# பொருளடக்கம்


முன்னுரை.......................................................................5

அத்தியாயம் 1 - எங்களுடைய முதல் வருடங்கள்...............11

1.1. ஸ்ரீல பக்தி பிரஜ்ஞான கேசவ கோஸ்வாமி மகாராஜாவுடன் தொடர்பு..........................................11

1.2. கௌடிய வேதாந்த சமிதியை நிறுவுதல்.................13

1.3. எங்கள் முதல் சந்திப்பு...........................................14

1.4. தலையங்க சேவை................................................16

1.5. ஜான்ஸி.................................................................18

1.6. ஸ்ரீ கேசவாஜி கௌடிய மடத்தில் வாசம்.................20

1.7. சன்னியாசம் ஏற்றுக்கொள்ளுதல்...........................24

1.8. ஸ்ரீ ராதா - தாமோதரர் கோவிலில்.........................28

1.9. அமெரிக்கா செல்ல தயார், புறப்படுதல்..................29

1.10. இந்தியா திரும்புதல்............................................31

1.11. இந்தியாவில் பிரச்சாரம் செய்தல்........................34

2. அத்தியாயம் 2 - ஸ்ரீல பிரபுபாதாவின் மறைவு லீலை.......38

2.1. ஸ்ரீல பிரபுபாதாவின் கோவர்த்தனம் செல்ல ஆசை. 38

2.2. அவரது கடைசி நாட்களில் அவரை சந்தித்தல்.......41

2.3. அவரது திவ்யமான புறப்பாடு.................................48

2.4. மாதூர்ய-ரசத்தில்..................................................50

3. அத்தியாயம் 3 - எனது செய்தி அவருடையது.................52

4. இறுதி குறிப்புகள்..........................................................55

1 ரேஸ் ஆஃப் தி ஹார்மோனிஸ்ட்டில் இருந்து...........55

2 "அவர்களின் நீடித்த உறவு" -இலிருந்து...................56

3 ஸ்ரீல பிரபுபாதாவின் கடிதம்....................................56

4 ‘சுவாமிஜி’ என்ற வார்த்தையைப் பற்றிய குறிப்பு:........57

5 ஸ்ரீல பிரபுபாதாவின் அமெரிக்காவிலிருந்து கடிதம்: 58

6 "அவர்களின் நீடித்த உறவு" -இலிருந்து...................58

# முன்னுரை

இந்த கலியுகத்தில், கலி புருஷனின் ஆதிக்கத்தால், பல உண்மைகள் மறைக்கப்படுகின்றன அல்லது திரித்துக் கூறப்படுகின்றன. கலியுகத்தில், அனைத்து லௌகீக மதங்களும் அமைப்புகளும் மக்களை ஏமாற்றுகின்றன என்று ஸ்ரீமத் பாகவதம் கூறுகிறது. இருப்பினும், அரசியல் மனப்பான்மையிலிருந்து விலகி, பணம் புகழ் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசையிலிருந்து விடுபட்டு சுத்தமான பக்தியில் மட்டுமே விருப்பம் இருப்பவர்களுக்கு, உண்மை நிச்சயமாகக் கிடைக்கும்.

பொதுமக்களில் பெரும்பாலானோர் அறியாமல் இருக்கும் ஒரு உண்மை, ஸ்ரீல சுவாமி மகாராஜாவுக்கும் (ஸ்ரீல பிரபுபாதருக்கும்), ஸ்ரீல நாராயண கோஸ்வாமி மகாராஜாவுக்கும் இடையிலான நெருங்கிய தெய்வீக உறவைப் பற்றியது.

அவர்களது உறவு நித்தியமானது. எனவே அவர்கள் இந்த பூமியில் தோன்றிய போது அது சுயமாக வெளிப்பட்டது. ஸ்ரீல பிரபுபாதரும் ஸ்ரீல நாராயண கோஸ்வாமி மகாராஜாவும் பிரிக்க முடியாத இறை சகோதரர்கள் (god-brothers). அவர்களது உறவு, ஆழ்ந்த பரஸ்பர மரியாதை, பாசம் மற்றும் தங்கள் குருதேவர் மற்றும் ஸ்ரீ சைதன்ய மகாபிரபுவின் பணிக்கான விசுவாசம் ஆகிய அனைத்து ஆன்மீக சேவைகளில் வேரூன்றியிருந்தது.

இருவரும் ஸ்ரீல பக்தி விஞ்ஞான கேசவ கோஸ்வாமி மகாராஜாவின் நெருங்கிய சீடர்கள். கௌடிய மடத்தின் நிறுவனரான பக்தி சித்தாந்த சரஸ்வதி தாகூர், ஸ்ரீல பிரபுபாதரின் தீட்சா குரு என்பது அனைவரும் அறிந்தது. ஆனால் ஸ்ரீல பக்தி விஞ்ஞான கேசவ கோஸ்வாமி மகாராஜா ஸ்ரீல பிரபுபாதருக்கும் ஸ்ரீல நாராயண கோஸ்வாமி மகாராஜாவுக்கும் சன்னியாச குரு என்பதை சிலர் அறியாமலிருக்கலாம்.

மேற்கத்திய நாடுகளில் மட்டுமல்ல எங்கே பிரச்சாரம் செய்ய வேண்டுமானாலும் சன்னியாசம் எடுத்தால் மட்டுமே அது சக்தியுள்ளதாக இருக்கும் என்பது சாஸ்திரம். எனவே ஸ்ரீல நாராயண கோஸ்வாமி மகாராஜா, தன் சிக்ஷ குருவான ஸ்ரீல பிரபுபாதர் சன்னியாசம் எடுக்க வேண்டும் என்று விரும்பினார். அதன் படி, ஸ்ரீல பிரபுபாதர், ஸ்ரீல பக்தி விஞ்ஞான கேசவ கோஸ்வாமி மகாராஜாவிடம் மதுராவிலிருக்கும் கேசவாஜி கௌடிய மடத்தில் சன்னியாசம் எடுத்தார். ஸ்ரீல நாராயண கோஸ்வாமி மகாராஜா வேண்டிய அனைத்தையும் செய்தார்.

கௌடிய மடத்தின் நிறுவனரான ஸ்ரீல பக்தி சித்தாந்த சரஸ்வதி தாகூர், ஸ்ரீல பிரபுபாதரை மேற்கத்திய நாடுகளில் பிரசாரம் செய்ய அனுப்பியபோது, அவர் கௌடிய மடத்திலிருந்து வேறுபடும் இன்னொரு சுதந்திரமான அமைப்பைத் தொடங்குமாறு உத்தரவிடவில்லை. எனவே ஸ்ரீல பிரபுபாதர் அமெரிக்கா சென்றபோது, ஸ்ரீல ஜீவ கோஸ்வாமியால் நிறுவப்பட்டு, பின்னர் 1919 ஆம் ஆண்டு பிப்ரவரி 5 ஆம் தேதி ஸ்ரீல பக்தி சித்தாந்த சரஸ்வதி தாகூரால் 'கௌடிய மடம்' என்று மீண்டும் நிறுவப்பட்ட அதே 'விஷ்வ வைஷ்ணவ ராஜ சபை' க்கு ஒரு எளிமையான ஆங்கில மொழிபெயர்ப்புப் பெயரை வழங்கவே விரும்பினார். எனவே, 'International Society for Krishna Consciousness' என்பது சமஸ்கிருதத்தில் 'விஷ்வ வைஷ்ணவ ராஜ சபை' என்பதன் மையப் பொருளாகும். எனவே இதற்கு கௌடிய மடமே மூலமாகும்.

ஸ்ரீல பிரபுபாதர் தனது மேற்கத்திய சீடர்களுக்கு அவருடன் சேர்ந்து உதவுமாறு ஸ்ரீல நாராயண மகாராஜாவிடம் கோரியபோது, ஸ்ரீல நாராயண மகாராஜா தனது குரு பாதபத்ம ஸ்ரீல பக்தி பிரக்ஞான கேசவ கோஸ்வாமி மகாராஜாவுக்கு சேவை செய்ய வேண்டியிருந்தது. அதனால் ஸ்ரீல நாராயண மகாராஜா, ஸ்ரீல பிரபுபாதருக்கு பின்னால் தான் உதவ முடிந்தது.

ஸ்ரீல நாராயண கோஸ்வாமி மகாராஜா, ஸ்ரீல பிரபுபாதரை தனது சிக்ஷா குருவாகவும், ஒரு சக்தி வாய்ந்த சக்தியா-வேச அவதாரமாகவும் போற்றினார். ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் புகழும் கிருஷ்ண நாம சங்கீர்த்தனமும் உலகெங்கிலும் பரவ வேண்டிய தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றிய மாபெரும் முன்னோடி என்று ஸ்ரீல பிரபுபாதரைப் போற்றினார். ஸ்ரீல நாராயண கோஸ்வாமி மகாராஜா ஸ்ரீல பிரபுபாதரின் சேவைக்கு முழு ஆதரவளிப்பதாகவும், வளர்ப்பதாகவும் வாக்கு அளித்தார். உண்மையான ஆன்மிக பக்தி தத்துவங்கள், குரு-தத்துவம் மற்றும் கோஸ்வாமிகளால் நிறுவப்பட்ட அனைத்து பக்தி தத்துவங்களையும் பரப்ப உதவுவதே தனது சேவை என்றும் வாக்கு அளித்தார்.

அந்த மகத்தான உறவின் காரணமாகவே, ஸ்ரீல பிரபுபாதர், ஸ்ரீல நாராயண மகாராஜாவிடம் பிருந்தாவனத்தில் தனக்கு சமாதி வைக்குமாறும், இறுதிச் சடங்குகளைச் செய்யுமாறும் கேட்டுக்கொண்டார். ஸ்ரீல பிரபுபாதர், தன் பக்தர்களுக்கு தூய பக்தியில் முன்னேற உதவுவதாக ஸ்ரீல நாராயண மகாராஜாவிடம் வாக்குறுதி பெற்றார் என்பதும் அறிந்த உண்மை. இவ்வாறு ஸ்ரீல பிரபுபாதரின் பல சீடர்கள், ஸ்ரீல பிரபுபாதரின் மறைவுக்குப் பின்னர் ஸ்ரீல நாராயண கோஸ்வாமி மகாராஜாவின் சிக்ஷா அடைக்கலம் பெற்று, ஸ்ரீல நாராயண மகாராஜாவால் மேலும் எழுதப்பட்ட நூல்களால் பெரும் பயனடைகின்றனர்.

ஸ்ரீல பிரபுபாதருக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காகவே ஸ்ரீல நாராயண மகாராஜா சுமார் 30 முறை உலகைச் சுற்றி வந்து ஏராளமான பக்தர்களுக்கு உதவி செய்தார்.

ஆனால் உண்மை தெரியாமல், சில அமைப்புகள் தங்கள் நிறுவனத்தை சார்ந்த பக்தர்கள் ஸ்ரீல பிரபுபாதரின் நூல்களைத் தவிர வேறு எந்த வைஷ்ணவ நூல்களையும் படிக்கக்கூடாது என்றும், அவர்களுடைய அமைப்புக்கு மட்டுமே ஸ்ரீல பிரபுபாதர் சொந்தமானவர் என்றும் கூறி பக்தர்களை வேண்டுமென்றே கட்டுப்படுத்துகின்றன. அவர்கள் ஸ்ரீல பிரபுபாதருக்கும் ஸ்ரீல நாராயண மகாராஜாவுக்கும் உள்ள ஆன்மீக சம்பந்தத்தை மறைத்து அபராதம் செய்கின்றனர்.

ஸ்ரீல பிரபுபாதர் எந்த ஒரு குறிப்பிட்ட அமைப்புக்கு மட்டும் சொந்தமானவர் அல்ல. பக்தி சித்தாந்த சரஸ்வதி தாக்கூரா ஸ்ரீல பிரபுபாதரை உலகம் முழுவதும் கிருஷ்ண பக்தி பரவ வேண்டும் என்று தான் உத்தரவிட்டாரே தவிர, தனியாக நிறுவனம் அமைத்து அந்த நிறுவனத்துக்கு மட்டுமே ஸ்ரீல பிரபுபாதர் சொந்தமாக இருக்கவேண்டுமென்று கூறவில்லை. பகவான் ஸ்ரீகிருஷ்ணர் எவ்வாறு ஒவ்வொரு ஜீவனுக்கும் சொந்தமோ, அதேபோல் தான் ஸ்ரீல பிரபுபாதரும் அனைத்து மாகான்களும் ஒவ்வொரு ஜீவனுக்கும் சொந்தமானவர்கள். எனவே ஒரு பக்தர் ஒரு பக்தி நிறுவனத்திலிருந்து இன்னொரு கிருஷ்ண பக்தி நிறுவனத்துக்கு சென்றால் அவர் ஸ்ரீல பிரபுபாதரை விட்டு விலகியதாக கூறுவது சரியல்ல.

ஸ்ரீல பிரபுபாதரும் ஸ்ரீல நாராயண மகாராஜாவும் பிரிக்க முடியாத ஆன்மீக சகோதரர்கள். உண்மையில் அவர்கள் இருவரும் ஸ்ரீ ராதா கிருஷ்ணரின் கோலோகத்தில் நெருங்கிய சேவகர்கள். ஸ்ரீ சைதன்யரின் ஆலயத்தைக் கட்டுவதற்காக, முந்தையவர் மேற்கத்திய கலாச்சாரத்தின் காடுகளை வெட்டும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, கிருஷ்ண உணர்வுக்கான அடித்தளத்தை அமைத்தார். அவர் அப்போது எந்த கூரையையும் போட முடியவில்லை, ஏனெனில் அடித்தளம் முதலில் நிறுவப்பட வேண்டும்.

ஆனால் அப்போதிருந்த சூழ்நிலையில் சில இந்திய வைஷ்ணவர்கள் உதவி செய்யவில்லை. மேலும் மேற்கத்திய பக்தர்களை அவர் படிப்படியாக மேல் நிலைக்கு கொண்டு வர வேண்டும் என்று நினைத்தார். எனவே ஆரம்பத்தில் பக்தியில் மேம்பட்ட (senior) வைஷ்ணவர்களுடன் பழக வேண்டாம் என்று அவர் ஒரு சமயம் கூற வேண்டியிருந்தது.

அனால் இதற்காக ஸ்ரீல பிரபுபாதர் பின்னர் கண்ணீருடன் மன்னிப்பு கேட்டதாக நாம் அறிகிறோம். மேலும் நவத்வீபத்திலிருக்கும் போது ஒரு தனி குழுவையே அமைத்து அவர்கள் கௌடிய மட வைஷ்ணவர்களிடம் மன்னிப்பு கேட்டதாக நாம் அறிகிறோம். இது குறித்த கூடுதல் விவரங்களுக்கு தயவு செய்து இந்தப் புத்தகத்தைப் படிக்கவும்.

ஸ்ரீல பிரபுபாதர் அடித்தளம் அமைத்த பிறகு, தனது சீடர்கள் மேலும் முன்னேற உதவி செய்ய வேண்டும் என்று தனது பிரியமான ஸ்ரீல நாராயண மகாராஜாவிடம் கேட்டுக் கொண்டார். இருவருமே உத்தமமான ராக பக்தியை வழங்குவதற்காக வந்திருந்த போதிலும், ஒருவர் முதலில் அடித்தளம் (Foundation) அமைக்க வேண்டியிருந்தது. ஸ்ரீல பிரபுபாதர் முடிக்க நினைத்த அனைத்தையும் அவரால் முடிக்க முடியவில்லை. உதாரணமாக ஸ்ரீமத் பாகவதத்தின் மூலக்கருவான பத்தாவது காண்டத்தைக் கூட அவருக்கு முடிக்க நேரமில்லாமல் போனது. மற்றும் சில புத்தகங்கள் முடிக்கப்படாமல் இருந்தன. ஆனால் பகவானின் இச்சையின் படி, இந்த இரண்டு ராக மார்க்க மகா புருஷர்களின் கூட்டு உதவியால் ஸ்ரீ சைதன்ய மகாபிரபுவின் ராக மார்க்க ஆலயம் நன்றாக கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீல நாராயண மகாராஜா, ஸ்ரீல பிரபுபாதர் தனது புத்தகங்களில் எழுதாத எதையும் புதிதாக சொல்லவோ போதிக்கவோ இல்லை. இருப்பினும், புதிய பக்தர்களுக்குப் புரிய வைப்பதற்காக அவர் சில விஷயங்களைச் சொல்ல வேண்டியிருந்தது. அவ்வாறே, ஜீவன் வைகுண்டத்திலிருந்து வீழ்ச்சியடைய முடியும் என்பது போன்ற சில விஷயங்களை அவர் கூறியிருந்தார். ஆனால் இவற்றை நாம் அவருடைய நூல்களில் ஒரு போதும் காண முடியாது. அவர் எப்போதும் ஆறு கோஸ்வாமிகளின் வழியில் உள்ள படியே எழுதினார். கோபியர்களின் பாவ பக்திதான் மிக உயர்ந்தது என்று ஸ்ரீல பிரபுபாதரும் எழுதியிருந்தார்.

அவர்களுடைய போதனைகள் அனைத்தும் ஒன்றே. ஆனால் இரண்டு நிலைகளில் உள்ளன. ஸ்ரீல பிரபுபாதர் புதிய பக்தர்களிடம் 'ஸ்ரீகிருஷ்ணரே பரம கடவுள்' என்று கூறும்போது, ஸ்ரீல நாராயண மகாராஜா, 'ஆம், அது உண்மைதான், ஆனால் அவர் பரம கடவுள் மட்டுமே என்பதை நீங்கள் மறக்க வேண்டும் என்று சொல்வதற்காகவே நான் வந்திருக்கிறேன்! ஸ்ரீகிருஷ்ணர் நமது அன்பின் வடிவம்' என்று கூறினார். ஒரே உண்மையை அவர்கள் இரண்டு நிலைகளில் கூறினார்கள்.

ஸ்ரீல பிரபுபாதர் ஸ்ரீகேசவாஜி கௌடிய மடத்தில் ஸ்ரீல பக்தி பிரஞ்ஞான கேசவ கோஸ்வாமியிடம் சன்னியாசம் எடுக்கும் போது, ஸ்ரீல நாராயண மகாராஜாவே முன்னின்று அனைத்து

விசயங்களையும் செய்து கொடுத்தார். யக்ஞும் மற்றும் அனைத்து சடங்குகளையும் செய்தவர் ஸ்ரீல நாராயண மகாராஜாவே.

ஸ்ரீல பிரபுபாதர் பிருந்தாவனத்திலிருக்கும் ஸ்ரீ தாமோதர ஆலயத்தில் தங்கியிருந்த போது, ஸ்ரீல நாராயண மகாராஜா அடிக்கடி பார்க்க செல்வார். அப்போது ஸ்ரீல பிரபுபாதர் சப்பாத்தியை உருட்டுவார். ஸ்ரீல நாராயண மகாராஜா அவற்றை நெருப்பில் சுட்டு பின்னர் இருவரும் பகவானுக்கு அளிப்பார்கள். ஒருவர் தயாரித்தார், இன்னொருவர் அதை பகவானுக்கு அளிக்க பதப்படுத்தினார். இதே போல் தான் ஒருவர் பக்தர்களை தயாரிப்பதிலும், மற்றவர் அவர்களை பதப்படுத்தி பகவானுக்கு சமர்ப்பிப்பதிலும் ஈடு பட்டனர்.

ஸ்ரீல பிரபுபாதர் அமெரிக்கா செல்வதற்கு தயாராகும் போதும் ஸ்ரீல நாராயண மகாராஜாவிடமே அத்தனை விவரங்களையும் பேசினார். அமெரிக்காவிலிருந்த போதும் இருவரும் தபால் மூலம் அடைக்கடி தொடர்பு கொண்டனர். ஸ்ரீல பிரபுபாதருக்கு அவரது புத்தகங்கள், ஹார்மோனியம், ஸ்ரீல பிரபுபாதருக்கு பிடித்த மிட்டாய்கள் மற்றும் தேவையான அனைத்தையும் ஸ்ரீல நாராயண மகாராஜாவே அனுப்பினார். ஆனால் அவர்கள் பரிமாறிய 200-க்கும் மேலான கடிதங்களை ஸ்ரீல பிரபுபாதர் மறைந்த பின்னர், அவரது தற்போதைய நிறுவனம் இரவலாக வாங்கி அவர்களின் தெய்வீக நெருக்கத்தை மறைப்பதற்காக அவை எரிக்கப்பட்டு அழிக்கப்பட்டன என்பது தெரிய வருகிறது.

பொதுமக்களிடமிருந்து புறக்கணிக்கப்பட்டு, மறைக்கப்பட்ட அவர்களின் நெருங்கிய உறவைப் பற்றிய உண்மையையே இந்தச் சிறிய புத்தகம் வெளிப்படுத்துகிறது.

இந்த புத்தகம் தமிழ் பேசும் பக்தர்களுக்கும் ஆன்மீகத் தேடலில் அக்கரை உள்ளவர்களுக்கும் உண்மையை எடுத்துரைக்கும். தெய்வீகமாகப் பிணைக்கப்பட்ட மகா புருஷர்களை பிரிக்க முயற்சிப்பவர்கள் உண்மையில் பெரும் பாபத்தையும் அபராதத்தையுமே சம்பாதிப்பார்கள் என்று நம் சாஸ்திரங்கள் கூறுகின்றன.

எனவே பாமர கிருஷ்ண பக்தர்களிடமிருந்து பணம், புகழ், கூட்டம் சேர்க்கும் நோக்கத்துடன் நிறுவனங்கள் ஸ்ரீல பிரபுபாதரையும், ஸ்ரீல நாராயண கோஸ்வாமி மகாராஜா மற்றும் அவரது ஆன்மீக சாகோதரர்களையும் பிரித்து வியாபாரம் செய்வது நல்ல செயல் அல்ல.

மாறாக நாம் அனைத்து கிருஷ்ண பக்தர்களும் ஒன்றாக சேர்ந்து செயல் பட்டால் மட்டுமே ஸ்ரீசைதன்ய மகாபிரபு மகிழ்ச்சியடைவார்.

ஸ்ரீல பிரபுபாதர் மற்றும் பிற ஆச்சார்யார்களின் ஆசியால், ஸ்ரீல நாராயண மகாராஜா சுமார் 200 நூல்களை எழுதியுள்ளார். இவை உலகம் முழுவதும் ஏராளமான பக்தர்களால் படிக்கப்பட்டு புகழப்படுகின்றன.

உண்மையான வைஷ்ணவர்களுக்கு மற்ற வைஷ்ணவர்களுடன் பகைமையோ வெறுப்போ இருக்காது என்பது சாஸ்திர உண்மை. எனவே நாம் அனைவரும் ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் ஒரே குடையின் கீழ் ஒன்றுபட்டு ஒருவருக்கொருவர் ஆதரவளிக்க வேண்டும். இல்லையெனில், சக்தி வாய்ந்த மாயை நம்மை விழுங்கி விடும். சுத்த வைஷ்ணவர்களை நிந்தித்தால் அது கொடுமையான வைஷ்ணவ அபராதத்தையே விளைவிக்கும் என்பது சாஸ்திரம். ஸ்ரீல பிரபுபாதரின் ஆணி வேர் கௌடிய மடம் என்ற உண்மையை கூட பலர் மறைக்க முயல்கிறார்கள். அவரது மிக முக்கியமான சன்னியாச பெயரான ஸ்ரீபக்தி வேதாந்த சுவாமி மகராஜா என்ற பெயரையும் கூட ஏற்க விரும்பாமல் பிரிக்க முயல்கிறார்கள்.

ஆனால் உண்மையில், எவ்வாறு பகவான் எல்லா ஜீவன்களுக்கும் சொந்தமோ அதேபோல் அவர் அனுப்பிய ஸ்ரீல பக்தி வேதாந்த சுவாமி மகாராஜா (ஸ்ரீல பிரபுபாதர்) எந்த ஒரு நிறுவனத்துக்கும் கட்டுப்பட்டவரல்ல. நிறுவனங்கள் அரசியலையும் பிரிவு மனப்பான்மையையும் உண்டுபண்ணி நம் பக்தியை கெடுத்து விடும். எனவேதான் யுக ஆச்சார்யார் என்று அத்தனை விரஜவாசிகளாலும் போற்றப்படும் ஸ்ரீல நாராயண மகாராஜா, “நான் இங்கு செங்கலாலும் சிமென்றினாலும் ஆன கட்டடங்களை ஏராளமாக கட்டி, பணம் பெயர் புகழுக்காக பக்தர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிடும் நிலையை உண்டுபண்ணி அவர்களை பிரிக்கும் பாவ செயலை செய்ய வரவில்லை. மாறாக, ஒவ்வொருவரின் இதயத்திலும் ஸ்ரீராதா கிருஷ்ண யுகாலாவுக்கு ஆலயம் கட்ட உதவி செய்ய வந்துள்ளேன்...”

"மம மன மந்திரே ரஹ நிசி தின், கிருஷ்ண முராரி!”

எனவே பரஸ்பர அன்புடனும் உண்மையை சரியாக புரிந்து கொண்டும், நாம் அனைவரும் ஒன்றாகச் சேவை செய்தும், நமது குரு பரம்பரையை மகிழ்வித்தால் மட்டுமே நமக்கு அவர்களின் உண்மையான ஆசிகள் கிடைக்கும்.

இந்த புத்தகத்தை நீங்கள் படித்து, உண்மையை நீங்கள் உணருங்கள்.

நன்றி, வணக்கம்.
ஹரே கிருஷ்ணா!

# நினைவுகள் ஸ்ரீல பக்திவேதாந்த சுவாமி பிரபுபதா

# அத்தியாயம் 1 - எங்களுடைய முதல் வருடங்கள்

## *1.1. ஸ்ரீல பக்தி பிரஜ்ஞான கேசவ கோஸ்வாமி மகாராஜாவுடன் தொடர்பு*

எனது குருதேவர் ஓம் விஷ்ணுபத ஸ்ரீல பக்தி பிரஜ்ஞான கேசவ கோஸ்வாமி மகாராஜா, எனது ஆன்மீக-சகோதரர் என்று பரம-பூஜ்யபாத ஸ்ரீ அபய சரணரவிந்த பக்திவேதாந்த பிரபுவைப் பற்றி அடிக்கடி என்னிடம் சொல்லுவார். அவரது சந்நியாசத்திற்கு முன், நாங்கள் அவரை அந்த நேரத்தில் அன்பாக அபய சரணரவிந்த பிரபு அல்லது பிரபு என்றே அழைப்போம். எனது குருதேவர் ஆரம்பத்திலிருந்தே, இந்த ஆன்மீக-சகோதரர் ஸ்ரீல பக்தி சித்தாந்த சரஸ்வதி தாகூரருக்கு மிகவும் பிரியமானவர் என்பதை அடிக்கடி என்னிடம் சொல்லுவார். ஸ்ரீல பிரபுபாதர் எப்போதும் அபய சரணரவிந்த பிரபுவை மிகவும் நெருக்கமாகவும் மற்றும் மதித்து வந்ததாகவும், ஹார்மோனிஸ்ட் பத்திரிக்கை மற்றும் பிற வெளியீடுகளுக்கு கட்டுரைகள் எழுதும்படி அவரிடம் கோரியதாகவும், அவர் எனக்கு விளக்கினார்.

அவர்களின் குருமகராஜா (ஸ்ரீல பக்தி சித்தாந்த சரஸ்வதி தாக்கூரா), குறிப்பாக ஆங்கில மொழியில் பிரசங்கம் செய்யவும், ஸ்ரீகிருஷ்ண சைதன்யர் மற்றும் அவரது போதனைகள் பற்றிய இந்த அறிவை, மேற்கத்திய நாடுகளில் பரவலாகப் பரப்பவும், அவருக்கு (அபய சரணவிந்த பிரபுவுக்கு) கட்டளையிட்டார். என்னுடைய குருதேவரின் கூற்றுபடி, அபய சரணவிந்த பிரபு ஒரு மிகச் சிறந்த ஆளுமை, மிகவும் யுக்தவாதி (தர்க்கரீதியான வாதங்களை வழங்குவதில் மிகவும் வல்லவர்). அவர் எப்போதும் நிர்விகா (தைரியமானவர்). அவர் சத்திய போதகர். யாருக்கும் பயப்படாதவர். நான் குருதேவரிடமிருந்தும், மற்றவர்களிடமிருந்தும், அவரைப் பற்றி ஏற்கனவே பலமுறை கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் குருநாதருக்கு மிகவும் நெருங்கிய நண்பர், மிகவும் சிறந்த எழுத்தாளர், மிகவும் நேர்மையான மற்றும் தகுதிவாய்ந்த பக்தர் என்பதை நான் கேள்விப்பட்டிருந்தேன். அந்த நேரத்தில் நான் அவரை (ஸ்ரீல பக்தி சித்தாந்த சரஸ்வதி தாக்கூராவை) பார்த்ததில்லை, ஆனால் கண்களால் காண்பதைவிட காதுகளால் கேட்பது சக்தி வாய்ந்தது.

1922 -ஆம் ஆண்டு ஸ்ரீல பக்திசித்தாந்த சரஸ்வதி பிரபுபாதரின், கௌடியா மடத்தின் சத்சங்கத்தில், முதன்முதலில் சந்தித்ததிலிருந்து, அபய சரணரவிந்த பிரபு எனது குருதேவரின் நெருங்கிய நண்பராக இருந்தார். அந்த ஆண்டுகளில், அவர் ஒரு கிரஹஸ்தராக இருந்தார், மேலும் மிகவும் அழகாக இருந்தார் என்று கூறப்படுகிறது.

1940 -ஆம் ஆண்டு, ஸ்ரீல பக்தி சித்தாந்த சரஸ்வதி பிரபுபாதரின் தெய்வீக மறைவுக்குப் பிறகு கௌடிய மடத்தில் கொந்தளிப்பு ஏற்பட்டது. ஒரு தரப்பினர், மூத்த வைஷ்ணவர்களில் சிலரைக் கைது செய்ய விரும்பினர். மேலும் கல்கத்தா நீதிமன்றத்தில் இந்த விஷயம் தாக்கல் செய்யபட்டது. அந்த நேரத்தில், வினோத-பிஹாரி பிரம்மச்சாரி என்று அழைக்கப்பட்ட என் குருதேவர் அகிஞ்சனராக (பொருள் உடைமைகள் இல்லாமல், அவரது ஒரே சொத்து கிருஷ்ணர் மட்டுமென்று) இருந்தார்.

பின்னர் அவர் அலகாபாத்தில் உள்ள பிரயாக்கைக்குச் சென்றார். அங்கு, அவர் ரூபகௌடிய மடத்தில் சில நாட்கள் தங்கினார். அப்போது, அபய சரணரவிந்த பிரபு அலகாபாத்தில் தனது தொழில் மற்றும் குடும்பத்துடன் வசித்துக்கொண்டு இருந்தார். அபய சரணரவிந்த பிரபு என் குருதேவரை தன் வீட்டிற்கு விருந்தினராக தங்க அழைத்தார். அடுத்த நான்கு அல்லது ஐந்து மாதங்கள் அவர்கள் அங்கு ஒன்றாக வாழ்ந்தனர். இந்த நீண்ட காலத்தில், அவர்கள், ஒருவருக்கொருவர் மிகவும் நெருக்கமாகவும் அன்பாகவும் மாறினார். அவர்கள் எப்போதும், பகவத் கீதை மற்றும் அவர்களின் ஸ்ரீல பிரபுபதத்திற்கும், அவரது பணிக்கு, குரு-சேவை தொடர்பான பல விஷயங்களைப் பற்றி விவாதித்தனர். (இறுதி குறிப்பு 1-ஐப் பார்க்கவும்).

என்னுடைய குருதேவர் அலகாபாத்தில், சில மாதங்கள் அவருடன் வசித்தபோது, அபய சரணரவிந்த பிரபு அந்த நகரத்தில் எல்லா இடங்களிலும் நிறைய பிரச்சாரம் செய்ய எற்பாடு செய்தார். அவர் தனது மருந்து வணிகத்திலிருந்து ஏராளமான நண்பர்களை வளர்த்து சேர்த்து வைத்திருந்தார், மேலும் பல படித்த, தகுதி வாய்ந்த மக்களையும் அறிந்திருந்தார். வேதாந்தம் குறித்து விரிவான சொற்பொழிவுகளை வழங்க என் குருதேவருக்கு ஏற்பாடுகள் செய்தார். அவர்கள் ஒன்றாக, மாயாவத தத்துவத்தையும், பல செல்வாக்கு மிக்க கத்தோலிக்கர்கள் மற்றும் பிற கிறிஸ்துவர்களையும் தோற்கடித்தனர். அந்த நபர்கள், மிகவும் திறமையாக முன்வைக்கப்பட உண்மையான வாதங்கள் மற்றும் சித்தாந்தத்தால் ஈர்க்கப்படனர்.

அபய சரணாரவிந்த பிரபு, என் குருதேவரின் (பக்தி பிரஜ்ஞான கேசவ கோஸ்வாமி மகராஜாவின்) பிரசங்கத்தை மிகவும்

பாராட்டுவார். அவர் அடிக்கடி என்னிடம், "உங்கள் குருதேவர் மிக சிறந்த தர்க்க ரீதியானவர். அவர் ஒரு சிறந்த தத்துவ ஞானி. அதனால்தான், உங்கள் குருதேவரை ஒரு சிறந்த நண்பராகத் தேர்ந்தெடுத்தேன்" என்று கூறுவார்.

## *1.2. கௌடிய வேதாந்த சமிதியை நிறுவுதல்*

அப்போது என் குருதேவர் ஸ்ரீவினோத-பிஹாரி பிரம்மச்சாரி, 'கிருதி-ரத்னா' என்று அழைக்கப்பட்டார். இந்த பெயரை ஸ்ரீல பக்தி சித்தாந்த சரஸ்வதி பிரபுபாதர் அவருக்கு வழங்கியிருந்தார். 'கிருதி-ரத்னா' என்றால் 'அனைத்து மேலாளர்களிலும் ரத்தினமாக விளங்குபவர்' என்று பொருள். ஏனெனில், அவர் கௌடிய மடத்தை மிகவும் திறமையாக நிர்வகித்தார். இந்த பெயர் என் குருதேவர் சந்நியாசம் எடுப்பதற்கு முன்பே கொடுக்கப்பட்டது.

வேதாந்த-சூத்திரத்தை பக்தி-சூத்திரமாக காட்ட வேண்டும் என்ற ஆசை என் குருதேவரின் இதயத்தில் இருந்தது. இதை நிரூபிக்க, ஸ்ரீமத்-பாகவதத்தின் சுலோகங்களை அடிக்கடி மேற்கோள் காட்டுவார். “மாயாவாதத்தின் அடையாளம் எங்கிருந்தாலும், பக்தியை முழுமையாகப் பிரசங்கிக்க முடியாது. எனவே நாம் மாயவாதத்தை முதலில் வேரிலிருந்தே அகற்ற வேண்டும்" என்று அவர் எப்போதும் கூறுவார். அபய சரணாரவிந்த பிரபுவிற்கு இந்த யோசனை மிகவும் பிடித்திருந்தது. "மாயவாதத்தை நாம் விரட்டியடிக்க வேண்டும்” என்று அவரும் அடிக்கடி கூறுவார். அவர்கள் இருவரும் தங்கள் பிரசங்கங்களில் மிகவும் ஒற்றுமையாக இருந்தனர்.

குருதேவர், தம்மிடமிருந்து சந்நியாசம் பெற்ற எங்களுக்கு "பக்திவேதாந்த" என்ற பெயரை வழங்கினார். மேலும் அவர்கள் ஒரு அமைப்பை உருவாக்கியபோது, அந்த சமிதியை "கௌடிய வேதாந்தம்" என்று அழைத்தனர், அவரது வேதாந்தம் பக்திக்கு ஒப்பாகும். ஸ்ரீல பிரபுபாதர் பக்தி சித்தாந்த சரஸ்வதி தாக்கூராவின் தெய்வீக மறைவுக்கு பிறகு, எனது குருதேவர், அபய சரணரவிந்த பிரபு மற்றும் நரோதம்மானந்த பிரம்மச்சாரி (பின்னர் ஸ்ரீல பக்தி கமலா மதுசூதன மகாராஜா என்று அழைக்கப்பட்டார்) ஆகியோருடன் சேர்ந்து, கௌடிய வேதாந்த சமிதிக்கான ஸ்தாபன ஆவணங்களை தாக்கல் செய்தார். இது 1940 ஆம் ஆண்டு ஏப்ரல் 7 ஆம் தேதி, அக்ஷய திருதியை தினத்தன்று, கல்கத்தாவின் 33/2 பொசபாத பாதையில் வாடகைக்கு எடுக்கப்பட்ட வீட்டில் செய்யப்பட்டது (குறிப்பு 2 ஐப் பார்க்கவும்).

அவர்கள் தங்கள் குருமஹராஜரின் நிறுவனத்தில் ஏற்பட்ட அரசியல் எழுச்சியிலிருந்து பிரிந்தாலும், அவர்கள் ஸ்ரீல பக்திசித்தாந்த

சரஸ்வதி பிரபுபாதரையோ அல்லது அவரது பணியையோ சித்தாந்தத்தையோ கைவிடவில்லை. அவரது உண்மையான கருத்துக்களையும் அறிவுறுத்தல்களையும் மீண்டும் நிலைநாட்ட விரும்பினர், மேலும் அவரது கௌடிய மடத்தை அவர்கள் கைவிடவில்லை. எனவே, கௌடிய வேதாந்த சமிதியால் நிறுவப்பட்ட மடங்களின் பெயர்கள்; தேவானந்த கௌடிய மடம், உத்தாரன கௌடிய மடம், கேசவாஜி கௌடிய மடம், மற்றும் பல.

## *1.3. எங்கள் முதல் சந்திப்பு*

1947 ஆம் ஆண்டு நான் கல்கத்தாவில் எனது குருதேவரின் தனிப்பட்ட சேவகனாக இருந்தேன், ஒரு நாள் கௌடிய வேதாந்த சமிதியின் புதிய கிளை திறப்பு விழா நடைபெற்றது. அங்கு ஒரு பெரிய கூட்டம் நடந்தது, அதில் பல வைஷ்ணவர்கள் கலந்து கொண்டனர். குருதேவர் ஆற்றிய சொற்பொழிவின் போது, ஒரு கிரஹஸ்த பக்தர் பின் வாசலின் வழியாக உள்ளே வந்தார். அவரைப் பார்த்ததும் குருதேவர் பேசுவதை நிறுத்திவிட்டு, அவரை முன் நோக்கி அழைத்து வரச் சொன்னார். அந்த பக்தர் பணிவுடன் முன் நோக்கி வரத் தொடங்கினார், ஆனால் என் குருதேவர் அவரை மேலும் முன் நோக்கி வருமாறு கட்டளை இட்டார். குருதேவர் அவருக்கு மிகுந்த மரியாதை காட்டி, மேடையில் அவருக்கு அருகில் அமருமாறு வற்புறுத்தினார். நான் குருத்தேவரைப் பார்த்து, அமைதியாக கேள்வி எழுப்பினேன்,”இந்த பக்தர் யார்?” என்று கேட்டேன். அதற்கு அவர் என்னிடம், “இவர் அபய சரணாரவிந்த பிரபு. என் அன்பான ஆன்மீக சகோதரர். அவர் ஶ்ரீல பக்தி சித்தாந்த பிரபுபாதரின் மிகவும் சிறந்த சீடர். மிகவும் பணிவானவர், மற்றும் மிகவும் தகுதி வாய்ந்தவர். நீ அவரை நன்றாகக் கவனிக்க வேண்டும். அவரிடம் கவனமாகக் கேட்டு, அவருக்கு சேவை செய்ய வேண்டும்” என்று கூறினார்.

அந்த நேரத்தில் நான் அபய சரணாரவிந்த பிரபு மற்றும் பல மூத்த வைஷ்ணவர்களுக்கு காலை உணவு, மதிய உணவு மற்றும் வேறு உணவுகளையும் சமைப்பேன். அவர்களின் துணிகளை துவைத்து சுத்தம் செய்வேன். அவர் என்னைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைந்தார். என் குருதேவருக்கு நான் செய்யும் சேவையைக் கண்டு அவர் மகிழ்ச்சியடைந்தார், மேலும் நான் எங்கிருந்து வந்தேன், எங்கிருந்து, எப்படி நான் மடத்தில் சேர்ந்தேன் போன்ற பல கேள்விகளை கேட்டார். நாங்கள் ஒன்றாக பேசினோம், என் பதில்களால் அவர் மிகவும் திருப்தி அடைந்தார். நான் அவரை மிகவும் கவர்ந்தேன். மேலும் அவரிடம் ஈர்க்கப்பட்டேன். இதய பூர்வமாக அவருக்கு சேவை செய்யத் தொடங்கினேன். அவரைச் சந்தித்து நீண்ட காலமாக அவருக்கு

சேவை செய்ததில் நான் எவ்வளவு அதிஷ்டசாலி என்று இப்போது நினைத்து பார்க்கிறேன். ஒருவருக்கொருவர் எங்களுக்குள் மிகுந்த பாசம் இருந்ததால் என் இதயத்தை போதுமான அளவு விளக்க முடியவில்லை. அவர் எனக்கு எழுதிய பல கடிதங்கள் ஒன்றில், என்னை முதன் முதலில் பார்த்ததிலிருந்தே, எங்களிடையே பாசம் உண்டானதாகவும், நாங்கள் இருவரும் தன்னிச்சையான அன்பின் ஆழ்நிலை உறவைப் பகிர்ந்து கொண்டதாகவும் கூறினார். மேலும் அந்த கடிதங்களில் அவரது (தீக்ஷ குருவான) ஸ்ரீல பிரபுபாதர் அவர் மீது மிகுந்த நம்பிக்கையும் அன்பும் ஆரம்பத்திலிருந்தே கொண்டிருந்தார் என்றும், அவருக்கு என் மீது மிக அன்பும் நலமும் விருப்பமும் இருந்தது என்றும் எழுதியிருந்தார். (பார்க்க: இறுதி குறிப்பு 3)

அபய சரணாரவிந்த பிரபு ஒரு சக்திவாய்ந்த பேச்சாளர். அவரது சொற்பொழிவுகள் மிகவும் செல்வாக்கு மிக்கவை. ஸ்ரீமத் பாகவதத்தின் மொழிபெயர்ப்புகளைப் பற்றி விவாதித்து, வார்த்தைக்கு வார்த்தை அர்த்தங்களைக் கொடுத்து, பின்னர் அவர் முழுமையான விளக்கங்களை வழங்குவார். அவர் பேசியது அழகாக இருந்தது. ஸ்ரீல பக்தி சித்தாந்த சரஸ்வதி பிரபுபாதரின் மூத்த சீடர்கள் பலர் அங்கு இருந்தனர். அவற்றில் ஸ்ரீல ஸ்ரீதர மகாராஜா, ஸ்ரீல தீர்த்த மகாராஜா, ஸ்ரீல ஸ்ரௌதி மகாராஜா, ஸ்ரீல நயிமி மகாராஜா, ஸ்ரீல யயாவர் மகாராஜா, ஸ்ரீல அவுடலோமி மகாராஜா, ஸ்ரீல வைக்கானஸ் மகாராஜா, ஸ்ரீல பூரி மகாராஜா, ஸ்ரீல கிரி மகாராஜா, மற்றும் ஸ்ரீல மாதவ மகாராஜா, இந்த சீடர்கள், அனைவரும் புலிகளையும் இடியையும் போன்றவர்கள். சித்தாந்தத்தில் நன்கு தேர்ச்சி பெற்ற அவர்கள், அடிக்கடி என் குருதேவரைப் பார்க்க வரும் போது, நான் அவர்களுக்கு சேவை செய்ய முடிந்தது.

அபய சரணரவிந்த பிரபு, மடத்திற்கும் வெளியே வாழ்ந்த ஒரு கிருஹஸ்தராக இருந்தபோதிலும், மிகவும் தகுதியானவராக அனைவராலும் கருதப்பட்டார். அவர் மிகவும் துணிச்சலானவர். நிறுவப்பட்ட சித்தாந்தம் குறித்து, யாருடனும் ஒருபோதும் தாழ்ந்து போக மாட்டார். தனது உயர்ந்த பிரசங்கத்தால் அனைவரையும் தோற்கடித்து உண்மையை நம்ப வைப்பார்.

அந்த நாட்களில் அவர் தனது ஆன்மீக சகோதரர்களுடன் பழகுவதை நான் அடிக்கடி பார்த்தேன். அவர்கள் கூடியிருந்த அனைத்து கோயில்களிலும்-கல்கத்தா, நவதிவீப், சின்சுரா, அலகாபாத், பம்பாய் மற்றும் டெல்லியில் அவருக்கு பல நெருங்கிய நட்புகள் இருந்தன. அவர் அடிக்கடி ஆன்மீக சகோதரர்களைச் சந்தித்து, விழாக்கள் மற்றும் விவாதங்களுக்காக வெவ்வேறு மடங்களுக்குச் சென்று, அவர்களிடம் எப்போதும் அன்பான நடத்தையுடன் நடந்து கொண்டார்.

அவரது ஆன்மீக சகோதரர்கள் கூடும் போது, அவர்களுக்கு மரியாதை காட்டுவார். ஏனெனில் அப்போது அவர் ஒரு கிருஹஸ்தராகத்தான் இருந்தார். ஆனால் அவர் திருமணமானவராக இருந்த போதிலும், அனைத்து சந்நியாசிகளும் மூத்த பிராமணர்களும் அவரை மிகவும் மதித்தார்கள். ஏனெனில் அவர் ஒரு கற்றறிந்த அறிஞர் மற்றுமன்றி ஒரு வலிமையான துணிச்சலான பிரச்சாரகராக இருந்தார். அனைவராலும் அபய் (அச்சமற்றவர் ) என்று அறியப்பட்டார்.

## *1.4. தலையங்க சேவை*

எங்கள் பத்திரிக்கைகளான 'கௌடிய பத்திரிகா' மற்றும் 'பாகவத பத்திரிகா' 1953இல் தொடங்கபட்டன. அந்த நேரத்தில் குரு தேவர் அபய சரணாரவிந்த பிரபுவிடம், "நான் வங்காளம் மற்றும் பிற மொழிகளில் வெளியீடுகளை நிறுவ விரும்புகிறேன். நீங்கள் அவற்றிற்காக கட்டுரைகளைகள் எழுத வேண்டும் என்று நான் விரும்புகிறேன்” என்று கூறினார். முன்னதாக அவர் 'ஹார்மோனிஸ்ட் ' என்ற பத்திரிக்கைக்காக கட்டுரைகளை எழுதியிருந்தார். அவர் பல அற்புதமான கட்டுரைகளையும் கீதையின் நோக்கங்கள் போன்றவற்றையும் தொடர்ந்து எழுதினார். அவர் மிகவும் அற்புதமான எழுத்தாளர். அனைவரும் அவரை பாராட்டினர். அந்த நேரத்தில் தூய பக்தியை எதிர்த்த அனைவருக்கும், குறிப்பாக 'மூர்கி மிஷன்' என்ற அமைப்பை எதிர்த்து சவால் விடுத்தார். 'ராமகிருஷ்ணா மிஷனைத்தான்' இவர் 'மூர்கி மிஷன்' என்று அழைத்தார். ஏனெனில் அவ்வமைப்பின் உறுப்பினர்கள் கோழியை சாப்பிட்டார்கள். உண்மையில் அவர்கள் இறைச்சி, முட்டை, மற்றும் பல அருவருப்பான பொருட்களை சாப்பிட்டார்கள். அந்த நாட்களில் விவேகானந்தரும் அவரது ராமகிருஷ்ணமிஷனும் மிகவும் முக்கியமானதாக இருந்ததால் பொதுமக்கள் அவர்களை 'ஓ இவர்கள் மிகவும் உயர்ந்த குல பக்தர்கள்' என்று எண்ணினார்கள். இந்தியா முழுவதும் அவர்கள் மட்டுமே வேதங்களைப் பின்பற்றுகிறார்கள் என்றும், மற்றவர்களும் கௌடியா மிஷனும் வேதாந்த கொள்கைகளை பின்பற்றுவதில்லை என்று எண்ணினார்கள். அபய சரணாவிருந்த பிரபு இந்த மூர்க்கர்களைப் பற்றி இரண்டு பகுதி கட்டுரை எழுதினார். அவர் முதல் பகுதியுடன் தொடங்கினார். இரண்டாம் பகுதி அச்சிடப்பட்ட போது மூர்க்கர்களைத் தவிர மற்ற அனைவரும் ஆச்சரியப்பட்டு நம்பினர். பலர் இதுபோன்ற கட்டுரைகளை மேலும் எழுதுமாறு அவரிடம் கேட்டுக்கொண்டனர். மத நிறுவனங்களின் சீர்திருத்தத்தை அவர்கள் கோரினார்கள்.

அந்த நேரத்தில் இந்தியாவின் ஜனாதிபதியாக ஸ்ரீ ராதா கிருஷ்ணன் என்பவர் இருந்தார். அவர் மிகவும் புகழ் பெற்றவராகவும் ஆங்கிலத்தில் புலமை பெற்றவராகவும் விளங்கினார். ஆனால் அவர் மிகவும் துணிச்சலான உலகப்புகழ்பெற்ற மாயாவாதியாக இருந்தார். அவர் ஆங்கிலத்தில் ஒரு கட்டுரை எழுதினார். அதில் ஸ்ரீகிருஷ்ணரின் உடலில் உள்ள ஆத்மா கடவுள் என்றும், ஆனால் ஸ்ரீகிருஷ்ணரின் உடல் கடவுள் அல்ல என்றும் குறிப்பிட்டிருந்தார். நமது உடலுக்கும் ஆத்மாவுக்கும் வேறுபாடு இருப்பது போல் ஸ்ரீகிருஷ்ணரின் உடலுக்கும் ஆத்மாவுக்கும் வேறுபாடு இருப்பதகாக அவர் கூறிருந்தார்.

அப்போது குருதேவர் இங்கு இல்லை. ஆனால் அபய சரணாவிருந்த பிரபு இங்கு இருந்தார். அவர் ஸ்ரீராதா கிருஷ்ணனின் கட்டுரையை கடுமையாக எதிர்த்து மிகவும் சக்திவாய்ந்த கட்டுரை ஒன்றை எழுதினார். அவர் சாஸ்திரங்களிலிருந்து பல வலுவான உதாரணங்களை மேற்கோள் காட்டி ஜனாதிபதியிடம், "இப்படி பேசுபவர்கள் அயோக்கியர்கள். ஸ்ரீகிருஷ்ணரின் தெய்வீக உடலுக்கும் அவரது ஆத்மாவுக்கும் (தேஹனுக்கும் தேஹிக்கும் - அதாவது உடலுக்கும் அதன் உரிமையாளருக்கும்) எந்த ஒரு வித்தியாசமும் இல்லை. ஸ்ரீகிருஷ்ணரின் குணம், லீலைகள், மற்றும் பெயர்களும் திவ்யமானவை. ஒருவருக்கு மிகவும் தூய்மையான தன்னையறிந்த குரு இல்லை என்றால் அவரால் இந்த கருத்தைப் புரிந்துகொள்ள முடியாது. உமக்கு அப்படிப்பட்ட ஒரு குரு இல்லை. நீரே சாஸ்திரத்தை படிக்கிறீர்கள். நீரே கௌதம புத்தரைப்போல சூன்யவாதியாக செயல்படுகிறீர். ஒருகாலத்தில் தென்னிந்தியாவில் மிகவும் பிரபலமான ஸ்ரீசங்கராச்சாரியரின் போதனைகளை நீர் அறிந்திருக்கலாம். ஆனால் நீர் ஸ்ரீராமானுஜர், ஸ்ரீமத்வாச்சாரியார், ஸ்ரீசைதன்யா மகாப்பிரபு மற்றும் ஸ்ரீல ஜீவகோஸ்வாமி, பலதேவ வித்யாபூஷணர் ஆகியோரின் தத்துவங்களை படிக்கவில்லை. 'அச்சிந்திய-பேதாபேத' என்றால் என்ன என்பதை நீர் அறிய முயற்சி செய்யவேண்டும். பிரிவினைவாதியாக இருக்காதீர். நீர் இந்தியாவின் ஒரு அதிகாரி, ஜனாதிபதி. நீர் ஒரு மதத்தின் தலைவர் அல்ல. நீர் எங்களிடமிருந்துதான் உண்மையை கற்றுக்கொள்ள வேண்டும்“ என்று எழுதியிருந்தார்.

ஸ்ரீல பக்திவேதாந்த வாமன மகாராஜா, ஸ்ரீபாத அபய சரணாரவிந்த பிரபுவை வங்காள கௌடியா பத்ரிகையின் தலைமை ஆசிரியராக நியமித்தார். மேலும் நான் ஹிந்தி பாகவத பத்ரிக்கையின் ஆசிரியர் குழுவிலும் இருந்தேன். அவர் வழக்கமாக தனது கட்டுரைகளை வங்காள மொழியில் சமர்பித்தார். சில சமயங்களில் அவர் ஹிந்தியிலும் கட்டுரை எழுதுவார். அதை நான் திருத்தம் செய்வேன். ஏனெனில் அவரது தாய்மொழி ஹிந்தி அல்ல. அவர் பெரும்பாலும் கௌடிய பத்திரிக்கைகளுக்கு வங்காள மொழியில் கட்டுரைகளை எழுதினார். பின்னர் நான் இவற்றை ஹிந்தியில்

மொழிபெயர்த்து பாகவத பத்திரிகையை அச்சிட்டேன்.

இது நாடாப்பதிவு இயந்திரங்களின் காலத்திற்கு முந்தைய ஸ்டெனோகிராபியின் திறனில் பிரபு நிபுணத்துவம் பெற்றவர். எனது குருதேவர் மற்றும் பிற மூத்த வைஷ்ணவர்களின் சொற்பொழிவுகளின் போது, அவர் சுருக்கெழுத்தை சரியாக எடுத்து அந்த உரைகளை தனது குறிப்பேடுகளில் பதிவு செய்வார். அவரது துல்லியமான குறிப்புகள் கௌடிய பத்திரிகையில் வரும் கட்டுரைகளுக்கு பயன்படுத்தப்பட்டன. அபய சரணாரவிந்த பிரபு பல ஆண்டுகளாக ஒவ்வொரு மாதமும் எங்கள் பத்திரிகைகளுக்கு எழுதுவதை தொடர்ந்தார். மேலும் அந்த மூல பதிப்புகளில் சில இன்னும் எங்கள் மடத்தில் பாதுகாக்கப்படுகின்றன.

## *1.5. ஜான்ஸி*

பூஜ்யபாத அபய சரணாரவிந்த பிரபு ஜான்ஸியில் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தபோது அவரைக் காண இரண்டு முறை சென்றேன். முதன் முறையாக நான் சில பிரமச்சாரிகளுடன் இரயிலில் பயணம் செய்தேன். இரண்டாவது முறையாக நான் என் குருதேவருடன் அவரைக் காண சென்றேன். ஒவ்வொரு முறையும் நான்கு அல்லது ஐந்து நாட்கள் அவருடன் தங்கினோம்.

அவர் அங்கு வியாபாரத்திற்காக முன்பு அடிக்கடி பயணம் செய்த போது சில தொடர்புகளை ஏற்படுத்தி வைத்திருந்தார். ஒருவருக்கு மடம் கட்டுவதற்கு ஏற்ற கட்டடம் ஒன்று இருந்தது. எங்கள் மடத்திற்கு அதை இலவசமாக அளிக்க பிரபு எங்களை அழைத்தார். ஆனால் எனது குருதேவருக்கு அங்கு குடியேற விருப்பம் இல்லை. ஏனென்றால் என் குருதேவரிடம் போதுமான பிரமச்சாரிகள் இல்லை. மேலும் மதுரா போன்ற ஒரு பெரிய நகரத்தையே என் குரு தேவர் விரும்பினார்.

அபய சரணாரவிந்த பிரபுவை முதலில் அழைத்த அந்த மனிதர், ஆச்சாரிய பிரபாகர மிஷ்ரர் ஆவார். பின்னர் அவரே தீட்சை பெற்ற சீடராகவும் ஆகி விட்டார். அபய சரணாரவிந்த பிரபு அவருக்கு தீட்சை கொடுத்தாரா இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் அபய சரணாரவிந்த பிரபு இந்த மனிதரை ஏற்றுக் கொண்டதாகக் கூறினார். பிரபு அவருக்கு ஹரிநாமத்தை மட்டும் கொடுத்ததாக நான் நினைக்கிறேன். அந்த நேரத்தில் பிரபு ஸ்ரீசைதன்யா-சரிதாமிர்தத்தை மொழி பெயர்த்து கொண்டிருந்தார். ஆனால் அவரது ஹிந்தியில் வங்காள மொழி கலந்திருந்ததால் இந்த சீடர் அதை சரி செய்து உதவினார்.

ஜான்ஸியில் தங்கியிருந்தபோது அபய சரணாரவிந்த பிரபு

பாங்குராவிலிருந்து (மேற்கு வங்காளத்தின் மெத்தினாபுருக்கு அருகில்) ஸ்ரீகௌரங்க மஹாபிரபுவின் பெரிய மற்றும் மிக அழகான விக்ரஹத்தை தனிப்பட்ட முறையில் கொண்டுவந்தார். கௌடிய வைஷ்ணவருக்காக, குறிப்பாக இங்குதான் பல தெய்வங்களின் விக்ரஹங்கள் உருவாக்கபடுகின்றன. அவர் முதலில் விக்ரஹத்தை பெற்றுக் கொண்ட பின்னர் அந்த விக்ரஹத்தை கோவிலில் பிரதிஷ்டை செய்யும்படி கொண்டுவந்தார். ஜான்சியில் அவர் தனியாக சில வழக்கமான பூஜைகளை செய்து வந்தார். ஆனால் அந்த விக்ரஹம் இன்னும் பிரதிஷ்டை செய்யப்படாமல் இருந்தது.

அபய சரணாரவிந்த பிரபு, குருதேவரை விக்ரஹ பிரதிஷ்டைக்காக அழைத்தார். ஆனால் நாங்கள் நிகழ்சிக்காக வந்திருந்தாலும் விக்ரஹ பிரதிஷ்டை நடைபெறவில்லை.. ஏனென்றால், அந்த நன்கொடையாளர்கள் அந்த கோவிலை எவ்வாறு பயன்படுத்த அனுமதிக்கிறார்கள் என்பதை பற்றி குருதேவர் பிரபுவிடம் விவாதித்தார். எந்த நேரத்திலும் அவர்கள் அவரை வெளியேற உத்தரவிடலாம் என்றும், ஒரு ஆவணம் பெறப்பட்டால் நன்றாக இருக்கும் என்றும் குருதேவர் கூறினார். குருதேவருக்கும் நன்கொடையாளருக்கும் இடையே ஒரு விவாதம் நடந்தது. அப்போது அவர் அங்குள்ள அனைவருக்கும் முன்பாக ஒரு நிபந்தனையை விதித்தார்: ‘நீங்கள் கோவிலை பூஜ்யபாத அபய சரணாரவிந்த பக்திவேதாந்த பிரபுவிடம் கொடுத்தால் அவர் அங்குள்ள அனைத்து சொத்துக்களுக்கும் மற்ற செயல்பாடுகளுக்கும் உகந்த தலைவராக இருப்பார். அவர் நமது சம்பிராதயத்தின்படி அனைத்தையும் செய்வார்.’ ஆனால் நன்கொடையாளர்களோ, கோவில் தங்கள் பொறுப்பில் தான் இருக்க வேண்டும் என்றும், பிரபு ஒரு பூசாரியாக மட்டுமே இருக்க வேண்டும் என்ற மனநிலையில் இருந்தனர். எனவே அபய சரணாரவிந்த பிரபு மற்றும் குருதேவர் இருவரும் அவர்களது நிபந்தனைகளை நிராகரித்தனர்.

நானும் என் குருதேவரும் ஜான்சியிலிருந்து மதுராவுக்கு ரயிலில் திரும்பினோம். அப்போது அபய சரணாரவிந்த பிரபு எங்களுடன் வரவில்லை, ஆனால் சில நாட்களுக்குப் பிறகு அவர் சைதன்ய மஹாபிரபு விக்ரகத்தை கொண்டு வந்து என் குருதேவரின் பராமரிப்பில் வைத்தார். பின்னர் குருதேவர் அந்த அழகிய சைதன்ய மகாபிரபுவை கேசவ்ஜி கௌடிய மடத்தில் உள்ள பீடத்தில் நிறுவினார். அங்கு இந்த விக்ரஹங்களுக்கு இன்று வரையிலும் சேவை செய்யப்பட்டு வருகிறது.

## 1.6. ஸ்ரீ கேசவாஜி கௌடிய மடத்தில் வாசம்

நானும் என் குருதேவரும் உடனிருக்கும்போது, 1955-ஆம் ஆண்டு அபய சரணாரவிந்த பிரபு மீண்டும் கேசவஜி கௌடிய மடத்திற்கு வந்தார். நாங்கள் அவரை அன்புடன் அரவணைத்துக் கொண்டோம். அவரும் எங்களை அன்புடன் அரவணைத்துக் கொண்டார். இங்கு வருவதற்கு முன்பு அவர் அலகாபாத்தில் உள்ள தனது மருந்து வணிகமான 'பிரயாக் மருந்தகத்தை' வெற்றிகரமாக நடத்தி வந்தார்.. அது மிகவும் பிரபலமானது. பிரதமர் உட்பட இந்தியாவின் பல முக்கிய நபர்கள் அவரது கடையில் வாடிக்கையாளர்களாக இருந்தனர். பின்னர் அவர் அதை விற்க வேண்டி இருந்தது. மேலும் தனது சொந்த மருந்தகங்களிலிருந்து தயாரித்த மருந்துகளை விற்க அவர் வட இந்தியாவின் அனைத்து முக்கிய நகரங்களுக்கும் பயணம் செய்தார். டெல்லி, கான்பூர், லக்னோ, ஆக்ரா, ஜான்ஸி, மதுரா, மற்றும் பிற நகரங்களுக்குச் சென்று தனது சொந்த மருந்து பொருட்களை விற்பனை செய்தார். மடத்தின் மூத்த சீடரான குஞ்சபிகாரி பிரபு அந்த நேரத்தில் அவருக்கு சேவை செய்து கொண்டிருந்தார். அவரது பைகளை எடுத்து செல்லுவது, வேலை செய்யும்போது அவருக்கு பிரசாதம் எடுத்துச்செல்வது போன்ற உதவிகளை அவர் செய்தார்.

சிறிது காலத்திற்கு பிறகு அந்த தொழிலும் முடிவிற்கு வந்தது. அபய சரணாரவிந்த பிரபு தனது இல்லற வாழ்கையையும் கல்கத்தாவிலிருந்த தனது அனைத்து சொத்துக்களையும் துறந்தார். அவர் மீண்டும் மதுராவிற்கு வந்தார். இந்தமுறை உடமைகள் எதுவும் இல்லாமல் 'குடல் சுருட்டு புழு (Ringworm)' எனும் நோயை குணப்படுத்துவதற்கான ஒரு மருந்தை மட்டும் கொண்டு வந்தார். அதை அவர் கடைக்குக் கடை விநியோகம் செய்தார். ஆனால் விற்பனை அவ்வளவு நன்றாக இல்லை. அவர் 'பெங்காலி-காட்டா' என்ற இடத்தின் அருகிலுள்ள 'ஹுலி-வாலி' சந்தில், யமுனாவின் அருகில் வாடகைக்கு எடுக்கப்பட்ட ஒரு அறையில் வசித்து வந்தார். நான் அவரைப் பார்க்க சென்றபோது அவர் மூன்று அல்லது நான்கு நாட்களாக அங்கு தங்கி இருந்தார். நான் அவரிடம் 'பிரபு நீங்கள் ஏன் இங்கே தங்கியிருக்கிறீர்கள்?' என்று கேட்டேன். அதற்கு அவர் மிகவும் பணிவாக எங்களுக்கு எந்த தொந்தரவும் செய்ய விரும்பவில்லை என்றார். ஆனால் நான் அவரது பொருட்கள் அனைத்தையும் வலுக்கட்டாயமாக எடுத்துக் கொண்டு "உங்களை வேறு எங்கும் போக விடமாட்டேன். நாங்கள் உங்களுடன் இருக்கிறோம். நாங்கள் உங்கள் மகன்களைப் போன்றவர்கள். நீங்கள் எங்கள் குருதேவரின் ஆன்மிக சகோதரர்.

எங்களுக்கு மிகவும் பிரியமானவர். நாங்கள் உங்களை கவனித்துக்கொள்ள விரும்புகிறோம். நான் உங்களை இங்கே தங்க அனுமதிக்க மாட்டேன், எங்களிடமிருந்து பிரிந்து செல்லவும் அனுமதிக்க மாட்டேன்'' என்று கூறினேன். பிறகு நான், பிரமச்சாரிகள், குஞ்சபிகாரி பிரபு, சேஷசாயி பிரபு, மற்றும் சிலரை அழைத்து வந்தேன். பிரபுவிடமிருந்த சில பாத்திரங்களை எடுத்துக்கொண்டு எங்கள் மடத்தில் வசிக்க அவரை அழைத்துச் சென்றோம்.

நான் அவரிடம், "தயவுசெய்து இங்கே எங்களுடன் தங்கி, பகவத் கீதையை பிரச்சாரம் செய்யுங்கள், எழுதுங்கள், மற்றும் பலவற்றை செய்யுங்கள். இப்போது யாரும் உங்களுக்கு உதவவில்லை என்பது எனக்குத் தெரியும். நான் உங்களுக்கு தனிப்பட்ட முறையில் சேவை செய்ய விரும்புகிறேன். தயவுசெய்து இங்கேயே தங்குங்கள். நீங்கள் வெளியேறுவதை நாங்கள் ஒருபோதும் விரும்ப மாட்டோம்" என்று கூறினேன். இதை கேட்டு அபய சரணாரவிந்த பிரபு மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்.

நான் என்னுடைய அறைக்கு அருகில் மற்றொரு அறையை கொடுத்தேன். அவருடைய அறை அங்கே இருந்தது என்றால் என்னுடைய அறை இங்கே பக்கத்தில் இருந்தது. அப்போது அவருடைய அறையும் என்னுடைய அறையும் மட்டுமே இருந்தது. அந்த நேரத்தில் எங்கள் கேசவ்ஜி கௌடிய மடத்தில் கோவில் இல்லை. அவருக்கு வழங்க எங்களிடம் மிகக் குறைந்த வசதியே இருந்தது. ஏனென்றால் எங்கள் மடத்தில் எந்த வசதியும் இல்லை. ஒரே ஒரு குளியலறை மட்டுமே இருந்தது. ஆனால் நாங்கள் மிகவும் எளிதாக, நிம்மதியாக வாழவும், சாதிக்கவேண்டிய அனைத்தையும் சாதிக்கவும் முடிந்தது. அப்போது "இது என்னுடையது" என்று மற்றவர்களுக்கு காட்ட அவரிடம் எதுவும் இல்லை. அவருடைய உடலும் ஆத்மாவும் மட்டுமே இருந்தது. ஒரு பைசா கூட அவரிடம் இல்லை. அவரது 'Back To Godhead' என்ற இதழின் சில பிரதிகள், அவரது 'கீதை' மற்றும் வங்காள மொழியில் ஸ்ரீமத் பாகவதத்தின் மூன்று அல்லது நான்கு தொகுதிகள் மட்டுமே இருந்தன. அவை இப்போதும் எங்கள் கௌடிய மதாவின் நூலகத்தில் பாதுகாக்கப் படுகின்றன. அவரிடம் படுக்கையோ பெட்டிகளோ அல்லது தனிப்பட்ட பொருட்களோ எதுவும் இல்லை.

நாங்கள் அவருக்கு ஒரு சிறிய அறையையும் பல புத்தகங்களையும் கொடுத்தோம். ஸ்ரீபாத நரசிம்ம மஹாராஜாவும் (அவரது ஆன்மிக சகோதரர்களில் ஒருவர்) நானும் சில சமஸ்க்ருத மற்றும் வங்காள புத்தகங்களை அவருக்கு நன்கொடையாக அளித்தோம். அங்கு அவர் பல ஆன்மீக மொழிபெயர்ப்புகளையும் கட்டுரைகளையும் எழுதத் தொடங்கினார். இரவும் பகலும் அவர் தனது அறையில் தங்கி இதை செய்வார். மேலும் அவர் நிறைய ஹரிநாமத்தை

உச்சரிப்பார். மிக அழகாக பஜனைகள் பாடுவார். அவர் எப்போது ஓய்வெடுப்பார் என்பது எங்களுக்கு தெரியாது. அவர் காலையில் சிறிது நேரம் மட்டுமே உறங்குவார். ஏனென்றால் அவர் இரவு முழுவதும் விழித்திருப்பார். பகல் முழுவதும் எங்களுடன் தங்குவதில் அவர் மிகவும் மகிழ்ச்சி அடைவார். மேலும் இதைப்பற்றி தெரிந்துகொண்ட போது எங்கள் குருதேவரும் மகிழ்ச்சியடைந்தார்.

நாங்கள் அபய சரணரவிந்த பிரபுவிடம் ஸ்ரீமத் பாகவத வகுப்புகளை தொடர்ந்து வழங்குமாறு கேட்டுக் கொண்டோம். பொதுவாக அதிகமான பக்தர்கள் கலந்து கொள்ள மாட்டார்கள். ஏனென்றால் அப்போது எங்களில் சிலர் மட்டுமே மடத்தில் வசித்து வந்தனர். நாங்கள் அப்போது தான் கேசவ்ஜி கௌடிய மடத்தில் கோயிலை தொடங்கிக் கொண்டிருந்தோம். எனவே எங்களிடம் ஐந்து அல்லது பத்து பேர் மட்டுமே இருந்தனர். ஆனால் மதுராவிலிருந்து பெரும்பாலும் மிக உயர்ந்த கற்றறிந்தவர்கள் அவர் பேசுவதைக் கேட்க வருவார்கள். வங்காள மற்றும் உத்தர பிரதேசத்தில் உள்ள கௌடிய மடங்களில் நான் ஒரு நல்ல கீர்த்தனையாளராக அறியப்பட்டேன். அதனால் நான் நன்றாக கீர்த்தனை செய்வேன். அபய சரணரவிந்த பிரபு சொற்பொழிவு ஆற்றுவார். விவாதிக்கப்படும் ஒவ்வொரு வசனத்திற்கும் வார்த்தைக்கு வார்த்தை அவர் அர்த்தம் விளக்குவார். மேலும் மிகவும் புலமை மிக்க அறிஞர்கள் அவரது வகுப்புகளால் ஈர்க்கப்பட்டனர்.

மடத்தில் இருந்த எங்களுக்கு ஸ்ரீசைதன்ய சரிதாமிர்த்த வகுப்புகளை மாலை வேளைகளில் அவர் வழங்குவார். ஸ்ரீசைதன்யா மகா பிரபு மற்றும் அவரது லீலைகள் மீதான பக்தி அவரிடம் மிகவும் ஆழமானதாக இருந்தது. பின்னர் அவர் சன்யாசம் எடுத்த பிறகு, மடத்தில் கிட்டத்தட்ட யாருக்கும் ஆங்கிலம் புரியவில்லை என்றாலும், அவர் இந்த வகுப்புகளை ஆங்கிலத்தில் வழங்குவார். அதற்கு அவர் பயிற்சி செய்வதாக கூறுவார்.

நான் சில நேரங்களில் அவருடன், “ஓ! நீங்கள் உங்கள் குழந்தைகள் மற்றும் மனைவியை பார்த்துக் கொள்ள முயற்சி செய்யலாம். ஆனால் அவர்களோ உங்களை நிராகரிக்கிறார்களே!” என்று கேலி செய்வேன். அவரது மகன்களில் ஒருவர் மிகவும் எதிராகவும், மற்றொருவர் ஓரளவு சாதகமாகவும் இருந்தாலும் சாதகமாக இருந்த மகனுக்கு தன் தந்தைக்கு சேவை செய்ய விருப்பமில்லை. எனவே, நான் அவரிடம் "பிரபு நீங்கள் ஏன் எங்கள் அனைவரிடமிருந்தும் அதிக சேவைகளை எடுக்க கூடாது? தயவு செய்து அங்கு திரும்பி செல்ல வேண்டாம். நான் வீடு வீடாக சென்று பிச்சை எடுத்து உங்களுக்கு அரிசி மற்றும் வேறு எந்த பொருட்களையும் பெற்று தர ஏற்பாடு செய்வேன்” என்றேன்.

பய சரணரவிந்த பிரபு முதன்முதலில், மதுராவிற்கு எங்களுடன் தங்க வந்தபோது, அவருக்கு ஒரு நோய் இருந்தது. அதை அவர் பணிவாகவும் அமைதியாகவும் பொறுத்துக் கொண்டார். அவர் மருந்துகளில் நிபுணத்துவம் பெற்றவர் என்பதால், தேவைப்படும் போதெல்லாம் ஆயுர்வேதம் அல்லது ஹோமியோபதி மருந்துகளை மட்டுமே பயன்படுத்தினார். அலோபதி சிகிச்சையைத் தவிர்த்தார். அதிர்ஷ்டவசமாக அவர் என்னிடம் நம்பிக்கை வைத்து, "எனக்கு எந்த மருத்துவரிடமும் நம்பிக்கை இல்லை", என்றும் "அவர்கள் அறுவை சிகிச்சை செய்ய கூறினால் நான் இறந்துவிடுவேன்" என்றும் கூறினார். நான் அவரிடம் "நீங்கள் இறக்கமாட்டீர்கள்" என்று கூறினேன். அவர் தன் குருவின் கட்டளையை ஏற்று, உலகம் முழுவதும் பிரச்சாரம் செய்யவேண்டும் என்ற குருதேவரின் கட்டளையை நிறைவேற்றவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். நான் அவரிடம் "மதுராவில் அனைவரையும் குணப்படுத்தக் கூடிய ஒரு உண்மையான மருத்துவரை நான் அறிவேன்" என்று அவரிடம் கூறினேன். அவர் தன்னை அங்கு அழைத்து செல்ல அனுமதி அளித்தார். பிறகு அறுவைச் சிகிச்சையின் போது நான் அவருடன் இருந்தேன். இந்த விசயங்களை குறிப்பிட நான் தயங்குகிறேன். ஏனென்றால் நான் அவருக்கு மிகவும் உதவி செய்தது போல தோன்றலாம். உண்மையில் அவர் என்னை நெருக்கமான சேவை செய்ய அனுமதித்ததின் மூலம் என் மேல் அவரது கருணையை வெளிப்படுத்தினார் என்பது எனக்கு தெரியும்.

நாங்கள் அடிக்கடி ஒருவருக்கொருவரின் அறைகளுக்கு செல்வோம். சில சமயங்களில் கூடியிருந்து பல்வேறு தலைப்புகளைப் பற்றி ஒன்றாக நகைச்சுவையாகப் பேசுவோம். அவருக்கு நகைச்சுவை மிகவும் பிடிக்கும். அவர் சிரிக்கும்போது அது மிகவும் இனிமையாக இருக்கும். அவர் நகைச்சுவையாக சற்று விளையாடுத்தனமான புன்னகையுடன் நகைச்சுவையாக கூறுவார். நாங்கள் பிரகலாத சரித்திரம் மற்றும் ஸ்ரீமத் பாகவதத்தின் பத்தாவது காண்டம் போன்ற தலைப்புகளைப் பற்றி பேசுவோம். பல தத்துவ விவாதங்களையும் நடத்தினோம். நாங்கள் ஒன்றாக சேர்ந்து பல வேதங்களை படித்தோம். மேலும் அவர் கௌடிய பத்திரிக்கையில் எழுதிய கருத்துக்களை ஆழமாக விவாதிப்பார். சில சமயங்களில் அவர் என் குருதேவரின் ஒன்று, இரண்டு, மூன்று, அல்லது ஐந்து சீடர்களுடன் உரையாடுவார். அவர் பேசுவதைக் கேட்க சில பெரிய அதிகாரிகளும் மற்ற முக்கிய மனிதர்களும் வந்தார்கள். அவர்கள் "ஓ! அபய சரணாரவிந்த பிரபு மிகவும் கற்றறிந்தவர், முன்னேறியவர்" என்று கூறுவார்கள்.

அவருக்கு சமையலில் மிகுந்த ஆர்வம் இருந்தது. அனைத்து கௌடிய வைஷ்ணவர்களும் கிருஷ்ணருக்காக சமையலில் நிபுணத்துவம் பெற்றிருக்கவேண்டும் என்று அடிக்கடி கூறுவார்.

கேசவ்ஜி கௌடிய மடத்தில் தங்கியிருந்த பல மாதங்களில் நாங்கள் இருவரும் ஒவ்வொரு நாளும் மாலை வேளையில் ஒன்றாக சந்திய ஆர்த்தி செய்வோம். அவர் எப்போதும் மிருதங்கத்தை மிக திறமையாக வாசிப்பார். நான் கர்தால்களை வாசித்து பாடுவேன். அவர் என் பாடல்களை மிகவும் விரும்பினார். எப்போதும் என்னை கீர்த்தனைக்கு தலைமை தாங்குமாறு கேட்டுக்கொள்வார். ஒருவர் என்னிடம் வந்து "ஏன் பிரபு பாடுவதில்லை? அவருக்கு அழகான குரல் இருக்கிறதே" என்று கேட்டார். அதற்கு நான் "ஆம் அவர் நிச்சயமாக நன்றாக பாடுவார். ஆனால் சில சமயங்களில் அவர் ஆழ்ந்த உணர்வுகளை அனுபவித்து அழுவதால் அவர் பாடுவதில்லை" என்று பதிலளித்தேன். அவரது சில கேசட் பதிவுகளிலும் இதை கேட்டிருக்கிறேன்.

## *1.7. சன்னியாசம் ஏற்றுக்கொள்ளுதல்*

முன்னால் ஒரு சமயம் அவர் 'பெங்கால் கெமிக்கல்' என்ற நிறுவனத்தில் மேலாளராக இருந்தார். அதில் அவர் மிகவும் நிபுணத்துவம் பெற்றிருந்ததால் வேறொரு நிறுவனத்தையும் உண்டு பண்ணியிருந்தார். ஆனால் அதில் பல சிக்கல்கள் இருந்தன. அதனால் பின்னர் அவர் அலகாபாத்திற்கு வந்து மிகப் பெரிய மருந்தகம் ஒன்றை நிறுவினார். ஆனால் சிறிது காலத்திற்கு பிறகு அதுவும் சிரமத்தை ஏற்படுத்தியது. இருந்தாலும் அவர் தொழிலில் அதிமாக ஈடுபட்டார். ஆனால் ஸ்ரீகிருஷ்ணர் அதை தொடர அனுமதிக்கவில்லை. பின்னர் அவர் இங்கு கேசவ்ஜி கௌடிய மடத்திற்கு வந்தார்.

1959-ஆம் ஆண்டு நாங்கள் ஒருமுறை நெருக்கமாக பேசிக் கொண்டிருந்த போது என்னிடம், "நான் முதன் முதலில் ஸ்ரீல பக்தி சித்தாந்த சரஸ்வதி பிரபுபாதாவைச் சந்தித்து அவர் எனக்கு தீட்சை அளித்தபோது நான் மேற்கத்திய நாடுகளில் ஆங்கிலத்தில் பிரச்சாரம் செய்யவேண்டும் என்று அவர் என்னிடம் கூறினார். 20 ஆண்டுகளுக்கு முன்பு கொல்கத்தாவிலும் அவர் அதையையே மறுபடியும் என்னிடம் கூறினார். அவர் மீண்டும் மீண்டும் அதையே என்னிடம் கூறினார். நான் அஞ்சியது என் தலையில் வந்து விழுந்து விட்டது. இப்போது என்னால் வெற்றிகரமாக தொழிலில் முன்னேற முடியாது என்பதை நன்றாக உணருகிறேன்" என்று கூறினார்.

அதற்கு நான் "தயவு செய்து இதற்கு இன்னமும் முயற்சி செய்யாதீர்கள். ஏனெனில் இந்த ஜட உலகில் வணிகத் திறமையுள்ள எவரும் இதை செய்யலாம். இதைச் செய்ய நீங்கள் ஒரு சாதாரண நபர் அல்ல. ஸ்ரீகிருஷ்ணர் மற்றும் உங்கள் குருதேவர் நீங்கள் மேற்கத்திய நாடுகளில் சென்று பிரச்சாரம் செய்ய வேண்டும் என்று விரும்புகிறார்கள். நீங்கள் செய்யவேண்டிய

முக்கியமான இந்த ஒரு வேலை மட்டுமே பாக்கி இருக்கிறது. அதற்கு நீங்கள் மிகவும் தகுதியானவர்" என்று பதிலளித்தேன். நாங்கள் இருவரும் இதைப்பற்றி நட்புடன் பேசி சிரித்தோம்.

குருதேவரும் அபய சரணாரவிந்த பிரபுவும் ஒன்றாக வாழ்ந்து சேவை செய்தவர்கள். இருவரும் அறிவுசார்ந்த ஜாம்பவான்கள், உயர்வர்க்க குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். மிகவும் புத்திசாலிகள். எனவே நான் அபய சரணாரவிந்த பிரபுவை என் குருதேவரிடமிருந்து சன்யாசம் ஏற்றுக்கொண்டு பின்னர் மேற்கத்திய நாடுகளில் பிரச்சாரம் செய்ய செல்லுமாறு ஊக்குவித்தேன். பின்னர், என் குருதேவர் நவத்திவீபிலிருந்து வந்த போது நான் இதைப்பற்றி அவரிடம், "அபய சரணாரவிந்த பிரபு உங்கள் நண்பர். நீங்கள் மூத்தவர் என்பதால் அவர் உங்களுக்கு கட்டுப்பட்டு நடப்பார்” என்று கூறினேன். குருதேவர் ஒரு சன்யாசி. அபய சரணாரவிந்த பிரபு கிரகஸ்த வேசத்தில் கிரகஸ்தரின் உடை அணிந்திருந்தார்.

முன்னதாக பூஜ்யபாத அபய சரணாரவிந்த பிரபு எங்களுடன் இங்கே தங்கியிருப்பதாக நான் குருதேவருக்கு கடிதம் எழுதியிருந்த போது அவர் என்னிடம், "அபய சரணாரவிந்த பிரபு என் நெருங்கிய நண்பர். அவருக்கு எல்லா மரியாதையும் வசதிகளையும் கொடுங்கள்" என்று கூறினார். நான் அவரை 1947-இலிருந்தே அறிந்திருந்தேன். அவர் எவ்வளவு உயர்ந்த தகுதிவாய்ந்தவர் என்று நான் உணர்ந்திருந்தேன். பூஜ்யபாத ஸ்ரீல ஸ்ரீதர மகாராஜா, ஸ்ரீல ஸ்ரௌதி மகராஜா மற்றும் ஸ்ரீல குருதேவர் ஆகியோர் அவருக்கு எப்போதும் மிகுந்த மரியாதை கொடுத்து, அவர் சொல்வதை கேட்பார்கள். அவர் ஒரு கிரஹஸ்தராக இருந்தாலும் கூட இந்த நேரத்தில் அவர் சன்யாசம் பெறுவதற்காக எனது குருதேவரை அணுகுமாறு மீண்டும் மீண்டும் கேட்டுக் கொண்டேன். பின்னர் குருதேவரும் அபய சரணாரவிந்த பிரபுவை அழைத்து, "நாராயண மகாராஜாவும், மற்ற எல்லா சிறுவர்களும் உங்களை சன்யாசம் ஏற்க ஊக்குவிக்கிறார்கள். நானும் இந்த கருத்தை ஆதரிக்கின்றேன். துறவு நிலை (சன்யாசம்) ஏற்க நீங்கள் தயங்காதீர்கள். அதற்கு நீங்கள் மிகவும் தகுதியானவர். தயவு செய்து இப்போதே சன்யாசம் ஏற்றுக்கொள்ளுங்கள். அது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.” என்றார்.

அபய சரணாரவிந்த பிரபுவும் இவ்வாறு சன்யாசம் ஏற்க ஒப்புக்கொண்டார். அடுத்த நாளே விழா நடைபெற்றது. அந்த நாள் மிகவும் மங்களகரமான விஸ்வரூப மகோத்சவம். அபய சரணாரவிந்த பிரபு என்னிடம், "நான் எப்படி என்னை தயார் செய்து கொள்வது?" என்று கேட்டார். நான் அவரிடம், "நீங்கள் கவலைப்படவே வேண்டாம் நான் எல்லாவற்றையும் ஏற்பாடு செய்கிறேன்" என்றேன். நான் பகிரவேஷம் (சன்யாச மேல் துணி)

மற்றும் ஒரு தண்டத்தை என் கைகளால் தயார் செய்தேன். இவற்றை எப்படி அணிய வேண்டும் என்றும் கற்றுக்கொடுத்தேன். பின்னர் நானே அக்னி ஹோமம் செய்தேன். அகிஞ்சன கிருஷ்ணதாஸ பாபாஜி மகாராஜாவும் அன்று வந்தார். சேஷசாயி பிரம்மச்சாரி, குஞ்ச பிஹாரி பிரம்மச்சாரி, பாரிஜாதக மகாராஜா, மற்றும் பலர் இருந்தனர். விழா முடிந்ததும் வந்திருந்த பக்தர்களில் பெரும்பாலோர் புறப்பட்டுவிட்டனர்.

சனாதன பிரபுவும் அபய சரணாரவிந்த பிரபுவுடன் சன்யாசத்தை ஏற்றுக்கொண்டு, 'பக்திவேதாந்த முனிமகராஜா' என்ற பெயரைப் பெற்றார். அப்போது அவருக்கு 90 வயது. அவர் அபய சரணாரவிந்த பிரபுவிடம், "நீங்கள் சன்யாசம் ஏற்க ஒப்புக்கொண்டால் நானும் அவ்வாறே செய்வேன்" என்று கூறியிருந்தார். ஆனால் இப்போது அவர் ஸ்ரீகிருஷ்ணரின் நித்ய சேவையில் சேர்ந்து விட்டார். இப்போது அவர் இங்கு இல்லை.

நான் யக்ஞ மந்திரங்களை ஓதி சன்யாசம் ஏற்கும் விழாவை நடத்தினோம். அபய சரணாரவிந் பிரபுவின் நெருங்கிய ஆன்மீக சகோதரர் மற்றும் நண்பரான அகிஞ்சன கிருஷ்ணதாஸ பாபாஜி மகராஜா காலை 8 மணி முதல் பிற்பகல் 3 மணி வரையிலும் ஹரே கிருஷ்ண மஹா மந்திரத்தை உச்சரித்தார். பின்னர் எனது குருதேவர் அவருக்கு சன்யாச மந்திரத்தை வழங்கினார். அவருக்கு கொடுத்த சன்யாச பெயர் 'சுவாமி '. இது உண்மையான சந்நியாச பெயர்களில் ஒன்றாகும். இதன் பொருள் 'கட்டுப்பாட்டாளர்' மற்றும் 'எஜமானர்' என்பதாகும். பக்திவேதாந்தர் என்ற பட்டம் ஏற்கனவே கல்கத்தாவில் அவரது சில ஆன்மிக சகோதரர்களால் வழங்கப்பட்டது. மேலும் மகாராஜா என்பது துறவி வரிசையில் உள்ளவர்களுக்கு ஒரு முறையான பெயராகும்.

ஸ்ரீல பக்திவேதாந்த சுவாமி மகராஜா தனது குருதேவருக்கு செய்யும் சேவையில் உறுதியாகவும் உண்மையாகவும் இருந்ததால் பல ஜீவன்களின் இதயங்களை கட்டுப்படுத்தியவர். அதனால் சுவாமி என்ற இந்த பெயர் மிகவும் பொருத்தமானது. அதனால் தான் அவரை அன்புடன் சுவாமிஜி என்று அழைக்கிறோம், எந்த பொதுவான முறையிலும் அல்ல, மாறாக மிகுந்த மரியாதை காட்டுகிறோம் (இணைப்பு 4-ஐ பார்க்கவும்). விழாவிற்குப் பிறகு குருதேவர் ஸ்ரீல பக்திவேதாந்த சுவாமி மகாராஜாவை சொற்பொழிவாற்றுமாறு கேட்டுக்கொண்டார். சுவாமி மகராஜா ஆங்கிலத்தில் பேச தொடங்கினார். ஆனால் கிட்டத்தட்ட அங்கு இருந்த அனைவருக்கும் அந்த மொழி புரியவில்லை. இந்த நேரத்தில்தான் தனது குருதேவரின் குறிப்பிட்ட கட்டளைகள் ஆங்கில மொழியில் பிரச்சாரம் செய்யவேண்டும் என்பதை நினைவு கூர்ந்ததாக அவர் விளக்கினார். அவர் மேலும் கூறினார், “எனது ஆன்மிக சகோதரர் ஸ்ரீல பக்தி பிரக்ஞான கேசவ கோஸ்வாமி

மகாராஜாவிடமிருந்து சன்யாசத்தை ஏற்றுக்கொள்ளும் பெரும் அதிர்ஷ்டம் எனக்கு கிடைத்தது. நான் அவரை நீண்ட காலமாக அறிந்திருந்தேன். அவர் எனது நெருங்கிய நண்பர். அவர் நமது ஜகத்குரு ஸ்ரீல பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூரின் உண்மையான சீடர். அவர் இந்த சன்யாச ஒழுங்கினை எனக்கு அன்புடன் வழங்கினார். மேலும் ஸ்ரீல நாராயண மகாராஜாவும், ஸ்ரீல முனி மகாராஜாவும் இதை செய்ய எனக்கு உத்வேகம் அளித்துள்ளனர். சன்யாச ஒழுங்கு என்பது ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் உபதேசங்களையும் குருவின் உபதேசங்களையும் எல்லா இடங்களிலும் பிரச்சாரம் செய்வதாகும். எனது குருதேவர் மேற்கத்திய நாடுகளில் ஆங்கிலத்தில் பிரச்சாரம் செய்ய எனக்கு அறிவுறுத்தினார். அதனால் தான் நான் ஆங்கில கட்டுரைகளையும் புத்தகங்களையும் எழுதுகிறேன். இந்த நோக்கத்தை உலகம் முழுவதும் பிரச்சாரம் செய்ய, ஸ்ரீகிருஷ்ணர், குருதேவர், மற்றும் அனைத்து வைஷ்ணவர்களையும் எனக்கு சக்தி அளிக்குமாறு பிரார்த்தனை செய்கிறேன். “

அவரது உரையின் பகுதிகள் மற்றும் சன்னியாச விழாவின் விளக்கம் நமது பாகவத பத்திரிகையில் ஒரு செய்தி கட்டுரையாக அச்சிடப்பட்டன. நமது குருதேவர் ஸ்ரீல பக்திவேதாந்த சுவாமி மகாராஜா மற்றும் ஸ்ரீல பக்திவேதாந்த முனி மகாராஜா இடையே அமர்ந்திருக்கும் புகைப்படம் ஒன்று அன்று எடுக்கப்பட்டது. குஞ்ச பிஹாரி பிரம்மச்சாரி முன்னாளில் ஒரு பணக்கார பக்தராக இருந்தார். மேலும் எங்கள் மடத்தின் கட்டுமான பணிக்கு நிதியுதவி செய்திருந்தார். எனவே இப்போது அவர் ஒரு புகைப்பட கலைஞரின் புகைப்படத்திற்காக சேமித்துவைத்திருந்த ஐந்து பைசாவை மகிழ்ச்சியுடன் நன்கொடையாக வழங்கினார். எனவேதான் இன்று நாம் அனைவரும் இந்த சன்யாச உருவ படத்தை மதித்து வணங்குகிறோம்.

ஸ்ரீல பக்திவேதாந்த சுவாமி மகாராஜாவின் சன்யாஸ ஏற்பு நிகழ்ச்சியில் பங்கேற்று உதவுவது எங்களுக்கு கிடைத்த ஒரு சிறப்பான பாக்யம் ஆகும். விழாவிற்கு அடுத்த மூன்று நாட்களுக்கு பிறகு கிருஷ்ணதாஸ் பாபாஜி மகாராஜா ஸ்ரீல பக்திவேதாந்த சுவாமி மகாராஜாவின் அறையில் தங்கினார். அவர்கள் குறிப்பாக ஒருவருக்கொருவர் நெருக்கமாகவும் ரகசியமாகவும் இருந்தனர். இதற்கு பிறகு ஸ்ரீல சுவாமி மகாராஜா ஆக்ராவிற்கு சென்று அவர் எற்பாடு செய்த ஒரு நிகழ்ச்சியில் பிரச்சராம் செய்தார். அவர் எப்போதும் வந்து சென்று கொண்டிருந்தார். குருசேவையிலும் ஈடுபட்டார். அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு நாங்கள் அவரது அறையை அவருக்காக திறந்து வைத்திருந்தோம். அந்த நேரத்தில் அவர் தனது சில புத்தகங்களை எழுதினார். அதாவது 'வேறு கிரகங்களுக்கான எளிதான பயணம்' என்ற புத்தகத்தை இங்கே எழுதினார். அவரது ஸ்ரீமத் பாகவதத்தில் மூன்று தொகுதிகள்

இன்னும் அச்சிடப்படவில்லை. எனவே அவர் அவற்றை இங்கேயே எழுதி திருத்தம் செய்வதை தொடர்ந்தார். பின்னர் கையெழுத்து பிரதிகள் டெல்லியில் உள்ள பத்திரிக்கைகளுக்கு வழங்கப்பட்டு படிப்படியாக வெளியிடப்பட்டன. அவர் 'Back to Godhead', மற்றும் பிற வெளியீடுகளையும் எழுதிக்கொண்டிருந்தார். அவர் முன்பு கொல்கத்தாவிலும் அலகாபாத்திலும் சில மொழிபெயர்புக்களை செய்திருந்தார். அதனால் இங்கே அவரால் எளிதில் கவனம் செலுத்த முடிந்தது. இதனால் அவர் நிறைய சாதித்தார்.

சிலர் சன்யாசம் எடுப்பதை சிறப்பாக கருதுவதில்லை. சிலர் சன்யாசம் எடுப்பதை மிகவும் மதிப்பு மிக்கதாகவோ, அல்லது மிகவும் முக்கியதுவம் வாய்ந்ததாகவோ கருதுவதில்லை. ஆனால் அது உண்மையில் மிக மிக முக்கியமானது. ஶ்ரீல சுவாமி மகாராஜா சன்யாசம் எடுக்காமல் இருந்திருந்தால் மேற்கத்திய நாடுகளில் அவர் பிரச்சாரம் செய்திருக்க மாட்டார் என்று நான் நினைக்கிறேன். ஶ்ரீல சுவாமி மகாராஜாவே தனது புத்தகங்களில் பிரச்சாரத்திற்காக துறவறத்தை ஏற்றுக்கொள்வது சாதகமானது என்று விளக்குகிறார். இந்தியாவில் அனைவருக்கும் சன்யாசிகள் மீது மரியாதை உண்டு. சன்யாசத்தில் ஒருவர் எதையாவது விட்டு விடுகிறார் என்று கருதுகிறோம். ஆனால் அவர் அனைத்தையும் பெறுகிறார். ஶ்ரீமத் பாகவதத்தில் முகுந்த சேவன விரதத்தில் விளக்கப்பட்டுள்ளபடி ஒரு சந்நியாசி நினைக்கிறார்: "நான் ஶ்ரீகிருஷ்ணரையும் ஶ்ரீமதி ராதாராணியையும் மட்டுமே நேசிக்கிறேன். எனக்கு வேறு எதுவும் தெரியாது."

ஶ்ரீல ரூபகோசுவாமி, ஶ்ரீல ரகுநாத தாஸ கோஸ்வாமி, மற்றும் பிற கோஸ்வாமிகள் நமக்கு வழங்க முயற்சிக்கும் ஶ்ரீகிருஷ்ண பிரேமயை அடைவதற்கு சன்யாச மந்திரம் மிகவும் உதவியாக இருக்கிறது. மேலும் இது எல்லா சாதனைகளையும் விட உயர்ந்ததாகும். ஶ்ரீசைதன்ய மகா பிரபு இந்த வகையான கிருஷ்ண பிரேமத்தை வழங்கவே வந்தார். எனவே சந்நியாசத்தை எடுத்துக் கொள்வது மிகவும் முக்கியமானது. இது ஒரு சிறிய விஷயம் என்று நினைக்கவேண்டாம்.

## *1.8. ஶ்ரீ ராதா - தாமோதரர் கோவிலில்*

ஶ்ரீல சுவாமி மகாராஜாவும் நானும் சன்யாசத்தை பொறுத்தவரை ஆன்மிக சகோதரர்கள். நான் அவருக்கு முன்பு 1954-இலேயே சன்யாசம் பெற்றேன். அவர் 1959-இல் சன்யாசம் பெற்றார். இருப்பினும் நான் எப்போதும் அவரை என்னை காட்டிலும் உயர்ந்தவராக கருதினேன். அவரை என்து சிக்ஷா குருவாக நடத்தினேன். ஆனால் சுவாமி மகராஜா என்னை ஒருபோதும் சீடனாக நடத்தவில்லை. மாறாக அவர் எப்போதும் என்னை ஒரு

நெருங்கிய நண்பராகவே ஏற்றுகொண்டார். நாங்கள் ஜபம் செய்யும்போதும், கீர்த்தனை செய்யும் போதும், சில சமயங்களில் ஒன்றாக சப்பத்தி செய்யும்போதும், அவர் என்னை அவருடன் ஒரே இருக்கையில் அமரவைத்தார். ஸ்ரீராதா தாமோதரர் கோயிலில் அவர் சப்பாத்திகளை உருட்டி தருவார். நான் அவற்றை நெருப்பில் வாட்டி எடுப்பேன். பிறகு நாங்கள் அவற்றை ஸ்ரீராதா கிருஷ்ணருக்கு நெய்வேத்யம் செய்து பிரசாதமாக உண்போம்.

நாங்கள் இருவரும் ஒரே படுக்கையில் ஒன்றாக அமர்ந்திருப்போம். ஒரு முறை நான் அவரைப் பார்க்க சென்றபோது நான் என்னுடைய சால்வையை (மேல் உத்தரியத்தை) கொடுத்தேன். ஏனென்றால் அவர் தனது படுக்கையில் விரிக்கக் கூட சால்வை வைத்திருக்கவில்லை. ஒரே ஒரு கிழிந்த போர்வை மட்டுமே அவரிடம் இருந்தது. சுவர்கள் இடிந்து விழுந்த போதிலும் அவர் தனது பஜனை மற்றும் சேவையில் மூழ்கி இருந்தார். அதை அவர் கவனிக்கவில்லை. அவர் அந்த புனிதமான தீர்த்தத்தில் அந்த குடிலில் தீவிர தவம் மற்றும் சாதனம் செய்தார். அங்கு அவரது சங்கம் எனக்கு கிடைத்தில் நான் மிகவும் அதிர்ஷ்டசாலி என்று நினைக்கிறேன்.

ஸ்ரீராதா தாமோதரர் கோவிலில் இருந்த ஆண்டுகளில் அவர் தனது மொழிபெயர்ப்புகள் மற்றும் ஸ்ரீமத் பாகவதத்தின் விளக்கங்களை எழுதுவதில் மூழ்கி இருந்தார். நான் அவரை சந்திக்கும் போதெல்லாம் அவருக்கு உதவி செய்ய முயற்சிப்பேன். அந்த நாட்களில் நான் பத்திரிகையை திருத்திக்கொண்டிருந்தேன். அது எனக்கு மிகவும் குறைவான நேரத்தையே விட்டுச் சென்றது. ஆனாலும் அவரது சிறிய பஜனை குட்டிரில் நாங்கள் அடிக்கடி ஒன்றாக சேர்ந்தோம். சில சமயங்களில் ஸ்ரீராதா தாமோதர ஆலய கோஸ்வாமியுடன் பிரசாதம் எடுத்துக்கொள்வோம். நானும் அவரும் ஒன்றாக சேர்ந்து பரிக்கிரமா போவோம், மற்றும் அங்குள்ள மூத்த ஆச்சார்யர்களின் சமாதிகளுக்கு மரியாதை செலுத்துவோம். அதிலும் குறிப்பாக ஸ்ரீல பக்திசிதாந்த ஸரஸ்வதி தாகூர், ஸ்ரீல ஜீவ கோஸ்வாமி, மற்றும் ஸ்ரீல கிருஷ்ணதாஸ ஸ்ரீல கவிராஜ கோஸ்வாமி மற்றும் ஸ்ரீல ரூப கோஸ்வாமி ஆகியோரின் சமாதிகளை வணங்குவாம்.

## *1.9. அமெரிக்கா செல்ல தயார், புறப்படுதல்*

ஸ்ரீல சுவாமி மகாராஜா அமெரிக்கா செல்வதற்கு முன்பு டெல்லியில் நிறைய நேரம் செலவழித்தார். ஏனெனில் அவர் தனது புத்தகங்களை அச்சடித்து விநியோகித்து வந்தார். அவர் ஸ்ரீமத் பாகவதத்தின் மூன்று பகுதிகளை அங்கு அச்சிட்டு வெளியிட்டார். நான் அவருடன் சேவை செய்ய பலமுறை அங்கு சென்றேன்.

நாங்கள் சிப்பிவாடா ஸ்ரீராதா கிருஷ்ண கோவிலில் உள்ள அவரது அறைகள் ஒன்றில் தங்கியிருந்தோம்.

அவர் டெல்லியில் மிகவும் தீவிரமாக பிரச்சாரம் செய்தார். அவர் எங்கு சென்றாலும் பொதுமக்களுக்கு பிரச்சாரம் செய்து வந்தார். அவர் ஸ்ரீராதா கிருஷ்ணர் மற்றும் ஸ்ரீசைதன்ய மகா பிரபுவின் பணியை பற்றி அவர் சந்தித்த மக்கள் அனைவருக்கும் எடுத்துரைத்தார். மேலும் அவர் என்னை தன்னுடன் சேர்த்துக்கொண்டார். பின்னர் அவர் அமெரிக்கா சென்றிருந்த போது அவர் அங்கு உருவாக்கிய பக்தர்களுக்கு தொடர்ந்து பிரச்சாரம் செய்ய என்னை மேலும் ஊக்குவித்தார் (குறிப்பு 5-ஐ பார்க்கவும்).

ஸ்ரீல சுவாமி மகாராஜர் அமெரிக்கா செல்ல புறப்பட்டபோது அவர் தனது பயணத்திட்டங்களை குறித்து என்னிடம் விவாதித்தார். பம்பாயில் (மும்பேயில்) இருந்து சரக்கு கப்பல் மூலம் அட்லாண்டிக் பெருங்கடலை கடந்து 'போஸ்டனுக்கு' பயணம் செய்ய அவருக்கு எப்படி டிக்கெட் கிடைத்தது என்பதை அவர் என்னிடம் கூறினார். மேலும் அவர் தனது பாதை மற்றும் அவர் அங்கு சேரும் இடத்தைப் பற்றி விவரித்தார். அவருக்கு மிகுந்த நம்பிக்கையும் கவனமாக பிரச்சாரம் செய்யும் யுக்தியும் இருந்தது. வைஷ்ணவ நிறுவனங்கள் மற்றும் தங்கும் இடங்களை அமைப்பதே அங்கு அவருக்கு குறிக்கோளாக இருந்தது. பகவானின் புனித நாமத்தில், ஹரே கிருஷ்ண மகாமந்திரத்தில் மிகுந்த நபிக்கையைக் காட்டி புதிய பக்தர்களுக்கு முதலில் இறைச்சி அல்லது மதுவை விடமுடியாத நிலையிலும் பக்தியை தொடங்குவதற்கு தேவையானதை செய்வேன் என்று அவர் கூறினார். அவர் என்னை அவருடன் வரும்படி கூறினார். அதற்கு நான் அவரிடம் "மதுராவில் உள்ள மடத்தை நிர்வகிக்க கட்டளையிட்ட என் குருதேவரின் அனுமதியின்றி நான் செல்ல முடியாது.” என்று மன்றாடி கேட்டுக் கொண்டேன்.

ஒரு நாள் அவர் எனக்கு அறிவித்தார். "இப்போது நேரம் வந்துவிட்டது. நான் போகிறேன்” என்று கூறினார். அவர் கொல்கத்தா துறைமுகத்திற்கு புறப்பட்டு, மாயாபூருக்கு செல்லவிருந்தார். நான் அவரிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு அவருடைய கால் தூசியை எடுத்து என் தலையில் போட்டுக்கொண்டேன். அவர் செல்வதற்கு முன் அவருடன் வழக்கமான கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளும்படி அவர் என்னிடம் கேட்டுக் கொண்டார். நானும் அப்படியே செய்தேன். அடுத்த ஆண்டுகளில் நாங்கள் ஒருவருக்கொருவர் பற்பல கடிதங்களை எழுதினோம். அந்த கடிதங்களில் சில 'ஸ்ரீல பிரபுபாதரின் அமெரிக்காவிலிருந்து கடிதம்' என்ற துண்டுப் பிரசுரமாக அச்சிடப்பட்டுள்ளன. துர்திர்ஷ்டவசமாக அவர் எனக்கு

எழுதிய மற்ற கடிதங்களில் பெரும்பாலானவை இஸ்கான் (ISKCON) சார்பாக ஸ்ரீல பிரபுபாதரின் வாழ்க்கை வரலாற்றை வெளியிடும் பொறுப்பில் இருந்தவருக்கு கடனாக வழங்கப்பட்டது. அவை மீண்டும் திருப்பித் தரப்படவேயில்லை.

பின்னர் அவர் மதுராவில் உள்ள அவரது அறையிலிருந்த தனது புத்தகங்களை அனுப்புமாறு எனக்குக் கடிதம் எழுதினார். அங்கு அவரது தடிமனான புத்தக தொகுதிகள் பல அவரது தனியறையில் சேமிக்கப்பட்டிருந்தன. அவரது புத்தகங்கள் மிகவும் தூசி நிறைந்திருந்தன. நான் அவற்றை சுத்தம் செய்து ஒரு நாள் முழுவதும் பல பெட்டிகளை பேக் செய்தேன். பின்னர் நான் அந்த புத்தகங்களை படகில் நியூயார்க்கிற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் 1996-இல் லாஸ் ஏஞ்சல்ஸ் கோவிலில் உள்ள அவரது அறைகளை நாங்கள் பார்வையிட்டபோது நான் அனுப்பிய அதே புத்தகங்களில் பல தொகுப்புகள், இன்னும் அவரது புத்தக அலமாரியில் இருப்பதை கண்டு நான் மிகவும் நெகிழ்ச்சியடைந்தேன். அவர் கூறிய அனைத்து சேவையையும் நான் உண்மையாக செய்ய முயற்சித்தேன்.

## *1.10. இந்தியா திரும்புதல்*

1967-ஆம் ஆண்டு அவர் இந்தியா திரும்பும் போது நான் அவரையும் அவரது சீடருமான கீர்த்தானந்த தாசரையும் டெல்லி விமான நிலையத்தில் சந்தித்தேன். அவர் தனது தந்தியில் இதை இவ்வாறு செய்யும்படி அறிவுறுத்தியிருந்தார். நாங்கள் சந்தித்த போது அவர் அமெரிக்காவில் செய்த பிரச்சாரத்தைப் பற்றிய பல அற்புதமான நிகழ்வுகளையும் விளக்கங்களையும் என்னிடம் கூறினார். இவை அனைத்தும் தனது குருதேவரின் கருணையும் ஸ்ரீசைதன்யா மகா பிரபுவின் கருணை மற்றும் அவரது சகாக்களின் கருணையே என்று அவர் பணிவுடன் கூறினார். நியூயார்க் நகரத்தில் உள்ள டாம்ப்கின்ஸ் சதுரங்க பூங்காவில் (Tompkins Square Park) அவர் முதன் முதலில் ஹரேகிருஷ்ணா மகாமந்திரத்தை எவ்வாறு உச்சரித்தார் என்பதைப்பற்றி அவர் எனக்கு சொன்ன விஷயம் மிகவும் சிறப்பு வாய்ந்தது ஆகும். அங்கு அவர் பல மணி நேரங்கள் கண்களை மூடிக்கொண்டு ஆழமாக ஜெபித்து கிடைத்த கருணையை என்னிடம் கூறினார்.

நாங்கள் டெல்லியில் சிப்பிவாடா ஸ்ரீராதாகிருஷ்ணர் கோவிலில் ஏழு நாட்கள் ஒன்றாக தங்கியிருந்தோம். ஸ்ரீல சுவாமி மகராஜா சில சமயங்களில் உடல் நலம் சரியில்லாமல் இருந்ததால் அவர் என்னை கீர்த்தானந்த தாசருடன் தனது பிரச்சார நிகழ்சிகளில் பிரதி நிதியாக அனுப்புவார். அவர் எப்போதும் எங்களை மிக வலுவாக பிரச்சாரம் செய்ய ஊக்குவிப்பார். அவர் தனது மேற்கத்திய

வைஷ்ணவத்தை அனைவரும் பார்க்க வேண்டும் என்று விரும்பினார். எனவே டெல்லியில் தனக்கு தெரிந்தவருக்கு ஹரே கிருஷ்ண மகா மந்திரம் பாடவும் பிரச்சாரம் செய்யவும் எங்களை அழைத்துச்சென்றார்.

சில வாரங்களுக்குப் பிறகு ஸ்ரீல சுவாமி மகாராஜரின் மற்றொரு சீடரான அச்சுதானந்த தாசர் விருந்தாவனத்தில் தங்க வந்தார். இந்த இருவரும் ஸ்ரீல சுவாமி மகாராஜரின் சீடர் என்பதால் நான் அவர்களுடன் ஒன்றாக அமர்ந்து அவர்கள் தயாரித்த மகா பிரசாதத்தை ஏற்றுக்கொண்டேன். அனைத்து ஜாதி கோஸ்வாமிகளும் ஸ்ரீல சுவாமி மகாராஜாவின் கிட்டத்தட்ட அனைத்து ஆன்மீக சகோதரர்களும் கீர்த்தானந்த தாசர் மற்றும் அச்சுதானந்த தாசர் அவர்கள் வழங்கிய எந்த பிரசாதத்தையுமோ அல்லது வெறும் தண்ணீரையும் கூட ஒருபோதும் உட்கொள்ள மாட்டார்கள். அவர்கள் மறுத்ததற்கான காரணம் என்ன? அந்த மேற்கத்திய சீடர்கள் முன்பு இறைச்சி சாப்பிட்டவர்கள் என்பதே காரணம். ஆனால் நான் இந்த கொள்கையை எதிர்த்து பேசினேன். ஸ்ரீல சுவாமி மகாராஜாவின் சீடர்களை உண்மையான வைஷ்ணவர்களாக ஏற்றுக்கொள்ள நான் மற்றவர்களை ஊக்குவித்தேன். ஸ்ரீல சுவாமி மகராஜா வெளிநாட்டினருக்கு உபதேசம் செய்வது முழுமையாக அங்கீகரிக்கப்பட்டது. அது மட்டுமின்றி அவர்களும் ஸ்ரீசைதன்யா மகா பிரபு மற்றும் நம் குரு வர்கத்தின் வழியிலிருந்து வந்தவர்கள் என்பதை நான் விளக்கினேன். பெரும்பாலான இந்திய வைஷ்ணவர்கள் இப்போது இதை ஏற்றுக்கொண்டுள்ளனர் என்று நினைகிறேன்.

1967-ஆம் ஆண்டு இந்தியாவிற்கு முதல் முறையாக திரும்பியபோது பரம பூஜ்யபாத ஸ்ரீல சுவாமி மகராஜா எனது குருதேவரை, அதாவது தனது சன்யாச குருவான ஸ்ரீல பக்தி பிரஜ்ஞான கேசவ கோஸ்வாமி மகாராஜாவை சந்திக்க வந்தார். ஆனால் அந்த நேரத்தில் குரு தேவர் உடல் நலம் குன்றி கல்கத்தாவில் படுத்த படுக்கையாக இருந்தார். அப்போது அவர்கள் ரகசியமாக சந்தித்துக் கொண்டனர். அந்த சந்திப்பு தான் இந்த உலகில் அவர்கள் ஒன்றாக சேர்ந்த கடைசி சந்திப்பு. ஸ்ரீல சுவாமி மகாராஜா, ஸ்ரீல பக்தி சித்தாந்த சரஸ்வதி தாக்கூராவுக்கு செய்த பக்தி சேவையைக் கேட்டு என் குருதேவர் (ஸ்ரீல பக்தி பிரஜ்ஞான சேசவ கோஸ்வாமி மகாராஜா) மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார். அவர் தனது பாராட்டுகளைத் தெரிவித்து அவரது விரிவான பிரச்சாரத்தை போற்றினார். மேலும் அந்த பிரச்சார பணிக்கு தான் முழுவதும் உத்துழைக்க உறுதி கொடுத்தார். ஸ்ரீல சுவாமி மகாராஜாவின் எதிர்கால மாயாபூர் கோவிலுக்கு நில தானத்திற்கு எற்பாடு செய்ய எனது குருதேவர் உதவுவதைப்பற்றி அவர்கள் விவாதித்தனர். அந்த சமயம் ஸ்ரீல பக்திவேதாந்த திரிவிக்ரம மகாராஜாவும், ஸ்ரீல பக்தி வேதாந்த வாமன மகாராஜாவும் உடன்

இருந்தனர்.

1968-ஆம் ஆண்டு ஶ்ரீல குருதேவர் (ஶ்ரீல பக்தி பிரஜ்ஞான கேசவ கோஸ்வாமி மகாராஜா) இந்த உலகை விட்டு மறைந்ததற்கு, ஶ்ரீல சுவாமி மகாராஜா தனது சீடர்களுடன் சேர்ந்து அமெரிக்காவிலிருந்து எங்களுக்கு இரங்கல் தெரிவித்து ஒரு தந்தி அனுப்பினார். நவத்வீபத்தில் ஶ்ரீல திரிவிக்ரம மகாராஜாவிற்கு ஒரு நீண்ட கடிதத்தையும் அனுப்பினார். மேலும் வாஷிங்டனில் உள்ள சியாட்டில் என்ற நகரத்தில் ஶ்ரீல குருதேவர் ஶ்ரீல பக்தி பிரஜ்ஞான சேசவ கோஸ்வாமி மகாராஜாவைப் பற்றிய ஒரு சொற்பொழிவை ஆற்றினார். அங்கு அவர் தனக்கு சன்னியாசம் வழங்கிய வரலாற்றை விவரித்தார். அவரின் மீது தன் சன்னியாச குருதேவர் கொண்டிருந்த உயர்ந்த அபிப்பிராயத்தையும் மிகுந்த பாசத்தைப் பற்றியும், அவர் ஶ்ரீகிருஷ்ணரின் உலகத்துக்கு  எப்போது நுழைந்தார் என்பதைப் பற்றியும் விரிவாகப் பேசினார். பின்னர் அவரது சில சீடர்களிடமிருந்து குருதேவர் நித்ய லிலைக்குள் நுழைந்ததைக் கூறும் தந்தியைப் பெற்றபோது  அவர் கண்ணீர் விட்டார் என்று நாம் கேள்விப்பட்டோம்.

ஶ்ரீல  சுவாமி  மகாராஜா ஶ்ரீல திரிவிக்ரம மகாராஜாவுக்கு எழுதிய கடிதத்தில், மேற்கத்திய நாடுகளில் உள்ள தனது அனைத்து கோவில்களிலும் குருதேவர் ஶ்ரீல பக்தி பிரஜ்ஞான கேசவ கோஸ்வாமி மகாராஜாவின் புகைப்படத்தை வைக்க வேண்டி குரு தேவரின் புகைப்படத்தை அனுப்பும் படி கேட்டார். என்னிடமும் அவர் ஒரு படத்தை அனுப்பும் படி கேட்டார். அந்த கடிதத்தில், "தயவு செய்து நம் குருதேவரின் புகைப்படத்தை எனக்கு அனுப்புங்கள், அதனால் எங்கள் அனைத்து கோவில்களிலும் நம் கௌடிய சம்பிரதாய சீட பரம்பரையை  சரியாக முழுவதுமாக காட்சி படுத்த ஒரு உருவ படத்தை வரைய முடியும்" என்று எழுதியிருந்தார் (குறிப்பு 6-ஐப் பார்க்கவும்). ஆனால் எப்படியோ எங்களால் இதை ஒரு போதும் எற்பாடு செய்ய முடியவில்லை. நாங்கள் அதைச் செய்ய முடிந்திருந்தால், அவர் அதைப் பயன் படுத்திருப்பார் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். (குறிப்பு: ISKCON கோயில்களில் ஶ்ரீல பக்தி பிரஜ்ஞான கேசவ கோஸ்வாமி மகாராஜாவின் புகைப்படம் இல்லை என்பது அனைவரும் அறிந்தது)

# 1.11. இந்தியாவில் பிரச்சாரம் செய்தல்

1969-ஆம் ஆண்டு ஸ்ரீல சுவாமி மகாராஜா மீண்டும் நவத்வீபத்திற்கு வந்தார், மேலும் எங்கள் தேவானந்த கௌடிய மடத்தில் ஒரு பெரிய சீடர் குழுவுடன் ஒன்று அல்லது இரண்டு வாரங்கள் தங்கியிருந்தார். வருகை தந்த அனைவருக்கும் தங்குமிட வசதிகள், சிறப்பு பிரசாதம் மற்றும் கொசு வலைகள் வழங்கியதுடன், அனைத்து ஏற்பாடுகளையும் நிகுஞ்ச பிரம்மச்சாரியும் பிற பக்தர்களும் செய்தனர்.

ஸ்ரீல சுவாமி மகாராஜா மாயாபூரில் ஒரு ஆஸ்ரமம் மற்றும் கோவில் கட்ட விரும்பி நிலம் தேடிக் கொண்டிருந்தார், ஆனால் நவத்வீப மக்கள் அதை நவத்வீப நகரத்தில் செய்ய வேண்டும் என்று அவரிடம் கூறினார். மகா பிரபுவின் பிறந்த இடம் பிராச்சீனா மாயாபூரில் இருப்பதாகவும், அங்கு அவரது கோவிலை கட்டும்படியும் அவரை சமாதானப் படுத்த முயன்றனர். ஆனால் அவர், “முடியாது, நான் அதை செய்ய மாட்டேன். நான் அதை ஸ்ரீல பக்தி சித்தாந்த பிரபுபாதரின் பக்கதில் தான் நிறுவுவேன்" என்று முடிவு எடுத்தார். இங்கு தான் ஸ்ரீல பக்திவினோத தாகூர், நவத்வீப நகரத்திற்கு எதிரே, கங்காவின் கிழக்கு கரையில் மாயாபூரையும், யோக பீடத்தையும் நிறுவினார். அந்த நேரம் மழைக்காலமாக இருந்தது. நிலம் எங்கும் வெள்ளத்தில் மூழ்கியிருந்தது. இருந்தபோதிலும், ஸ்ரீல சுவாமி மகாராஜா தனது நிலத்தை அங்கு வாங்க எற்பாடு செய்ய கங்கையின் மறுபுறம் சென்றார்.

ஒரு சமயம், மாயாபூரில் உள்ள அவரது ஆன்மீக சகோதரர்களில் சிலர், அவர் தன்னை "ஸ்ரீல பிரபுபாதர்" என்று அழைக்க அனுமதிக்கக் கூடாது என்று அவரிடம் பரிந்துரைத்தனர். ஏனென்றால் அவர் தூய பக்திக் கொள்கைகளை பிரச்சாரம் செய்யவில்லை. மாறாக, மேற்கத்தியர்களுக்கு தகுந்தாற்போல, கௌடிய மடத்தின் கடுமையான கொள்கைகளை தளர்த்திக் கொடுக்கிறார் என்று அவர்கள் அஞ்சினர். நான் அவர்களிடம் கூறினேன்: "இதனை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் புதிதாக எதையும் மேலும் கீழுமாக சேர்க்கவில்லை. ஆங்கிலத்தில் அவர் நமது உண்மையான நோக்கத்தையே புதிய வடிவில் பிரச்சாரம் செய்து வருகிறார். அவர் செய்வது எதுவும் புதிதல்ல, நான் எதையும் தவறாகப் பார்க்கவில்லை. அவர் ஸ்ரீல பக்தி சித்தாந்த சரஸ்வதி தாகூரர் மற்றும் ஸ்ரீல பக்திவிநோத தாகூரின் சித்தாந்தங்களையே எல்லா இடங்களிலும் அற்புதமாக பிரச்சாரம் செய்கிறார். அவரது சீடர்கள் உண்மையிலேயே குரு-பக்தரை (குரு மற்றும் வைஷ்ணவர்களை) பின்பற்றினால், அவர்கள் அவரது வழியைத் தொடர்வார்கள். அவர் புரட்சிகரமான ஒன்றைச் செய்கிறார். அவர்

செய்யும் பிரச்சாரம் ஒரு பிரச்சனை என்பதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் தனது குருதேவரின் கட்டளைகளை அற்புதமாக நிறைவேற்றுகிறார்.”

நான் இதை மேலும் விளக்கினேன்: “அவர்கள் தங்கள் குருதேவரை 'பிரபுபாதா ' அல்லது ' ஓம் விஷ்ணுபாதா ' என்று அழைக்கலாம். எதிர்கால யுகத்தில், ஸ்ரீல பக்தி சித்தாந்த சரஸ்வதி பிரபுபாதாவின் வழியில் வரும் சீடர்கள் இன்னொரு தகுதி வாய்ந்த ஆன்மிக குருவை 'ஸ்ரீல பிரபுபாதா' என்று அழைக்கலாம், ஏனெனில் இது சாஸ்திரத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீல பக்தி சித்தாந்த சரஸ்வதி தாகூர் ஸ்ரீல பிரபுபாதாவின் சீடர்கள், அவருக்கு மரியாதை செலுத்தும் விதமாக இந்த பெயரை தாங்கள் எடுத்துக்கொள்ள மாட்டோம் என்ற அந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த முடியும். ஆனால் அவரது உயர்ந்த பக்தி மற்றும் உலக பிரச்சாரம் காரணமாகவும், மேலும் அவர் மீதான அவர்களின் பக்தி காரணமாகவும், ஸ்ரீல சுவாமி மகாராஜரின் சீடர்கள் அவரை 'ஸ்ரீல பிரபுபாதர்' என்று அழைப்பதால் எந்த தீங்கும் இல்லை. இந்த காரணத்திற்காகவா நீங்கள் அவரை நிராகரிக்க விரும்புகிறீர்கள்? நான் அதை ஏற்கவில்லை. ஸ்ரீல ஸ்ரீதர மகராஜாவும் நானும் இன்னும் சிலரும் இதை மற்ற பக்தர்களுக்கு குறிப்பாக தனிப்பட்ட முறையில் விளக்கினோம்.

ஒரு சில சந்தர்ப்பங்களில் மாயாபூரில் உள்ள ஸ்ரீல சுவாமி மகாராஜாவின் சில ஆன்மிக சகோதரர்கள், ”ஏன் நீங்கள் 'ஸ்ரீல பிரபுபாதர்' என்ற பெயரை ஏற்றுக்கொண்டீர்கள்" என்று நேரடியாகக் கேட்டார்கள். அதற்கு அவர் அளித்த விளக்கத்தை நாங்கள் ஒரு முறை கேட்டோம்.

அதற்கு பதிலாக அவர், "ஸ்ரீல பக்தி சித்தாந்த சரஸ்வதி தாகூர் இந்த உலகத்தை விட்டு செல்லும் போது, சில ஆன்மிக சகோதரர்கள் அவரது 'ஓம் விஷ்ணு பாதர்' மற்றும் 'பரமஹம்ஸ' போன்ற பெயர்கள் உட்பட அனைத்தையும் எடுத்துக் கொண்டனர். எனக்கு எஞ்சியிருப்பது என்னுடைய 'பிரபுபாதர்' மட்டுமே. அவர் என் பிரபு, என் எஜமானர், நான் எப்போதும் அவரது பாதங்களில் இருக்கிறேன். அவரது பாதங்கள் மட்டுமே எனது ஒரே உடைமை மற்றும் அடைக்கலம். எனவே என் இளம் சீடர்கள் என்னை அப்படி அழைக்கத் தொடங்கியபோது, அதை உண்மை என்று கருதினேன். யாராவது என்னை 'ஸ்ரீல பிரபுபாதர்' என்று அழைத்தால், நான் என் குருதேவரின் தாமரை பாதங்களையும், நான் எப்படி இருக்கிறேன் என்பதையும் மட்டுமே நினைவில் கொள்கிறேன். மற்றவர்கள் என்னை ஒரு குற்றவாளி அல்லது பெருமை என்று நினைத்தால், தயவுசெய்து எனது புரிதலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்” என்று பணிவாக கூறினார்.

அடுத்து வந்த 1970–1977 ஆண்டுகளில், நான் தொடர்ந்து இந்தியா முழுவதும் பயணம் செய்து பிரச்சாரம் செய்து கொண்டிருந்தேன். எங்கள் குருதேவர் இந்த உலகத்தை விட்டுச் சென்றதால், எங்கள் மடங்களில் நிர்வாக விவகாரங்களில் நான் மிகவும் மும்முரமாக இருந்தேன். அந்த ஆண்டுகளில் ஸ்ரீல சுவாமி மகாராஜரும் மிகவும் மும்முரமாக இருந்தார், தொடர்ந்து உலகம் முழுவதும் பயணம் செய்து வந்தார், எனவே அவரும் நானும் அடிக்கடி சந்திக்க முடியவில்லை. துரதிர்ஷ்டவசமாக, 1975-ஆம் ஆண்டு கௌர பூர்ணிமா நேரத்தில் நிறுவப்பட்ட ஸ்ரீகிருஷ்ண-பலராம கோவில் திறப்பு விழாவிற்கு நான் அங்கு இல்லை. அவர் என்னை அழைத்தார், ஆனால் அந்த நேரத்தில் நான் மதுராவில் இல்லை, ஏனென்றால் நாங்கள் நவத்வீபத்தில் மிகவும் மும்முரமாக இருந்தோம். அப்போது பெரும்பாலான ஆண்டுகளில் நான் மதுராவில் இருக்கவில்லை, எனவே அவரும் எங்கள் மடத்தைப் பார்க்க வரவில்லை. அவர் விருந்தாவனத்தில் இருந்தபோது நான் இருந்திருந்தால், நான் அவரை அழைத்திருப்பேன், அவர் வந்திருப்பார்.

மேற்கத்திய நாடுகளில் அவர் பிரச்சாரம் செய்த ஆரம்ப நாட்களில், எங்களில் பலர் அவருக்கு நேரடியாக உதவ விரும்பினோம், ஆனால் அதற்கான நேரம் அப்போது வரவில்லை. மடத்தில் எங்களுடன் சிலர் மட்டுமே வசித்து வந்தனர், நாங்கள் அனைவரும் இந்தியாவில் பிரச்சாரம் செய்வதில் மும்முரமாக இருந்தோம். அவர் செய்த அளவுக்கு நாங்கள் பிரச்சாரம் செய்யவில்லை என்றாலும் நாங்கள் மும்முரமாக இருந்தோம், மேலும் எனது குருதேவர் சில சேவைகளை செய்யும்படி எனக்குக் கட்டளையிட்டிருந்தார். ஸ்ரீல சுவாமி மகாராஜா பெரிய அளவிலும், நாங்கள் சிறிய அளவிலும் மும்முரமாக இருந்தோம். ஆனால் நாங்கள் இருவரும் குரு மற்றும் கௌராங்கருக்கு சேவை செய்வதில் மும்முரமாக இருந்தோம். மற்றொரு சிரமம் என்னவென்றால், அந்த ஆரம்ப நாட்களில் பெரும்பாலான பக்தர்களுக்கு ஆங்கிலம் மிகக் குறைவாகவே தெரியும். குறிப்பாக பேசுவதில் அவர்களுக்கு சிரமம். எனவே சிலர் பக்தியில் மிகவும் வலிமையாக இருந்தபோதிலும், அவர்களால் மேற்கத்தியர்களைச் சந்தித்து அவர்களுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை.

அந்த நேரத்தில், தங்களைத் தகுதி வாய்ந்தவர்களாக வெளிப்படுத்திக் கொள்ளாத சிலர், உயர் நிலை பக்தர்களாக இருந்தனர். இஸ்கான் இந்தியாவில் புதிதாக நிறுவப்பட்டபோது, அவருடன் சேவை செய்ய வந்த ஸ்ரீல சுவாமி மகாராஜரின் ஆன்மீக சகோதரர்கள் மற்றும் அவர்களால் தீட்சை பெற்ற மற்றவர்கள் உட்பட, சுமார் பத்து அல்லது அதற்கு மேற்பட்ட இந்திய பக்தர்களையும் நான் அறிந்திருந்தேன். கிருஷ்ணதாச பாபாஜி மகாராஜா, தீனபந்து பாபாஜி மகாராஜா, கோவர்தன பிரபு,

ஒரிசாவைச் சேர்ந்த ஆனந்த பிரபு மற்றும் பலர் இருந்தனர். ஆனால் அவர்களுக்கு ஆங்கிலம் தெரியாது, அதனால் அவர்கள் முக்கியமற்றவர்களாகத் தோன்றினர். எனவே மேற்கத்தியர்களில் எவருக்கும் அவர்களின் குணாதிசயங்கள் புரியவில்லை. இப்போது கிட்டதட்ட அனைவருக்கும் ஆங்கிலம் பேசத் தெரியும். ஆனால் அப்போது அப்படி இல்லை. ஸ்ரீல சுவாமி மகாராஜருடன் எங்களால் நேரடியாக இணைய முடியாவிட்டாலும், அவர் இவ்வளவு சிறப்புடன் பிரச்சாரம் செய்கிறார் என்பதில் எங்களில் பலபேருக்கு மிகவும் பெருமையாகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

# 2. அத்தியாயம் 2 - ஸ்ரீல பிரபுபாதாவின் மறைவு லீலை

## *2.1. ஸ்ரீல பிரபுபாதாவின் கோவர்த்தனம் செல்ல ஆசை*

(மதுரா வகுப்பிலிருந்து ஒரு பகுதி, 1993)

தனது கடைசி நாட்களில், ஸ்ரீல சுவாமி மகாராஜா தனது சீடர்களிடம், "என்னை கோவர்தனத்திற்கு அழைத்துச் செல்லுங்கள். இப்போதே நான் அங்கு செல்ல விரும்புகிறேன். எனக்கு காரில் செல்ல விரும்பவில்லை. நந்த பாபா, யசோதா-மையா, அனைத்து கோபியர்கள் மற்றும் அனைத்து விரஜவாசிகளைப் போல நானும் மாட்டு வண்டியில் செல்ல விரும்புகிறேன்" என்று கேட்டுக் கொண்டார். அவர் அப்படி ஒரு வாய்ப்பைப் பயன்படுத்த விரும்பினார். ஆனால் அவரால் அப்படி செல்லமுடியவில்லை. இந்த உண்மை எனக்குத் தெரியும். உண்மையில் அவர் தனது ஆன்மா, மற்றும் தனது சூட்சும சரீரத்துடன் அங்கு சென்றார். அவர் எப்போதும் ஸ்ரீல ரூப கோஸ்வாமி, ஸ்ரீல சனாதன கோஸ்வாமி மற்றும் ஸ்ரீல ரகுநாத தாச கோஸ்வாமி ஆகியோருடன் சேர்ந்து தத்-அனுராகி ஜானானுகாமியாக இருக்கிறார். (ஸ்ரீகிருஷ்ணரிடம் தன்னலமற்ற ஆழ்ந்த சுய பக்தி கொண்ட பிருந்தாவன நித்திய வாசிகளைப்பற்றி பக்தி ரசாம்ருதசிந்து, சுலோகம் 8-ஐப் பார்க்கவும் )

கோவர்தனத்திற்குச் செல்ல வேண்டும் என்பதே அவரது விருப்பமாக இருந்தது. இந்த ஆசையின் மூலம் தனது உண்மையான நோக்கத்தைய அவர் வெளிப்படுத்தினார்: “கோவர்தனா, தயவுசெய்து எனக்கு உங்கள் அருகில் வசிக்க இடம் கொடுங்கள்” விரஜ மண்டலம் அனைத்திலும் கோகுலம் தான் சிறந்த இடம். ஏனென்றால் ஸ்ரீகிருஷ்ணர் யசோதையின் வயிற்றில் பிறந்து அவர் தனது குழந்தைப் பருவ லீலைகளை நடத்திய இடமே கோகுலம். கோகுலத்தில் ஏராளமான பசுக்கள், கோபியர்கள் மற்றும் கோபர்கள் இருக்கிறார்கள். ஆவர்களில் முக்கியமான கோபர் ஸ்ரீகிருஷ்ணர் ஆவார். அவர் கோகுலத்தில் வசிக்கிறார். இதில் நந்த-கிராமம், வர்ஷானா, காம்ய-வனம் மற்றும் விருந்தாவனம் ஆகியவையும் அடங்கும். கோகுலம் என்ற புனித தலத்தை விட விருந்தாவனமே சிறந்த இடம். அந்த விருந்தாவனத்தை விடவும் சிறந்தது கோவர்தனம். ஆனால் அந்த கோவர்த்தனத்தில் இரண்டு கண்களான இருக்கும் ராதா-

குண்டமும் சியாம-குண்டமும் இன்னமும் சிறந்தவை. ஸ்ரீ ஸ்ரீராதா-கிருஷ்ணரின் இனிமையான மற்றும் மிகவும் கவர்ச்சிகரமான லீலைகள் அங்கு நடைபெறுகின்றன. பரம-பூஜ்யபாத ஸ்ரீல சுவாமி மகாராஜா அந்த இடத்திற்குச் செல்ல விரும்பினார். ஏனெனில் எல்லா லீலைகளிலும் சிறந்த லீலைகள் அங்கு நடை பெற்றது. அங்கு, ராச-லீலை ஒரு சிறப்பான முறையில் நடைபெறுகிறது. கிரிராஜா கோவர்த்தனத்தில் மிகவும் கவர்ச்சிகரமான கிருஷ்ண-லீலை நடைபெறுகிறது. எனவே பக்தர்கள் “ஓ கிரிராஜா, இந்த அனைத்து லீலைகளையும் காண வேண்டும் என்ற எனது விருப்பத்தை நிறைவேற்றுங்கள்” என்று பிரார்த்தனை செய்கிறார்கள். ஸ்ரீல சுவாமி மகாராஜாவும் அதே கருத்தை மனதில் கொண்டு கோவர்தனத்திற்குச் செல்ல விரும்பினார்.

அவரது வாழ்க்கையின் இலட்சியமும் முக்கிய விருப்பமும் உலகிற்கு விரஜ-பிரேமத்தை வழங்குவதாகும், ஆனால் நாத்திகம் மற்றும் மாயாவாதக் கொள்கைகளை அழித்தார். அவர் வைதீக -பக்தியைப் பிரச்சாரம் செய்வதிலேயே நீண்ட நேரம் செலவிட வேண்டியிருந்தது, ஸ்ரீமத்-பாகவதத்தை முழுமையாக மொழிபெயர்க்கவும், குறிப்பாக பத்தாவது காண்டத்தில் கூறப்பட்டுள்ள லீலைகளை விரிவாக விவரிக்கவும் அவர் விரும்பினார். ஆனால் பகவான் அதற்குள் அவரை தனது நித்ய-லீலைக்குத் திரும்ப அழைத்துக்கொண்டார். ஒருவேளை கிருஷ்ணர் அவரை இனிமேலும் பிரிந்து இருக்க விரும்பவில்லை போலும், எனவே தான் ஸ்ரீல சுவாமி மகாராஜரின் கிரிராஜ கோவர்த்தனரிடம் செல்ல வேண்டும் என்ற ஆசையை, பகவான் தனது கோலோக விருந்தாவனத்தில் உள்ள கிரிராஜ கோவர்த்தனரிடம் திரும்ப அழைத்ததன் மூலம் நிறைவேறியது.

கிரிராஜ கோவர்தனரே நமது முதன்மையான அடைக்கலம். ஏனெனில் பிரேம-பாவம் (தூய பரவச அன்பு மனநிலை), அங்குதான் மிகவும் அதிகமாக உள்ளது. ஸ்ரீல சுவாமி மகாராஜா இந்த கிருஷ்ண-பிரேமத்தின் சிகரத்தை அனுபவித்து, அதை இந்த உலகில் வசிப்பவர்களுக்கு விநியோகிக்க விரும்பினார். எனவே, ஸ்ரீல ரூப கோஸ்வாமி, ஸ்ரீல பக்திவினோத தாக்கூர், ஸ்ரீல பக்தி சித்தாந்த சரஸ்வதி கோஸ்வாமி பிரபுபாதா, மற்றும் என் வணங்கத்துக்கு தக்க என் குருதேவரான ஸ்ரீல பக்தி பிரஜ்ஞான கேசவ கோஸ்வாமி மஹாராஜா ஆகியோரைப் போல ஸ்ரீல பக்தி வேதாந்த சுவாமி மஹாராஜாவும் கோவர்த்தனத்திற்கு அருகில் குடியிருக்க விரும்பினார். விரஜ மண்டலத்தில் பக்தி சாதகர்களும் சித்தர்களும் இருக்க சிறந்த இடம் கோவர்த்தனம் ஆகும். பிரேமை இல்லாத சாதகன் அங்கே பஜனை செய்தால் பிரேமை கிடைக்கும். மேலும் ஒரு பரிபூரண பக்தர் அங்கு சென்றால், ஸ்ரீராதா-கிருஷ்ணரின் நித்ய-லீலையை அனுபவிப்பார். ஸ்ரீராதா-கிருஷ்ணருக்கு மிகவும் பிரியமான மகா-பாவத்தின் தரிசனத்தையும்

அவர் பெறுவார்.

மிகவும் புத்திசாலிகள் ஸ்ரீராதா-குண்டத்தின் கரையில் உள்ள தெய்வீக ஜோடியான ஸ்ரீராதா மற்றும் ஸ்ரீகிருஷ்ணருக்கு சேவை செய்ய விரும்புகிறார்கள். ஸ்ரீல சுவாமி மகாராஜா தனது பக்தி ரசாம்ருத சிந்துவில் இதை விளக்குகிறார். அத்தகைய பக்தர்கள் அங்கு இருக்க விரும்புகிறார்கள். தங்கள் உடலால் அங்கு இருக்க முடியாவிட்டாலும், அவர்கள் மனத்தாலும் இதயத்தாலும் அங்கு வாழ முடியும். ஸ்ரீல ரகுநாத தாஸ கோஸ்வாமி, ஸ்ரீல ரூப கோஸ்வாமி, ஸ்ரீல ஜீவ கோஸ்வாமி, ஸ்ரீல கோபால பட்ட கோஸ்வாமி, ஸ்ரீல ரகுநாத பட்ட கோஸ்வாமி, மற்றும் ஸ்ரீல கிருஷ்ணதாச கவிராஜ கோஸ்வாமி போன்ற பக்தர்கள் அனைவருக்கும் அங்கே நிரந்தர இருக்கைகள் உள்ளன. நீங்கள் அங்கு சென்றிருக்கிறீர்களா? நீங்கள் உயர் வர்க்க மற்றும் பக்தியில் மேம்பட்ட ஒரு பக்தருடனும் அங்கு சென்றால், நீங்கள் ஏதாவது ஒன்றைக் காணலாம். ஏனென்றால் எல்லாமே அங்கு இருக்கிறது.

பாண்டவர்களும் திரௌபதியும் அங்கே இருக்கிறார்கள். கோபியர்கள் அங்கு ஆராதனை (வழிபாடு) செய்கிறார்கள். ஸ்ரீரூப மஞ்சரி மற்றும் ஸ்ரீரதி மஞ்சரி ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ், தங்கள் சூட்சும சரீரத்தில் உயர்ந்த பக்தர்கள் எப்போதும் அங்கே இருப்பார்கள். அங்கே, நாம் அவர்களைப் பின்பற்ற வேண்டும். இதுவே ஸ்ரீல ரூப கோஸ்வாமி மற்றும் ஸ்ரீல ரகுநாத தாஸ கோஸ்வாமியின் மனநிலை, மேலும் ஸ்ரீல பக்திவேதாந்த சுவாமி மகாராஜரின் மனநிலையும் இதுவே.

இதுவே உண்மையில் ஸ்ரீல சுவாமி மஹாராஜரின் உயர்ந்த மகிமை. இந்த மகிமையை ஒருவர் புரிந்து கொள்ளவில்லை என்றால், அவர் துரதிர்ஷ்டசாலி. ஏனென்றால் அந்த நபர் உண்மையில் அவரது மகிமையை அறியவில்லை. அத்தகைய நபரால் அவரை சரியாக மகிமைப் படுத்த முடியாது. பக்தர்கள் அவரது மிக உயர்ந்த குணங்களுக்காக, குறிப்பாக ஸ்ரீமதி ராதிகாவின் மீதான அவரது உயர்ந்த அன்பிற்காகவும் பாசத்திற்காகவும் அவரைப் பாராட்ட வேண்டும். அவர் கோவர்த்தனத்தில் என்றென்றும் இருக்க விரும்பினார் என்பது எனக்கு தெரியும். மேலும் அவர் என்றென்றும் அங்கே சேவை செய்து வருகிறார். ஸ்ரீல ரகுநாத கோஸ்வாமி எழுதிய மேற்கூறிய பிரார்த்தனைகளை அவர் உண்மையில் உணர்ந்தார்.

## *2.2. அவரது கடைசி நாட்களில் அவரை சந்தித்தல்*

ஸ்ரீல சுவாமி மகாராஜா மிகவும் நோய்வாய்ப்பட்டார். எங்கள் சுகானந்த பிரபு அவருக்கு கங்கை நீரால் இயற்கை மருத்துவ மசாஜ் வழங்கி வந்தார். அவர் இங்கிலாந்துக்கு செல்வதற்கு முன்பு, சுகானந்த பிரபு பிருந்தாவனத்திற்கு தினமும் காலையிலும் மாலையிலும் இரண்டு மணி நேரம் மசாஜ் செய்ய பதினான்கு நாட்கள் வந்தார். இந்த மசாஜ்கள் அவருக்கு உதவின. நாங்களும் சில சமயங்களில் அவரைச் சந்தித்துப் பேசினோம். ஒரு முறை அவர் பல நாட்களாக சாப்பிடவோ, தண்ணீர் கூட குடிக்காமலிருந்த நேரத்தில் நாங்கள் சென்றோம். இருப்பினும் அவர் எங்களை அன்புடன் வரவேற்றார். அவர் எப்போதும் செய்வது போல் அவரது சீடர்களால் தயாரிக்கப்பட்ட ஆடம்பரமான மகா பிரசாதத்தை எங்களுக்கு அன்புடன் வழங்கினார். அவரது இளம் மாணவர்கள் தங்கள் குருதேவருக்கும் ஸ்ரீகிருஷ்ணருக்கும் சேவை செய்ய எவ்வளவு நேர்த்தியாக முயற்சி செய்கிறார்கள் என்று அவர் மகிழ்ச்சியடைந்தார். பல நாட்களாக அவரே எதையும் சாப்பிடவில்லை என்றாலும், மிகவும் கவனமாகவும் பாசமாகவும், நாங்கள் ஒவ்வொருவரும் முழு திருப்தியுடன் பிரசாதம் கொள்ள வைத்தார்.

இந்த நேரத்தில் சில ஆன்மீக சகோதரர்களும் உடன் சேர்ந்தவர்களும் அவரது அறையில் அவரைப் பார்க்க வந்தனர். அகிஞ்சன கிருஷ்ணாதாச பாபாஜி மகாராஜா, ஸ்ரீல போன் மகாராஜா, ஸ்ரீல பக்தி பிரமோத பூரி மகாராஜா, ஸ்ரீல பக்தி வைபவ பூரி மகாராஜா, இந்துபதி பிரபு (ஸ்ரீல மாதவ மகாராஜாவின் கோவிலில் இருந்து), ஆனந்த பிரபு மற்றும் பல பக்தர்கள் அவரைப் பார்க்க வந்தனர். சேஷசாயி பிரபு, சுபானந்த பிரபு, பிரேமானந்த பிரபு மற்றும் சில சமயங்களில் எங்கள் பிரம்மசாரிகளுடன் நாங்களும் பல முறை அவருடன் இருந்தோம். இந்த உரையாடல்களில் சில நாடா பதிவுகளில் (டேப் ரெக்கார்டிங்) உள்ளன. ஆனால் அவற்றில் பெரும்பாலானவை வங்காள மொழியில் அல்லது இந்தியில் இருந்தன.

அக்டோபர் மாத தொடக்கத்தில் கார்த்திகை மாதத்திற்கு முன்பு, எங்கள் வருடாந்திர விரஜ-மண்டல பரிக்ரமம் தொடங்கவிருந்த போது, பரம-பூஜ்யபாத ஸ்ரீல சுவாமி மகாராஜா என்னை வரவழைத்தார். அவர் தனது மூத்த சன்னியாசிகள் மற்றும் பலரிடம், “நான் நாராயண மகாராஜாவை சந்திக்க விரும்புகிறேன்” என்று கேட்டுக் கொண்டார். பின்னர் அவர்களில் சிலர் காரில் வந்து, “ஸ்ரீல பிரபுபாதர் உங்களை காண விரும்புகிறார், எனவே தயவுசெய்து

இப்போது வாருங்கள்” என்று என்னிடம் கேட்டார்கள். நான் எங்கள் பரிக்ரமாவில் சாயங்கால சொற்பொழிவு கொடுத்துக் கொண்டிருந்தாலும், நான் உடனடியாக வந்தேன். நான் ஸ்ரீகிருஷ்ண-பலராம கோவிலில் உள்ள அவரது அறைக்கு வந்தபோது, அவர் மிகவும் அமைதியாக இருந்தார். சில சிறுவர்கள் ஹரே கிருஷ்ண மஹா மந்திரத்தைப் பாடிக்கொண்டிருந்தனர். சில சந்நியாசிகளும் மற்ற சீடர்களும் அமைதியாக அமர்ந்து இருந்தனர்.

சிறிது நேரம் கழித்து அவர் கண்களைத் திறந்து என்னை அருகில் வருமாறு கண்களால் சைகை காட்டினார். அவர் இறப்பதற்கு முன் மிகவும் உற்சாகமாக இருந்தார் - அவரது மரணம், மரணம் அல்ல, அவர் ஸ்ரீகிருஷ்ண-லீலாவில் நுழைகிறார். அவர் பேசவில்லை. ஆனால் என்னைக் கண்டதும், அவர் தனது மகிழ்ச்சியை வெளிபடுத்தினார். பக்தர்கள் ஸ்ரீல சுவாமி மகாராஜாவின் விஷேசமான மெட்டில் மிகவும் மென்மையாக ஹரே கிருஷ்ண மகா மந்திரத்தை உச்சரித்துக் கொண்டிருந்தனர். மேலும் அவர் அப்போது யாரிடமும் பேசாமல் இருந்ததை அனைவராலும் காண முடிந்தது. நான் அமைதியாக நின்று அவருக்கு பிராணாமத்தை (சந்தியா பிராணாமத்தை) நின்று கொண்டே சமர்ப்பித்தேன். ஏனென்றால் அங்கு நிறைய பேர் இருந்ததால் என்னால் முழு பிராணாமத்தை அவருக்கு வழங்க இடம் போதவில்லை.

அவர் என்னைப் பார்த்ததும், "ஓ, நாராயண மகாராஜா வந்துவிட்டார்" என்றார். அவர் என்னைத் தனது படுக்கையில் உட்காரச் சொன்னார். அவர் எழுந்து உட்கார முயன்றார். ஆனால் நான் என் கைகளை அவர் மீது வைத்து, "தயவுசெய்து படுங்கள், நான் இங்கே உட்காருகிறேன்" என்றேன். பின்னர் அவர் என்னை அவரது படுக்கைக்கு அருகில் வரச் சொல்லி, "நான் உம்மிடம் தனியாக பேச விரும்புகிறேன்" என்றார். அவர் என்னை அவரது காதுக்கு அருகில் உட்காரச் சொன்னார். அதனால் அவர் சில சீடர்களிடம், "ஒரு நாற்காலியைக் கொண்டு வாருங்கள்" என்று சொன்னார். நான் அவரது காதுக்கு அருகில் நாற்காலியில் அமர்ந்தேன். முதலில் அவர் அழத் தொடங்கினார். அவரது இதயம் உருகியது. தனது ஆழ்ந்த மனத்திலிருந்து என்னிடம், “நாராயணா மகாராஜா, என்னை மன்னிக்கமுடியுமா? நீங்கள் என்னை மன்னிக்க ஒரு காரணம் இருப்பதை நான் உணர்கிறேன். பிரச்சாரத்திற்காக நான் என் சீடர்களிடம் சொல்லக்கூடாத சில விஷயங்களை சொன்னேன். மேலும், என் கௌடிய ஆன்மீக சகோதரர்களைப் பற்றி ஒரு கடிதத்தில் மிகவும் கடுமையாக எழுதினேன். அதன் பின்னர் அது அனைவருக்கும் அனுப்பப்பட்டது. நாம் மட்டும் பிரச்சாரம் செய்கிறோம் என்றும், மற்ற கௌடிய சகோதரர்கள் அவ்வாறு செய்யவில்லை என்றும் குற்றம் சொன்னேன். அவர்கள் பிரச்சாரம் செய்யாத கனிஷ்ட-அதிகாரிகள் என்றும் அதனால் தான்

சும்மா இருக்கிறார்கள் என்றும் சொன்னேன். கௌடிய வைஷ்ணவர்கள் யாரும் எனக்கு உதவவில்லை என்றும் அவர்கள் மகா பிரசாதம் எடுத்துக்கொண்டு தூங்குகிறார்கள் என்றும் சொன்னேன்" என்று கூறினார்.

இந்த நேரத்தில், அவரது சன்னியாசி சீடர்கள் பலரும் பார்த்துக் கொண்டிருந்தனர். அவரது வார்த்தைகளும் மனநிலையும், அவர் தனது இளம் மாணவர்களை எவ்வாறு ஊக்குவிக்க விரும்பினார் என்பது பற்றிய பல விஷயங்களை எனக்கு உணர்த்தியது. நாங்கள் குழந்தைகளுடன் கவனமாக இருப்பதால், அவர் சில சமயங்களில் அவர்களில் சிலரை தனது ஆன்மீக சகோதரர்களுடனும் மற்ற கௌடிய வைஷ்ணவர்களுடனும் சேர வேண்டாம் என்று அறிவுறுத்தினார். புதிதாக வரும் பக்தர்கள் தொந்தரவோ குளப்பமோ அடைவதைத் தடுக்க சில நேரங்களில் வேறு எங்கும் செல்ல வேண்டாம் என்று அவர் அவர்களிடம் கூறினார். அதற்கு ஒரு காரணம் இருந்தது. அவரது கௌடிய ஆன்மீக சகோதரர்களில் சிலர் சில தவறான செயல்களைச் செய்திருந்தனர். மேலும், அவரது சீடர்களால் மறை முகமான, சூட்சும அர்த்தமுடைய இந்திய வழிமுறைகளை புரிந்து கொள்ள முடியவில்லை. மேலும், அவர்களின் உணர்வு திறன் மற்றும் பயிற்சி பெற்ற முறையை புரிந்து கொள்ள முடியாத எந்த ஒரு இந்திய வைஷ்ணவர்களிடமிருந்தும் வரும் விமர்சனங்களால் அவர்கள் மனம் தளர்ந்து விடக்கூடாது என்று அவர் விரும்பினார்.

ஶ்ரீல சுவாமி மகாராஜா நீண்ட காலமாக கௌடிய மடத்தில் உறுப்பினராக இருந்தார். ஆனால் அவர் அனைத்து விதி முறைகளையும் சித்தாந்தங்களையும் அறிந்திருந்தாலும், குறைந்த வருடங்களில் தனது அனைத்து சீடர்களுக்கும் அனைத்தையும் கற்பிக்க முடியவில்லை. அவர் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பல வைஷ்ணவ மேற்கத்தியர்களை வளர்த்து வந்தார். ஆனால் அவர்களுக்கு இன்னும் நமது வேத கலாச்சாரம் மற்றும் சதாச்சாரம் (பக்தி பழக்கவழக்கங்கள்) பற்றி எதுவும் தெரியவில்லை. எனவே அவர் தனது இளம் சீடர்களுக்கு மற்ற உயர்ந்த வைஷ்ணவர்களைத் தவிர்க்க அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தார். ஏனென்றால் அவர்கள் தளர்ந்து விடக் கூடாது என்பதற்காக மட்டுமே. "அவர்கள் முழுமையாகப் பயிற்சி பெறவில்லை என்றாலும், அவர்களின் பக்தி மனப்பான்மை மிகவும் நன்றாக இருக்கிறது. நான் குரு மகாராஜாவையும், ரூபனுக-குருவர்கத்தினரையும் அவர்கள் அனைவரையும் ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கிறேன். ஶ்ரீ சைதன்ய மகாபிரபு, ஶ்ரீ நித்யானந்த பிரபு, ஶ்ரீ பலதேவர் பிரபு நிச்சயமாக அவர்களுக்கு கருணைகாட்டுவார்கள்" என்று அவர் கூறினார்.

ஶ்ரீல சுவாமி மகாராஜா இந்த விஷயங்களையெல்லாம் நினைவில் வைத்திருந்தார். அப்போது அவர் என்னிடம், "நான் இந்த

அபராதத்தைச் செய்துவிட்டேன். எனவே தயவு செய்து மற்ற வைஷ்ணவர்களிடம் இதைச் சொல்லுங்கள். தயவுசெய்து என்னை மன்னியுங்கள். இதனால் எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது" என்று கூறினார். நான் அவரிடம், "நீங்கள் என்னுடைய சிக்ஷா-குரு, மற்றும் தூய வைஷ்ணவர். பக்தி மார்க்கத்தில் இல்லாத எதையும் உங்களால் செய்ய முடியாது என்பது எனக்குத் தெரியும். உங்கள் குருதேவருக்கும் சைதன்ய மஹா பிரபுவுக்கும் சேவை செய்வதற்காக மட்டுமே நீங்கள் இவற்றைச் செய்திருக்கிறீர்கள். நாங்களும் இதைத்தான் செய்கிறோம். நாங்கள் அனைவரும் உங்களுக்குக் கடன்பட்டிருக்கிறோம்; இதில் எந்தக் கேள்வியும் இல்லை. '*பிருதிவிதே ஆச்சே யத நகராதி கிராம*' என்ற வருங்கால கணிப்பு எங்களுக்குத் தெரியும். நீங்கள் ஒரு அற்புதத்தைச் செய்துள்ளீர்கள். அவருடைய மகிமைகளை எல்லா இடங்களிலும் பரப்பியுள்ளீர்கள். நீங்கள் எந்தத் தவறும் செய்யவில்லை என்று நாங்கள் நினைக்கிறோம். எனவே உங்களை மன்னிக்க எனக்கு எதுவும் இல்லை. ஆனால் உங்கள் கோரிக்கையை மூத்த வைஷ்ணவர்களுக்குத் தெரிவிப்பேன். நீங்கள் எனது சிக்ஷா-குரு. நீங்கள் எனக்கு என்ன அறிவுரைகள் கொடுத்தாலும், நான் முழுமையுடன் நேர்மையாக பின்பற்றுவேன்" என்று கூறினேன்.

அவர் கண்களில் இருந்து கண்ணீர் மிகவும் இனிமையாக வழிந்தது. அவர் ஒரு நல்ல வைஷ்ணவர் அல்ல என்பது போல மிகவும் பணிவாக நடந்து கொண்டார். ஆனால் உண்மையில் அவர் ஸ்ரீல நரோத்தம தாஸ தாக்கூர் மற்றும் ஸ்ரீல பக்திவினோத தாக்கூர் போன்றவர். அவர் மேலும் பேசினார். "ஸ்ரீ ஸ்ரீமத் பக்திசித்தாந்த சரஸ்வதி தக்கூரர் பிரபுபாதர் நம் அனைவரையும் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பிரச்சாரம் செய்ய உத்தரவிட்டார். அது அவரது வலுவான ஆசை. அவரது மற்றொரு ஆசை என்னவென்றால், நாம் அனைவரும் **ஒன்றாகப்** பிரச்சாரம் செய்ய வேண்டும் என்பதாகும். நான் ஒரு கணம் கூட வீணாக்கவில்லை. நான் என்னால் முடிந்தவரை முயற்சித்தேன், ஓரளவுக்கு அது வெற்றி பெற்றுள்ளது. நாம் இணைந்து செயல்பட முடிந்தால், ஸ்ரீசைதன்ய மகாபிரபு அறிவித்தது போல், இந்த சங்கீர்த்தன இயக்கம் பெரும் சாத்தியக் கூறுகளைக் கொண்டுள்ளது" என்று அவர் தொடர்ந்து பேசும்போது அவரது குரல் உணர்ச்சியால் அடைக்கப்பட்டது.

பின்னர் அவர் என்னிடம், "என் சீடர்களை கவனித்துக் கொள்ள நீங்கள் உதவ வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அவர்கள் நல்லவர்களாகவும் தகுதியான பக்தர்களாகவும் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அவர்கள் உங்களிடம் வந்தால், தயவுசெய்து அவர்களை கவனித்துக் கொள்ளுங்கள்" என்று கூறினார். அவரது சீடர்களில் பலர் அருகில் இருந்தனர், எனவே அவர் வங்காள மொழியில் மெதுவாகக் கிசுகிசுத்தார், "நான் மேற்கத்திய நாடுகளுக்குச் சென்றபோது, என் வலையில்

ஏராளமான குரங்குகள் சிக்கின. உண்மையில், அவர்கள் தங்களுக்குள் சண்டையிடுவதில் மிகவும் திறமையானவர்கள். அவர்கள் இன்னும் மிகவும் இளமையாகவும் பயிற்சி பெறாமலும் இருக்கிறார்கள். எனவே நான் சென்ற பிறகு நீங்கள் அவர்களுக்கு எல்லா வகையிலும் உதவ வேண்டும் என்று நான் உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன்” என்று கூறினார்.

என் சிக்ஷா-குருவின் இந்த உத்தரவின் வலுவைக் கருத்தில் கொண்டு நான் தயங்கினேன். பின்னர் அவர் என் இரு கைகளையும் தனது கைகளால் பிடித்துக்கொண்டு, என் கண்களை ஆழமாகப் பார்த்து, தன் சீடர்களுக்கு உதவி செய்வதாக உறுதியளிக்கச் சொன்னார். எனவே நான் ஒப்புக்கொண்டேன். எனவே, "எனது திறமைக்கும், பக்தி-சித்தாந்த-தத்துவத்திற்கும் (பக்தியின் முடிவான கூற்றுகளைப் பற்றிய புரிதலுக்கும்) ஏற்ப, நீங்கள் கட்டளையிட்டதால் உங்கள் சீடர்களுக்கு உதவ நான் எப்போதும் தயாராக இருக்கிறேன்" என்று கூறி உறுதிமொழி கொடுத்தேன்.

பிறகு நான் அவரிடம், “நான் அவர்களிடம் ஒன்று சொல்ல விரும்புகிறேன்” என்று சொன்னேன். அவர் உடனடியாக மிகவும் ஆர்வத்துடன் தன் சீடர்களை அழைத்து, “ஓ, நீங்கள் அனைவரும் அருகில் வந்து நாராயண மகாராஜா கூறுவதைக் கேளுங்கள். அவர் என்ன பேசுகிறார் என்பதை உங்கள் இதயங்களுக்குள் ஏற்றுக்கொள்ளுங்கள்” என்று கூறினார்.

பிறகு நான் அவர்களிடம் சொன்னேன், “ஸ்ரீல சுவாமி மகாராஜா இந்த உலகத்தை விட்டு வெளியேறுகிறார் என்று நினைக்காதீர்கள். குருதேவர் நித்தியமானவர். இவ்வளவு உண்மையான குருவையும் வைஷ்ணவரையும் பெற்றிருப்பது உங்களுக்கு அதிர்ஷ்டம். நீங்கள் அவரது பணியை மேற்கொண்டு, மென்மேலும் உற்சாகமாகப் பிரச்சாரம் செய்ய முயற்சிக்க வேண்டும். நீங்கள் பௌதீக விஷயங்களைத் தேடினால், பெயர், புகழ் மற்றும் உலக ஆதாயத்திற்காக நீங்கள் சண்டையிடுவீர்கள். அப்படியானால் நீங்கள் அவரது போதனைகளைப் பின்பற்ற மாட்டீர்கள். நீங்கள் அவரது பணியைப் பின்பற்ற மாட்டீர்கள். நீங்கள் தவறு செய்வீர்கள். எனவே உங்கள் சொந்த நலனைத் தொடராதீர்கள். இவை அனைத்தையும் விட்டுவிடுங்கள். ஸ்ரீல சுவாமி மகாராஜாவுக்கு சேவையாக அவரது பணியைப் பிரச்சாரம் செய்ய, நீங்கள் அனைத்து பக்தர்களுடனும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். ஒரு சிறிய விஷயத்திற்காக மற்றவர்களுடன் சண்டையிட வேண்டாம். சிறிய தவறுகளைக் கண்டுபிடித்து யாரையும் இந்த இயக்கத்திலிருந்து வெளியேற்ற வேண்டாம். நண்பர்களைப் போல, சகோதரத்துவத்துடன் நடந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். அப்போது தான் உங்களால் பிரச்சாரம் செய்ய முடியும். இந்த விஷயங்களில் ஏதேனும் உங்களுக்கு சிரமம் இருந்தால், ஸ்ரீல

சுவாமி மகாராஜா என்னிடம் கேட்டுக் கொண்டபடி, நீங்கள் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு என் இதயத்தின் ஆழத்திலிருந்து உதவ முயற்சிப்பேன்." அப்போது அவர்கள் அனைவரும் நான் சொல்வதைக் கேட்டார்கள். இது ஒரு ஒலி நாடாவில் பதிவும் செய்யப்பட்டது.

ஸ்ரீல சுவாமி மகாராஜா இப்போது மெதுவாக தலையைத் திருப்பி, பக்தர்கள் கூடியிருந்த இடத்தைப் பார்த்தார். பின்னர் அவர்களை கவனத்திற்குக் கொண்டுவருவது போல் மெதுவாகத் தனது கையை உயர்த்தி, "நாராயண மகாராஜா சொல்வதைக் கேளுங்கள். உங்களுக்குள் சண்டையிடாதீர்கள். எனது புத்தகங்களில் நான் அனைத்து வழிகாட்டுதல்களையும் வழங்கியுள்ளேன்" என்றார். பின்னர் அவர் தனது கையைத் தாழ்த்தினார்.

இதற்குப் பிறகு ஸ்ரீல சுவாமி மகாராஜா என்னிடம், "உங்கள் சொந்தக் கையால் எனக்கு சமாதி கொடுக்க வேண்டும் என்று நான் உங்களிடம் பிரார்த்திக்கிறேன். வேறு யாருடைய கைகளிலிருந்தும் சமாதியை எடுக்க நான் விரும்பவேயில்லை. நீங்கள் மட்டும் தான் சரியான நபர் என்று நான் நினைக்கிறேன். எனது சமாதிக்குப் பிறகு, எனது விரஹ-மஹோத்சவத்தை (பிரிவினை விழா) கொண்டாட ஏற்பாடு செய்யுங்கள். விருந்தாவனத்தில் உள்ள ஏழு கோயில்களுக்கும் அனைத்து கௌடிய மடங்களுக்கும் நீங்கள் சிறிது பணம் கொடுக்க வேண்டும். அது உங்களைப் பொறுத்தது - 201 ரூபாய், 1001 ரூபாய் - உங்கள்விருப்பப்படி. நீங்கள் என்ன பரிந்துரைக்கிறீர்களோ அவர்கள் அனைவரும் இந்த வழிமுறைகளைக் கேட்டு பணம் செலுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். மதுராவில் ஒரு மஹோத்சவத்தை (திருவிழா) ஏற்பாடு செய்து, அனைத்து மூத்த வைஷ்ணவர்களையும் விருந்துக்கு அழைக்கவும். பிருந்தாவனத்தில் உள்ள எல்லா வைஷ்ணவர்களையும் கூப்பிடுங்கள். எனக்காக இதைச் செய்ய வேண்டும். மீண்டும் நான் உங்களுக்குச் சொல்கிறேன், நீங்கள் எப்போதும் என் பக்தர்களுக்கு உதவ வேண்டும்.

[ஆசிரியர்களின் குறிப்பு: வரலாற்றுப் பதிவைப் பற்றிய சிறப்பு நுண்ணறிவுக்காக, ஒரு அசல் பதிவு செய்யப்பட்ட பதிவின் படியெடுத்தலில் இருந்து சில பகுதிகளை இங்கே சேர்க்க நாங்கள் தேர்வுசெய்துள்ளோம். இந்த நினைவுகள் மற்றும் தனிப்பட்ட நுண்ணறிவுகள் ஸ்ரீல பிரபுபாதர் புறப்பட்ட சிறிது நேரத்திலேயே ஒரு சத்சங்கத்தில் அவரது மூத்த சீடர்களில் ஒருவரான பாகவத தாஸர் பேசினார், அவர் மேலே ஸ்ரீல நாராயண கோஸ்வாமி மஹாராஜா விவரித்த அதே நிகழ்வில் கலந்து கொண்டார். கூடியிருந்த வைஷ்ணவர்கள் இந்தத் தகவலை மிகுந்த கவனத்துடன் கையாள வேண்டும் என்று நாங்கள் பிரார்த்திக்கிறோம், ஏனெனில் இதுபோன்ற தலைப்புகள்

பொதுவாக பொது விவாதத்திற்கு வராது.]
(1)
"ஸ்ரீல பிரபுபாதர் படுத்திருந்த போது, அவர் ஒரு குறிப்பிட்ட உடல் குறியீட்டை (pose) காட்டினார். ஆனால் அதை எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர் படுக்கையில் படுத்திருந்தார் என்று தான் நாங்கள் நினைத்தோம். ஆனால் அவர் கைகள் ஒரு குறிப்பிட்ட திசையில் இருந்தன, அவரது தலை ஒரு குறிப்பிட்ட திசையில் இருந்தது, அவரது கால்கள் ஒரு குறிப்பிட்ட திசையில் இருந்தன. மேலும் அவர் தனது உடலை ஒரு குறிப்பிட்ட முறையில் வளைத்தார். இதைக்கண்ட ஸ்ரீல நாராயண மகாராஜா, "ஓ, அவர் இன்ன இன்ன முத்திரையில் இருக்கிறார். இது ஒரு வகையான முத்திரை' என்று கூறினார். அவர், 'இது மறைவதற்கு முந்தைய கடைசி கட்டத்தில் முன்னால் யாரோ ஒருவரால் காட்சிப் படுத்தப்பட்டது. இந்த முத்திரை அவர் ஸ்ரீகிருஷ்ணருடன் நடனமாடுவதைக் குறிக்கிறது. அவர் படுக்கையில் இந்த வடிவத்தைக் காட்டும்போது, அவர் ஸ்ரீகிருஷ்ணருடன் நடனமாடுகிறார் என்று அர்த்தம். இது ஒரு நடன ஆசனம்' என்று கூறினார். சிலர் ஸ்ரீல பிரபுபாதருக்கும் ஸ்ரீகிருஷ்ணருக்கும் உள்ள சம்பத்தத்தை புரிந்து கொள்ள முயற்சி செய்யலாம். ஆனால் இந்த முத்திரை ஒரு குறிப்பிட்ட லீலையை குறிக்கிறது.

"ஸ்ரீல நாராயண மகாராஜா பின்னர் தனது பிரம்மசாரிகளை அழைத்து வந்தார். அவருக்கு மதுராவில் ஒரு சிறிய பாடகர் குழு இருந்தது. அவரும் பிரம்மசாரிகளும் ஸ்ரீரூப-மஞ்சரி-பதத்தைப் பாடத் தொடங்கினர். அவருக்கு அழகான குரல், மிகவும் மென்மையான குரல். ஸ்ரீ ரூப-மஞ்சரி-பத, சேய் மோர சம்பத. அவர் மிக மிக மெதுவாகப் பாடினார். அனைவரும் அழுது கொண்டிருந்தார்கள். முழு அறையும் கண்ணீரில் மூழ்கியது. அனைவரும் மிக மிக பதட்டத்துடன் இருந்தனர். பின்னர், இரவு முழுவதும் கீர்த்தனை சென்று கொண்டிருந்தது.

[இந்த இரண்டாவது பதிவு முந்தைய பதிவு செய்யப்பட்ட வகுப்பின் தொடர்ச்சியாகும், ஸ்ரீல பிரபுபாதரின் இறுதி ஐந்து மணி நேரங்களின் போது நவம்பர் 14-ஆம் தேதி நினைவுகளை விவரிக்கிறது.]
(2)
"... ஸ்ரீல பிரபுபாதர் அசாதாரண செயல்பாடுகளை வெளிப்படுத்தத் தொடங்கினார். அவர் படுக்கையில் முன்னும் பின்னுமாக உருளத் தொடங்கினார், அவர் தனது கைகளை காற்றில் அசைத்து, பின்னர் திடீரென்று திகைத்துப் போனது போல் நிறுத்துவார். அவர் எதுவும் பேசவில்லை. பின்னர் அவர் முனங்குவார். பின்னர் திடீரென்று அவர் மிக மிக சத்தமாக ஏப்பம் விடுவார். பின்னர் அவர் கண்ணீர் சிந்துவார், நடுங்குவார். பின்னர் மீண்டும் உருளுவார். இந்த வழியில் அவர் பலவிதமான தோரணைகளை தொடர்ந்து செய்து

கொண்டே இருந்தார். “முதலில் அனைவரும் திகைத்துப் போனார்கள். பின்னர் ஸ்ரீல நாராயண மகாராஜா வந்தார். ஸ்ரீல பிரபுபாதர் கடைசியாக தொடர்பு கொண்டவர் அவர் தான். ஸ்ரீல நாராயண மகாராஜா என்ன சொன்னார் என்று எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால் நான் அவரிடம் ஒரு போதும் அதைப்பற்றிக் கேட்டதில்லை. யாராவது தான் அவரிடம் நேரடியாக அதைப் பற்றி கேட்க வேண்டும். அவர் அறைக்குள் நுழைந்தபோது ஸ்ரீல பிரபுபாதரின் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. அவர் கைகளை அசைத்தார். பின்னர் ஸ்ரீல நாராயண மகாராஜா ஸ்ரீல பிரபுபாதாவின் காதை நோக்கிச் சென்று ஏதோ மந்திரத்தை கிசுகிசுத்தார். அதைக் கேட்டவுடன் ஸ்ரீல பிரபுபாதர் நடுக்கத்தை நிறுத்தினார். ஸ்ரீல பிரபுபாதர் கையை உயர்த்தி ஸ்ரீல நாராயண மகாராஜாவுக்கு ஆசீர்வாதம் கொடுத்து கைகளை குலுக்கினார். ஸ்ரீல பிரபுபாதர் என்ன சொல்கிறார் என்பதை ஸ்ரீல நாராயணமகாராஜா புரிந்து கொண்டார். பின்னர் அவர் கையை கீழே இறக்கினார்.”

## *2.3. அவரது திவ்யமான புறப்பாடு*

நவம்பர் 14-ஆம் தேதி அந்த இறுதி நேரத்தில் நாங்கள் சென்றபோது, அவர் பேசவில்லை. அந்த நேரத்தில் அவரது முகத்தைப் பார்த்தபோது, பிருந்தாவனத்தின் ஸ்ரீகிருஷ்ண லீலைகளை அவர் முழுமையாக மனதினுள் வைத்திருப்பதை உணர்ந்தேன். இது ஸ்ரீகிருஷ்ணரிடமிருந்து கிடைத்த மிகப்பெரிய கருணை என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால் அவர் தனது வாழ்நாள் முழுவதும் ஸ்ரீராதா-கிருஷ்ணருக்கு சேவை செய்த படியே இருந்தார். அந்த சிறப்பின் பலனாக கிருஷ்ண உணர்வை தன்னுள் வாங்கிய படி இருந்தார். அந்த மயங்கிய நிலையில் அவரது கண்கள் மூடப்பட்டு, சிறந்த அறிகுறிகளை வெளிப்படுத்தினார். அது மிகவும் மனதை வருடும் காட்சியாக இருந்தது. அவருக்கு வலி இல்லை, கவனச் சிதறல் இல்லை. அந்த நேரத்தில் அவரது வாய் மிகவும் அழகாக இருந்தது. அது மலர்ந்த ரோஜாவைப் போல, தாமரை மலரைப்போல இருந்தது.

இவை அனைத்தும் ஒரு மிகச் சிறப்பு வாய்ந்த புருஷோத்தமர்களின் அறிகுறிகள் ஆகும். இல்லையெனில், மற்ற நபர்களாக இருந்தால், “நான் இறக்க போகிறேன், நான் இறந்து கொண்டிருக்கிறேன்” என்று அழக்கூடும், மேலும் அவர்களது முகம் மிகவும் அசிங்கமாக மாறக் கூடும். ஆனால் அவர் அப்படி ஒருபோதும் வெளிப்படுத்த வில்லை. அவர் ஒரு அழகான தாமரை மலரைப் போன்ற முக பாவனையில் இருந்தார். அவர் என்ன செய்கிறார் என்பதை என்னால் அறிய முடிந்தது. என் குருதேவர் உட்பட மற்றவர்களும்

அப்ரகட-லீலையில் (ஶ்ரீகிருஷ்ணரின் நித்திய லீலைகளில்) நுழைவதை நான் பார்த்திருக்கிறேன். நான் பூஜ்ய பாத அனங்க-மோஹன பிரம்மச்சாரி, ஶ்ரீல ஜகன்னாத பாபாஜி மகாராஜா (ஶ்ரீல பக்தி சித்தாந்த பிரபுபாதரின் சீடர்), ஶ்ரீல நரசிம்ம மகாராஜா, மற்றும் ஶ்ரீல பத்மநாப மகாராஜா ஆகியோரைப் பார்த்திருக்கிறேன். அவர்களுடைய நித்ய லீலை புறப்பாட்டின் போது நான் பல பக்தர்களை பார்த்திருக்கிறேன், அதனால் என்ன நடக்கிறது என்பதை என்னால் தீர்மானிக்க முடிந்தது. அவர்கள், “கிருஷ்ண கிருஷ்ணர்” மற்றும் “ராதே ராதே” என்று கூப்பிடுவார்கள். அந்த நேரத்தில் குறிப்பிட்ட அறிகுறிகள் தென்படும். யாரோ அவர்களுக்கு ஶ்ரீகிருஷ்ணரை நினைவுப்படுத்துகிறார்கள் என்பதைக் காட்டுகின்றன. ஶ்ரீல பக்திவேதாந்த சுவாமி மகாராஜா அந்த அடையாளங்களையெல்லாம் வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்.

அவர் மிகவும் அழகாகவும், உன்னதமான நிலையிலும் இருந்தார். உடல் வலியின் அறிகுறியோ, அல்லது வேறு எதன் மீதும் எந்தப் பற்றுதலோ தென்படவில்லை. அவர் தனது இளம் சீடர்களின் மீதும், கிருஷ்ண பக்தி இயக்கத்தில் அவர் ஏற்படுத்திய புற விஷயங்களுக்காக கவலைப்படவில்லை. வேறு எந்த சிந்தனையும் இல்லாமல் - ஶ்ரீகிருஷ்ணரை மட்டுமே மனதில் வைத்திருந்தார்.

எங்கள் கௌடிய பிரம்மசாரிகள் மெதுவாக சில பஜனைகளைப் பாடிக்கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில், அவர் முழுமையாக திருப்தி அடைந்ததைக் கண்டேன். இதனால் நானும் முழுமையாக திருப்தி அடைந்தேன். அவர் நிச்சயமாக விரைவில் புறப்படுவார் என்று எனக்குத் தெரியும், ஆனால் அவர் எப்போது புறப்படுவார் என்பதற்கான எந்த அறிகுறியும் இல்லை; அவர் இப்போது புறப்படுவாரா அல்லது சிறிது நேரத்தில் புறப்படுவாரா என்பது பற்றிய எந்த அறிகுறியும் இல்லை. அவர் முன்பு புற உணர்வில் இருந்தபோது என்னுடன் பேசினார். அப்போது அவர் என்னை அங்கே தங்குமாறு கேட்கவில்லை.

நானும் அவசரப்படவில்லை. ஆனால் நான் மதுராவுக்குச் சென்றவுடன் அவர் நித்ய-லீலைக்குள் நுழைவார் என்று எண்ணிக்கொண்டிருந்தேன். நாங்கள் மதுராவுக்குத் திரும்பப் புறப்பட்டோம். சில மணி நேரம் கழித்து அவர் புறப்பட்டு விட்டதாக எங்களுக்கு செய்தி தெரிவிக்கப்பட்டது. அதற்குப் பிறகு சிறிது நேரத்தில், நாங்கள் ஶ்ரீகிருஷ்ண-பலராம் கோவிலுக்கு திரும்பினோம். அவருடைய மஹோத்சவத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்தோம்.

அவரது விருப்பப்படி, விருந்தாவனத்தின் பெரும்பாலான முக்கிய கோவில்களுக்கும் ஊர்வலமாக அவரை அழைத்துச் சென்றோம்.

அந்த ஊர்வலத்தில் அவரது சீடர்கள் மற்றும் பிற நபர்கள் பலர் கோஷமிட்டுக் கொண்டிருந்தனர். மேலும் விரஜவாசிகள் அனைவரும் அவரைக் கௌரவிக்க தெருக்களில் வந்தனர். அதற்குப் பிறகு, நான் அவரது உடலை சமாதிக்கு தயார் செய்தேன். திலகத்தால் அவரது மார்பிலும் நெற்றியிலும் சிறப்பு மந்திரங்களை எழுதினேன். நான் அவருடைய உடலுக்கு உப்பைப் பயன்படுத்தினேன். பின்னர் அனைத்து முறையான வைஷ்ணவ நடைமுறைகளையும் பின்பற்றி, அவருடைய தெய்வீக உடலை என் சொந்தக் கைகளால் சமாதியில் கிடத்தினேன்.

## *2.4. மாதூர்ய-ரசத்தில்*

பிரேமை இந்த பூத உடலைச் சார்ந்தது அல்ல. பூத உடலைக் கொண்ட ஒருவர் ஸ்வரூப-சித்தி நிலையை அடைய முடியும். இருப்பினும், ரசிக-பக்தர்கள் (கிருஷ்ண லீலைகளில் ஆழ்ந்து அவருடன் பக்தி பரிமாற்றங்களில் லயித்து பரவசத்துடன் இருப்பவர்கள்) பிரேமையைக் கொண்டிருப்பதையும் அவர்களது உடலில் ஒருவித மாற்றங்கள் தோன்றுவதையும் நாம் காண்கிறோம். எனவே, அவர்களின் உடல் இவ்வுலகிலுள்ள பூத உடல் அல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இருந்த போதிலும், இந்த பூத உடலால் பிரேமையை தாங்கிக் கொள்ள முடியாது. பிரிவினையில் பரவசத்தால் தத்தளிக்கும் மனநிலையில், அது பல துண்டுகளாக உடைந்து போகக் கூடும்.

இதைப் புரிந்துகொள்ள, நாம் சாதன பஜனை செய்து தகுதி பெற வேண்டும். ஶ்ரீல சுவாமி மஹாராஜா எப்போதும் அந்த மன நிலையில் இருந்தார். ஆனால் அவர் அதை வெளிப்புறமாக காட்டிக் கொள்ளவில்லை. அவர் அதை தனக்குள்ளேயே மறைத்து வைத்திருந்தார். அவரது பிரச்சாரத்திற்காக, தனது தூய மனநிலைகள் அனைத்தையும் அடக்க வேண்டியிருந்தது. அவரது பிரேமையை தனக்குள்ளேயே வெளிப்படுத்திக் கொண்டிருந்தார், அதனை வெளிப்புறமாக முழுமையாக காட்டிக்கொள்ளவில்லை. இல்லையெனில், எல்லாம் பைத்தியக்காரத்தனமாக மற்றவர்களுக்கு தெரிந்திருக்கும். அதனால் பிரச்சாரமும் தடைப்பெற்றிருக்கும். ஆனால் உதீபனா என்ற தூண்டுதல் எப்போதும் அவரின் உள்ளேயே இருந்தது. அவர் மேற்கு உலகத்தை நோக்கிச் சென்ற போது, அங்கே பிரச்சாரத்தின் போது உத்தீபனத்துடன் செயல்பட்டார். அவர், "நீ உன் உடல் அல்ல" என்று பிரச்சாரம் செய்தார். மேலும் அவர் பகவத் கீதை, ஜகன்னாதர் வழிபாடு போன்றவற்றைப் பிரச்சாரம் செய்தார். இறுதியில் அவர் விருந்தாவன-தாமத்திற்குத் திரும்பி வந்தார். தனது உள்ளுணர்வுகள் அனைத்தையும் ரசித்தார். மேலும் அவர் எப்போதும் ஹரே கிருஷ்ண மகா மந்திரத்தை ஆழமாகக்

கேட்டபடியே ஜபித்துக் கொண்டிருந்தார். அவர் எங்களிடம் கூறினார், “எனது வீடு பிருந்தாவனத்தில் உள்ளது.” ‘வீடு’ என்றால் ஆன்மீக உலகில் அவரது அன்பான உண்மையான வீடு.

ஸ்ரீல சுவாமி மகாராஜா நிச்சயமாக மாதுர்ய-ரசத்தில் இருந்தார். சிலர் அவர் சாக்ய-ரசத்தில் ஏன் கூடாது என்று கேட்கலாம்? இதை நான் மறுக்கவில்லை. ஏனென்றால் எல்லாம் மாதுர்ய-ரசத்தில் அடங்கியுள்ளது. வாத்சல்ய-ரசம், சாக்ய-ரசம் போன்ற மற்ற அனைத்து ரஸங்களும் மாதுர்ய-ரசத்தில் அடங்கியுள்ளன. எனவே அனைத்து ரஸங்களும் அவரிடம் இருந்தன என்று கூறலாம். அவர் சாக்ய-ரசம் இல்லாமலிருந்தவர் அல்ல. அவர் தனது கவிதைகளில் தன் சாக்ய ரசத்தைப் பற்றியும் எழுதியிருந்தார். மேலும் அவர் ஸ்ரீகௌர-நிதாய் மற்றும் ஸ்ரீகிருஷ்ண-பலராமர் மீது சிறப்புப்பான பற்றுதல் கொண்டிருந்தார். ஆனாலும் அவர் நிச்சயமாக மாதுர்ய-ரசத்தில் இருந்தார். ஏனென்றால் அவருடைய சன்னியாச-குரு என் குருதேவர். நமது கௌடிய ரூபானுக வரிசையில் அவருக்கு கோபி-பாவ-மந்திரத்தை அவர் வழங்கினார். ஸ்ரீல ரூப கோஸ்வாமி, ஸ்ரீல ஜீவ கோஸ்வாமி, ஸ்ரீல பக்திவினோத தாக்கூர் மற்றும் அவரது குருதேவர் ஆகியோர் இந்த மாதுர்ய ரசத்தில் இருந்ததைப் போலவே, அவர் அந்த உணர்வுகளில் புத்தகங்களை எழுதி இருக்கிறார். அவரது புத்தகங்களின் நோக்கத்தைப் பார்க்கும்போது அவர் நிச்சயமாக மாதுர்ய-ரசத்தில் இருந்தார் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது.

# 3. அத்தியாயம் 3 - எனது செய்தி அவருடையது

சில நேரங்களில் சிலருக்கு ஸ்ரீல சுவாமி மகாராஜா ஒருபோதும் சொல்லாத சில விஷயங்களை நான் சொல்லுவது போல் தோன்றும். ஒரு விதை நடப்படும் போது, அது இயற்கையாகவே கிளைகளைக் கொண்ட ஒரு மரமாக வளருகிறது. மூல விதையில் இந்த கிளைகள் சேர்க்கப்படாமலா இருக்கிறது? அவை வேறு எங்கிருந்தோவா வருகின்றன? அது ஒரு மரத்தின் இயல்பு என்பதால், அதன் அனைத்து பாகங்களும் இயற்கையாகவே தோன்றிவிடும். அனைத்து இயல்புகளும் அந்த விதைக்குள்ளேயே மறைந்திருக்கிறது. ஸ்ரீல சுவாமி மகாராஜா தனது புத்தகங்களில் எல்லாவற்றையும் எழுதியுள்ளார். நான் புதிதாக எதையும் சொல்லவில்லை. நான் பேசும் அனைத்தும் நேரடியாகவும் பிரத்தியேகமாகவும் நமது ஆச்சாரியர்களின் உண்மையான இலக்கியங்களிலிருந்து வருகின்றன. ஸ்ரீல சுவாமி மகாராஜாவின் சொந்த நோக்கங்களிலிருந்து, அவரது சொந்த வார்த்தைகளின் உதாரணங்களையும் கொடுக்க முயற்சிக்கிறேன்.

அவரது மரம் நிச்சயமாக வளரும். புதிய இலைகள் வளரும், அதே மரம் மேன் மேலும் நிழலைக் கொடுக்கும். அந்த மரத்திற்கு நாம் தண்ணீர் ஊற்றும்போது, ஏராளமான அழகான பூக்களும் பழங்களும் முளைக்கும். அது நிச்சயம். அந்த நீர் ஊற்றும் செயல்முறை ஹரி-கதையைக் கேட்பதும், ஹரி நாம ஜபம் செய்வதும் மற்றும் பகவானின் ரூபம், நாமம், லீலைகளை நினைவில் வைத்துக்கொள்வதும் ஆகும்.

பரம-பூஜ்யபாத ஸ்ரீல சுவாமி மகாராஜா பக்தியின் பல விதைகளை நட்டுள்ளார். சில விதைகள் முளைக்கின்றன. சில வளர்ந்து வருகின்றன. மேலும் சிலவற்றில் இலைகள் உள்ளன - இரண்டு இலைகள், நான்கு இலைகள், ஆறு இலைகள் மற்றும் இன்னும் பல. ஆனால் பல விதைகள் காய்ந்து கொண்டிருக்கின்றன. பல பக்தர்கள் தங்கள் பலத்தையும் நம்பிக்கையையும் இழந்து விடுகின்றனர். சில சந்நியாசிகள் சன்னியாசத்தை விட்டு வெளியேறுகிறார்கள், மேலும் பல நேர்மையான பக்தர்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் சோர்வடைந்துள்ளனர். ஸ்ரீல சுவாமி மகாராஜா நட்ட இந்த கொடிகள் மீது தண்ணீர் தெளிக்க வேண்டும்.

ஒரு வைஷ்ணவர் சரியாக மற்றொருவரைப் போல ஒருபோதும் இருக்கமாட்டார்கள். செயல்பாடுகளின் அனைத்தும் விவரங்களும்

ஒரே மாதிரியாக இருக்காது. சில வித்தியாசங்கள் எப்பொழுதும் இருக்கும். ஸ்ரீ நித்யானந்த பிரபு மற்றும் ஸ்ரீசைதன்ய மகா பிரபு இருவரும் ஒரே மாதிரியானவர்கள் அல்ல. ஸ்ரீல ரூப கோஸ்வாமியும் ஸ்ரீல சனாதன கோஸ்வாமியும் ஒரே வரிசையில் இருந்தாலும், அவர்கள் முழுமையாக ஒரே மாதிரியாக இருப்பதில்லை. மாமரத்தை எடுத்துக்கொண்டால் அந்த மரத்தின் இலைகள் அனைத்தும் ஒரே மாதிரியானவை அல்ல; சில வித்தியாசங்கள் இருக்கின்றன. எனவே நாம் ஸ்ரீசைதன்ய மகா பிரபுவின் குடும்பத்தில் இருக்கிறோம். எனவே நாம் ஒரே மரத்தில் சேர்க்கப்பட்டுள்ளோம். ஒரே உண்மையான சீட பரம்பரை என்ற மரத்தில் நாம் இருப்பதால், நமக்கு இடையே உண்மையான வேறுபாடு இருப்பதாகக் கூற முடியாது.

நான் பல சீடர்களைச் சேகரிப்பதில் ஒருபோதும் ஆர்வம் காட்டவில்லை, மேலும் பல சீடர்களுக்கு தீட்சை கொடுக்கவும் விரும்பவில்லை. நீண்ட காலமாக நான் கௌடிய வேதாந்த சமிதியில் பக்தர்களுக்கு ஒரு சிக்ஷா-குருவாகவே செயல்பட்டு வருகிறேன். அதேபோல், ஆர்வமுள்ள எவருக்கும் சிக்ஷாவை வழங்க விரும்புகிறேன். இப்போது நான் மேற்கத்திய தீட்சை சீடர்களை ஏற்றுக்கொண்டேன். ஆனால் எனது அசல் நோக்கம் சிக்ஷாவின் மூலம் அனைவருக்கும் வலிமை சேர்க்க உதவுவதாகும். பக்தர்கள் அனைத்து உண்மையான வைஷ்ணவர்களின் சிக்ஷையிலிருந்து பயனடைய வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அவர்கள் கிருஷ்ண உணர்வில் மேன் மேலும் முன்னேற வேண்டும். ஒருவருக்கொருவர் மற்றும் பிற வைஷ்ணவர்கள் மீது அன்பும் பாசமும் கொண்டிருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஸ்ரீல சுவாமி மகாராஜாவின் இயக்கம் ஆரோக்கியமாகவும் வலுவானதாகவும் மாறுவதை நான் காண விரும்புகிறேன்.

ஸ்ரீல பக்தி ரக்ஷக ஸ்ரீதர மகாராஜாவும் இதே வழியில் உதவ முயன்றார். ஏனெனில் ஸ்ரீல சுவாமி மகாராஜாவும் அவரைக் கேட்டுக்கொண்டார். அவர் பக்தர்களை அழைக்கவோ அல்லது எந்த தொந்தரவும் ஏற்படுத்தவோ முயற்சிக்கவில்லை. பலர் அவரின்பால் ஈர்க்கப்பட்டு வந்து, ஹரி-கதையைக் கேட்க விரும்பினர். அவர் ஹரி-கதைகளைக் விநியோகித்து வந்தார். மற்ற கௌடிய வைஷ்ணவர்களும் இதையே செய்கிறார்கள். நாம் இங்கே ஹரி-கதையை சொல்லுகிறோம். மேலும் பல பக்தர்கள் இதைப் பெறுவதற்காக வருகிறார்கள். சிக்ஷா-குரு மற்றும் குரு-தத்துவத்தின் கருத்தும் சித்தாந்தமும் இன்னும் பரவலாகப் புரிந்து கொள்ளப்படவில்லை. மற்றும், ஏற்றுக்கொள்ளப்படவில்லை. சிக்ஷா-குரு, தீட்ஷா-குருவுடன் போட்டி போடுவதில்லை. மாறாக பக்தர்களுக்கு அவர்களின் தீட்ஷா குருவுடனான உறவை வலுப்படுத்தவும், அவர்களின் போதனைகளைப் புரிந்துகொண்டு நிறைவேற்றவும் தீட்ஷா-குருவின் முடிவுகளை உணரவும், சிக்ஷா-

குரு அவர்களுக்கு உதவுகிறார். இந்த முறையில் நான் ஸ்ரீல பக்திவேதாந்த சுவாமி மகாராஜாவுக்கு சேவை செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன், ஏனென்றால் அவர் என் சிக்ஷா-குரு மட்டுமல்ல, அவர் என் நெருங்கிய நண்பரும் கூட.

ஸ்ரீல சுவாமி மகாராஜா எனக்குக் கட்டளையிட்டது என்னவென்றால், நான் அவருடைய பக்தர்களுக்கு உதவ வேண்டும் என்பதே. நான் அவரின் கட்டளைக்கு கீழ்படிந்து நடக்கிறேன். இதனால் நான் மற்றவர்களிலிருந்து வேறுப்பட்டு கீழ்படியாமல் போகலாம். எப்படியிருந்தாலும், இந்த முழு உலகமும் என்னை எதிர்த்து ஒரு பக்கம் நின்றாலும், நான் மறுபக்கம் ஸ்ரீல சுவாமி மகாராஜாவுக்கு பணி செய்து சேர்ந்தே இருப்பேன். அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிய முயற்சிப்பேன். ஸ்ரீல ரூப கோஸ்வாமி முதல் ஸ்ரீல பக்திவேதாந்த சுவாமி மகாராஜா வரையிலான நமது அனைத்து ஆச்சாரியர்களின் வழியிலும் தூய பக்தி என்ன என்பதை மட்டுமே நான் கற்பிக்க விரும்புகிறேன். அவர் தனது லீலைகளைச் செய்த அவரது கோயில்களில் நான் வழிபட விரும்புகிறேன். அவரது பாதத் தூசியை எடுத்து, என் மரியாதையைச் செலுத்த விரும்புகிறேன். குறிப்பாக என் கைகளால் செய்யப்பட்ட அவரது சமாதி இடத்தில் வணங்க விரும்புகிறேன். எனக்கு திறந்த இதயமும் திறந்த கரங்களும் உள்ளன. என் கதவு எப்போதும் யாருக்கும் திறந்திருக்கும். என்னிடம் வரும் ஒவ்வொருவருக்கும் ஸ்ரீ ஸ்ரீராதா மற்றும் ஸ்ரீகிருஷ்ணருக்கு சேவை செய்யக்கூடிய ஒரு அழகான கோவிலை அவர்களின் இதயத்தில் நிறுவ உதவுவதே எனது நோக்கம்.

நான் என் தீட்சை குருதேவரின் தாமரைப் பாதங்களிலும், என் சிக்ஷா குரு மற்றும் பிரியபந்து ஸ்ரீல பக்தி வேதாந்த சுவாமி மகாராஜாவின் தாமரைப் பாதங்களிலும் பிரார்த்தனை செய்கிறேன். அவர்கள் உங்கள் அனைவரின் மீதும் என் மீதும் கருணை காட்டட்டும். முதலில் உங்கள் அனைவருக்கும் கருணை காட்டிய பிறகு, கொஞ்சம் மிச்சம் இருந்தால், அதை எனக்கும் கொடுக்கட்டும். அவரது கட்டளைகளை நிறைவேற்றி கிருஷ்ண உணர்வைப் பரப்ப முயற்சிக்கும் அவரது அனைத்து சீடர்கள் மீதும் என் இதயப்பூர்வமான அக்கறை உள்ளது. நமது அன்பான ஸ்ரீல பக்தி வேதாந்த சுவாமி மகாராஜாவின் தாமரைப் பாதங்களுக்கும் அவர்களுக்கு சேவை செய்ய நான் எடுக்கும் முயற்சிக்கும் அனைத்து வைஷ்ணவர்களும் கருணை காட்டுமாறு கேட்டுக் கொள்கிறேன். அவர் எனக்கு சேவை செய்ய வாய்ப்பளித்துள்ளார். நான் அவரது தாமரைப் பாதங்களில் என் மனமார்ந்த புஷ்பாஞ்சலியை சமர்ப்பிக்கிறேன்.

# 4. இறுதி குறிப்புகள்

## *1 ரேஸ் ஆஃப் தி ஹார்மோனிஸ்ட்டில் இருந்து*

Excerpt from Rays of the Harmonist. Vol. 2 No. 1. "The Mission of Srila Bhakti Prajñana Kesava Mahãraja." Translation from the Hindi article in Bhagavata Patrika of February 1998, by Srila Nãrayana Maharaja (pg. 26-27):

இந்த சாதகமற்ற சூழ்நிலையில், 1938-40 -ஆம் ஆண்டில், ஸ்ரீ கிருதி- ரத்ன பிரபு (ஸ்ரீல பக்தி பிரஜ்ஞான கேசவ கோஸ்வாமி பிரம்மச்சாரியாக இருந்த போது அவருக்குக் கொடுத்த இன்னொரு பெயர்) பிரயாகாவில் ஸ்ரீரூப கௌடிய மதா சிலநாட்கள் இருந்தார். அங்கு அவர் ஸ்ரீமத் அபய சரண பக்தி வேதாந்தரை சந்தித்தார். இந்த இரண்டு ஆன்மீக சகோதரர்களும் 1922 முதல் நெருங்கிய நண்பர்களாக இருந்தனர். பிரயாகையில் ஸ்ரீ அபய சரணரின் வணிகம் நிலையற்ற நிலையில் இருந்தது. இதையெல்லாம் மீறி, அவர் இன்னும் பகவத் பக்தியின் செய்தியைப் பிரசங்கிப்பதில் ஆர்வத்துடன் இருந்தார், மேலும் உண்மையில் இந்த இரு ஆன்மீக சகோதரர்களும் பிரயாகை மற்றும் அலகாபாத்தில் சுத்த பக்தியின் செய்தியை மிகவும் உற்சாகமாகப் பிரசங்கித்து வந்தனர்...

1940 ஆம் ஆண்டு இதே காலகட்டத்தில், ஸ்ரீவினோத-பிஹாரி பிரம்மாசாரி மாயாபூரிலிருந்து நவத்வீப நகரத்திற்கு பூஜ்யபாத ஸ்ரீமத் பக்தி ரக்ஷக ஸ்ரீதர மகாராஜா, ஸ்ரீபாத நரஹரி பிரம்மச்சாரி சேவா-விக்ரஹா, ஸ்ரீபாத பிரஜேந்திர பிரபு மற்றும் வேறு சில ஆன்மீக சகோதரர்களுடன் வந்தார். நவத்வீபத்தில் அவர் ஸ்ரீ தேவானந்த கௌடிய மதாவை தெகரிபாடா என்ற இடத்தில் ஒரு வாடகை வீட்டில் நிறுவி அங்கிருந்து சுத்த பக்தியை பிரசாரம் செய்தார்.

ஏப்ரல் 7, 1940 அட்சய திருதியை அன்று பூஜ்யபாத ஸ்ரீ வினோதா-பிஹாரி பிரம்மச்சாரி கிருதி-ரத்னா, வேதாந்த சமிதியை 33/2 போசபாடா லேன், கல்கத்தாவிலிருந்த ஒரு வாடகை வீட்டில் நிறுவினார். அந்த நேரத்தில் பூஜ்யபாத அபய காரணார விந்த பக்திவேதாந்தா, ஸ்ரீந்ருஸிமானந்த பிரம்மச்சாரி, ஸ்ரீபாத கிருஷ்ண-காருண்ய பிரம்மச்சாரி ஸ்ரீபாதா சஜ்ஜன-சேவக பிரம்மச்சாரி (ஸ்ரீல பக்திவேதாந்த வாமன மஹாராஜா) மற்றும் பல வைஷ்ணவர்கள் கலந்து கொண்டனர்.

## 2 "அவர்களின் நீடித்த உறவு" -இலிருந்து

Excerpt from “Their Lasting Relation” - "Letter of Condolence" from Srila Prabhupada to Srila Trivikrama Maharaja. Seattle, October 22, 1968:

ஸ்ரீ கௌடிய வேதாந்த சமிதியுடன் எனக்கு நெருங்கிய தொடர்பு உண்டு. ஸ்ரீ கௌடிய வேதாந்த சமிதியை நிறிவிய மூன்று பேர்களில் நானும் உண்டு என்பதை நீங்கள், குறிப்பாக ஸ்ரீபாத வாமன மஹாராஜா அறிவீர்கள். ஸ்ரீ கௌடிய வேதாந்த சமிதியை நான் ஸ்ரீல பக்தி பிரஜ்ஞான கேசவ கோஸ்வாமி மகாராஜாவிடம் சன்னியாசம் வாங்குவதற்கு முன்னமே, போசபட லேன் என்ற முகவரியில் கல்கத்தாவில் நாமே உண்டு பண்ணினோம்.

## 3 ஸ்ரீல பிரபுபாதாவின் கடிதம்

Excerpt from Srila Prabhupada's Letters from America to Srila Narayana Maharaja. Return address c/o Gopal Agarwal from Butler, Pennsylvania, September 28, 1966:

செப்டம்பர் 20, 1966 தேதியிட்ட உங்கள் கடிதம் எனக்கு சரியான நேரத்தில் கிடைத்தது. நம் உறவு நிச்சயமாக தன்னிச்சையான பரிசுத்தமான அன்பை அடிப்படையாகக் கொண்டது. அதனால்தான் நாம் ஒருவரையொருவர் மறக்க வாய்ப்பில்லை. குரு மற்றும் கௌரங்கரின் கருணையால், எல்லாம் உங்களுக்கு மங்களகரமாக இருக்கட்டும். இது எனது நிலையான பிரார்த்தனை.

நான் உங்களை முதன் முதலில் பார்த்ததிலிருந்தே நான் உங்கள் நிலையான நலம் விரும்பி. என்னை முதன் முதலில் பார்த்தபோதே, ஸ்ரீல பிரபுபாதாவும் என்னை அத்தகைய அன்புடன் பார்த்தார். ஸ்ரீல பிரபுபாதாவை நான் முதன்முதலில் தரிசனம் செய்தபோதுதான், நான் எப்படி நேசிக்க வேண்டும் என்பதைக் கற்றுக்கொண்டேன். என்னைப் போன்ற தகுதியற்ற ஒருவரை தனது சில ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதில் ஈடுபடுத்தியிருப்பது அவரது அளவற்ற கருணை. ஸ்ரீரூப மற்றும் ஸ்ரீரகுநாதரின் செய்தியைப் பிரசங்கிப்பதில் என்னை ஈடுபடுத்தியது அவரது காரணமற்ற கருணை.

## 4 ‘சுவாமிஜி’ என்ற வார்த்தையைப் பற்றிய குறிப்பு:

தெய்வீக அருள் ஸ்ரீல ஏ.சி. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அவரது வாழ்நாள் முழுவதும் பல பெயர்களால் அழைக்கப்பட்டார். அவரது பெற்றோர் அவருக்கு அபய சரண தே என்ற பெயரை சூட்டினர். ஸ்ரீல பக்தி சித்தாந்த சரஸ்வதி தாகுராவால் அவரது தீட்சை பெற்றபோது, அவர் அபய சரணரவிந்த பிரபு ஆனார். பின்னர், 1939 ஆம் ஆண்டில், அவரது கடவுள் சகோதரர்களின் கூட்டத்தால் ஸ்ரீபக்தி வேதாந்தர் என்ற பட்டத்துடன் கௌரவிக்கப்பட்டார். அவரது கிருஹஸ்த ஆண்டுகளில், அவரது நண்பர்கள் பலர் அவரை அபய சரணரவிந்த பிரபு, அபய பாபு பிரபு, அல்லது பிரபு என்று அன்புடன் அழைத்தனர். இந்த குறிப்புகள் லீலாமிருதத்தில் காட்டப்பட்டுள்ளன, மற்றும் ஸ்ரீல நாராயண மகாராஜாவும் அவர்களை நினைவு கூர்ந்தார். 1959-இல் அவரது சந்நியாச விழாவின் போது, ஸ்ரீல பக்தி பிரஜ்ஞான கேசவ கோஸ்வாமி மஹாராஜா அவருக்கு 'ஸ்வாமி' என்ற முறையான பெயரை வழங்கினார்; எனவே அவர் ஸ்ரீல பக்திவேதாந்த ஸ்வாமி மஹாராஜா என்று அறியப்படுகிறார். ‘ஸ்வாமி’ உடன் ‘ஜி’ (சுவாமிஜி) என்பது உண்மையில் சிறப்பு மரியாதை மற்றும் நெருக்கம் ஆகியவற்றின் பதவியாகும். முதலில், பிரபுபாதரின் சீடர்கள் அவரை ஸ்வாமிஜி என்று அழைத்தனர், ஆனால் சாதாரண தீட்சை சீடர்களுக்கு இது பொருத்தமானதல்ல என்பதால், அவரது சீடர்களும் பின்னர் அவரது சீடர்களும் அவரை 'ஸ்ரீல பிரபுபாதர்' (கிருஷ்ணரின் தாமரை பாதங்களின் பிரதிநிதி) என்று அழைத்தனர். கௌடிய மதத்தில் உள்ள பக்தர்கள், ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக, குழப்பத்தைத் தவிர்க்க, ஸ்ரீல பக்தி சித்தாந்த சரஸ்வதி தாகுரரை 'ஸ்ரீல பிரபுபாதர்' என்று அழைப்பதைப் பழக்கமாகக் கொண்டதால், ஸ்ரீல நாராயண மகாராஜா பொதுவாக அவரை அவரது சன்னியாசப் பெயரான ஸ்ரீல பக்திவேதாந்த சுவாமி மகாராஜா என்று அழைப்பார்கள்.

ஸ்ரீல பக்தி வேதாந்த நாராயண மகாராஜா நமது ஸ்ரீல பிரபுபாதரை ஸ்ரீல சுவாமி மகாராஜா என்ற பெயருடன் உச்சரிப்பதை பல மேற்கத்திய பக்தர்கள் கேட்பார்கள். ஸ்ரீல பக்தி வேதாந்த நாராயண மகாராஜா எப்போதும் ஸ்ரீல பிரபுபாதரை அவரது சிக்ஷா-குருவாகப் பார்ப்பதாலும், அவர்கள் நெருங்கிய நண்பர்களாக இருந்ததாலும், அவர் பெரும்பாலும் இந்த பாசமுள்ள பெயரைப் பயன்படுத்துகிறார். சில பக்தர்கள், அவர் எப்போதும் 'பிரபுபாத' என்று சொல்லாமல் போதுமான மரியாதை காட்டவில்லை என்று தவறாகப் புரிந்துகொள்கிறார்கள். ஆனால் உண்மையில் அவர் அவரை மிகவும் மகிமையான ஒளியில் பார்க்கிறார். மற்றவர்கள், அவரது மட்டத்தில் இல்லாதவர்கள், அவரது சொந்த சீடர்கள்

மற்றும் ஸ்ரீல பிரபுபாதரின் சீடர்கள், 'ஸ்வாமிஜி' என்ற வார்த்தையைப் பயன்படுத்தி, பாரம்பரியமான 'சரியான மரியாதைக்குரிய பட்டங்களை' உச்சரிக்காமல் இருந்தால் ஸ்ரீல மகாராஜா அவர்களைத் திருத்துகிறார்.


## *5 ஸ்ரீல பிரபுபாதாவின் அமெரிக்காவிலிருந்து கடிதம்:*

Excerpt from Srila Prabhupada's Letters from America to Srila Narayana Maharaja. Return address c/o Gopal Agarwal from Butler, Pennsylvania, September 28, 1966:

எனது அறை டெல்லியில் பூட்டப்பட்டுள்ளது. நீங்கள் அல்லது உங்கள் விசுவாசமான பிரசங்கிகள் யாராவது டெல்லியில் பிரசங்கிக்க விரும்பினால், எனக்குத் தெரியப்படுத்துங்கள். நீங்கள் டெல்லியில் பணிபுரிய விரும்பினால், அந்த அறையைப் பயன்படுத்தி பிரசங்கிக்கலாம். நீங்கள் தொடர்ந்து டெல்லிக்குச் சென்றால், எனது வெளியீட்டுப் பணிகள் உங்கள் கண்காணிப்பில் கவனிக்கப்படும். நீங்கள் எனக்கு எழுதினீர்கள், “நீங்கள் இந்தியாவில் எந்தப் பிரசங்கப் பணியிலும் என்னை ஈடுபடுத்தலாம். மேலும் எனது திறனுக்கு ஏற்ப நான் எப்போதும் அவ்வாறு செய்யத் தயாராக இருப்பேன்” என்று. எனவே உங்கள் நல்வாழ்த்துக்களால் முழு மனதுடன் நான் பிரசங்க சேவை செய்யலாம்.


## *6 "அவர்களின் நீடித்த உறவு" -இலிருந்து*

பின்குறிப்பு: ஸ்ரீல [பக்தி பிரஜ்ஞான கேசவ கோஸ்வாமி] மகாராஜின் அழகான புகைப்படம் உங்களிடம் இருந்தால், தயவுசெய்து அதை எனக்கு அனுப்புங்கள். நான் அதைக் கொண்டு ஒரு முழு அளவிலான உயிரோட்டமான எண்ணெய் கலந்த வண்ண ஓவியத்தை (oil painting) செய்ய வைப்பேன். மேலும் ஸ்ரீல பிரபுபாதாவின் படத்துடன், அதையும் எனது முக்கிய மையங்களில், குறிப்பாக நியூயார்க், ஹாலிவுட், லண்டன் மற்றும் பல இடங்களில் வைப்பேன்.



மதுரா கேசவாஸ்ஜி கௌடிய மடத்தில் ஶ்ரீ அபய சரணாரவிந்த பிரபு, ஶ்ரீல பக்தி பிரஞ்ஞான கேசவ மகராஜாவிடம் சன்னியாசம் எடுத்து ஶ்ரீல சுவாமி மகராஜா என்ற சன்னியாச பெயரைப் பெற்றார். அந்த சரித்திரத்தின் ஒரு சாட்சியாக இந்த புகைப்படம் விளங்குகிறது.

(இடமிருந்து வலம்: ஶ்ரீல முனி மகராஜா, ஶ்ரீல பக்தி பிரஞ்ஞான கேசவ மகராஜா, ஶ்ரீல சுவாமி மகராஜா)



## நூலாசிரியரைப் பற்றி

ஸ்ரீ ஸ்ரீமத் பக்தி வேதாந்த நாராயண கோஸ்வாமி மஹாராஜா உலக ஜீவன்களின் மேல் கருணை கொண்டு, இந்தியாவில் புனித கங்கை நதியோரமுள்ள தேவாரிபூர் என்ற கிராமத்தில் 1921-ஆம் ஆண்டு தோன்றினார்.

கிருஷ்ண பக்தர்களால் குருதேவர் என்று அன்புடன் அழைக்கப்படும் ஸ்ரீல நாராயண மஹாராஜா, ஸ்ரீகிருஷ்ணரிடமிருந்து தொடங்கி வழிவழியாக வரும் ஸ்ரீபிரம்ம மத்வ கௌடிய பரம்பரையைச் சார்ந்தவர். ஆன்மீகத்தில் மிகவும் உயர்ந்த நிலையை அடைந்து அனைத்து உண்மைகளையும் நேரடியாக உணர்ந்தவர். ஸ்ரீலபக்தி வேதாந்த சுவாமி ஸ்ரீல பிரபுபாதரின் சன்னியாச குருவான ஸ்ரீல பக்தி பிரஞ்ஞான கேசவ கோஸ்வாமி மஹாராஜாவிடம் தீட்சையும் சன்னியாசமும் எடுத்தவர். பின்னர் தன் மிகவும் நெருங்கிய சிட்ச குருவான ஸ்ரீல பக்திவேதாந்த சுவாமி ஸ்ரீல பிரபுபாதருக்கு அவரது வேண்டுதலின்படி சமாதியும் கொடுத்தவர்.

அனைத்து வேதங்கள், உபநிஷத்துக்கள், புராணங்கள் மற்றும் அனைத்து ஆன்மீக சாஸ்திரங்களிலும் மிக நன்றாக தேர்ச்சி பெற்று சுமார் 300 நூல்களையும் வியாக்கியானங்களையும் எழுதியவர். அவை அனைத்தும் ஆங்கிலத்திலும் மற்ற மொழிகளிலும் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன.

உலகெங்கிலும் உள்ள மக்கள் ஜாதி, மத, நிற வேறுபாடு இல்லாமல் ஸ்ரீமத் பக்தி வேதாந்த நாராயண மஹாராஜாவிடம் அடைக்கலம் அடைந்தனர். அவரது சுயநலமற்ற உண்மையான அன்பும், ஆதரவும், உன்னதமான ஆன்மீக சேவையும் இந்த உலகின் அனைத்து மக்களையும் எப்போதும் ஈர்க்கின்றன. ஏராளமான சேவாலயங்களையும் பக்தித் தொண்டு திருவனங்களையும் நடத்தி வந்ததுடன், ஸ்ரீல பிரபுபாதரின் வேண்டுதலால், உலகெங்கும் ராக பக்தியை அளித்தவர். உலகத்தை சுமார் 30 தடவையாவது வலம் வந்து கிருஷ்ண பக்தியை மக்களுக்கு ஊட்டியவர்.